விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 கார்த்திகை 17 ஞாயிற்றுக்கிழமை (03.12.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 349

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214

## போர்க் குற்றச்சாட்டுகளில் ஈடுபட்ட

# படையினருக்கு எதிராக கடும் நடவடிக்கை

### பிரித்தானிய பிரபுகள் சபையின் உறுப்பினர் நேஸ்பி பிரபு

*(லண்டன்)*

*2009ஆம் ஆண்டு இறுதிக்கட்டப் போரின் போது இலங்கைப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றச் சாட்டுகளுக்கு தாம் கடுமையான நடவடிக்கை எடுக்கப் போவதாக பிரித்தானியாவின் பிரபுக்கள் சபையின் உறுப்பினர் நேஸ்பி பிரபு தெரிவித்துள்ளார்.* *(15ஆம் பக்கம் பார்க்க)*



## திருக்கார்த்திகை தீபத்திருநாள் இன்று

(யாழ்ப்பாணம்)

இந்து மக்களால் கடைப்பிடிக்கப்படும் திருக்கார்த்திகைத் தீபத்திருநாள் இன்றையதினம் கொண்டாடப்படவுள்ளது.

இந்து மக்களால் இன்று கொண்டாடப்படும் திருக்கார்த்திகை விளக்கீட்டிற்காக நேற்று சனிக்கிழமை சிட்டி விளக்குகளை மக்கள் மிகவும் ஆர்வத் 15

## 20 கட்சிகளுடன் மகிந்தவின் கூட்டணி

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்காக மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கூட்டு பொதுஜன முன்னணி என்ற பெயரில் புதிய கூட்டணி ஒன்றை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் செயற்படும் கூட்டு 15

## உள்ளூராட்சி மன்ற தேர்தல் பெப்ரவரி 10 இடம்பெறும்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற தேர்தல் எதிர்வரும் பெப்ரவரி 10 ஆம் திகதி நிச்சயமாக இடம்பெறும் என கிராமிய பொருளாதார விவகார அமைச்சர் பீ.ஹெரிசன் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் - ஹொரவப்பொத்தான பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களும் ஒரே தினத்தில் நடைபெறும் எனத் தாம் நம்பிக்கை கொள்வதாக பெப்பரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். 15

## யாழ்.பண்ணையில் அரச ஓய்வு விடுதி

(யாழ்ப்பாணம்)

யாழில் மக்களின் நலன்கருதி பாரிய அரச ஓய்வு விடுதியொன்று அமைப்பதற்கான முன்னேற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் வை.ஏ.ஜி.கே.குணதிலக தெரிவித்துள்ளார். 15

## அமைச்சரவைக்குள் கூட்டமைப்பு!

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆதரவுடன் புதிய அரசாங்கத்தை அமைத்து அமைச்சரவைக்குள் உள்ளீர்க்கும் வகையிலான பல் வேறு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாக தகவல்கள் கசிந்துள்ளன.

நல்லாட்சி அரசாங்கத்தில் ஒரு குழப்பமான சூழல் ஏற்பட் 15

## ஒகி புயலினால் ஏற்பட்ட அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15 ஆக அதிகரிப்பு

### ஓர் இலட்சத்துக்கும் அதிகமானோர் பாதிப்பு

(கொழும்பு)

கடந்த மூன்று நாட்களாக நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15ஆக அதிகரித்துள்ளது.

மேலும் அனர்த்தம் காரணமாக 31 ஆயிரத்து 165 குடும்பத்தினை சேர்ந்த ஓர் இலட்சத்து ஆறாயிரத்துக்கு அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலைய பிரதிப்பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை 61 பேர் காயமடைந்ததுடன் ஒருவர் காணாமல் போயுள்ளார். சீரற்ற காலநிலையால் 694 வீடுகள் முழுமையாகவும் 25 ஆயிரத்து 117 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

பாதிக்கப்பட்டவர்கள் 64 நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள் 15

## வட மாகாணத்தை 5ஆம் திகதி புயல் தாக்கும்

அந்தமான் தீவுப்பகுதியில் உருவாகியுள்ள காற்றழுத்தம் தீவிரமடைந்து வருவதனால் வட பகுதியில் நாளை மறுதினம் 5 ஆம் திகதி புயல் தாக்குமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(விரிவான செய்தி 9ஆம் பக்கம்)

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(புன்னாலைக்கட்டுவன்)

அச்செழு கொலனிப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மேற்படி சம்பவமானது நேற்று சனிக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் அச்செழு கொலனிப் பகுதியில் 15

## கூட்டு எதிரணியுடன் - சுதந்திரக்கட்சி இணைந்து தேர்தலில் போட்டியிடுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது

### மைத்திரியை விமர்சிக்கும் சந்திரிகா

(கொழும்பு)

நாட்டை அபிவிருத்தியின்பால் கொண்டுசெல்ல பல விதிமுறைகளை உள்ளடக்கிய வழிகள் இருக்கும் போது முதுகெலும்புள்ள தலைவர்கள் அதனை செயற்படுத்த தவறமாட்டார்கள் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஜனாதிபதி மைத்திரியை விமர்சித்து கருத்து தெரிவித்துள்ளார்

வியாங்கொட பகுதியில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போதே 15



## சுகவீனம் காரணமாக மாணவன் மரணம்

(கரணவாய்)

திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாக 8 வயது பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று சனிக்கிழமை வல்வெட்டித்துறை ஊரிக்காட்டுப் பகுதியில் இடம்பெற் 15

## அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 20 இந்திய மீனவர்கள் கைது



15

## நாகர்கோவில் கிழக்கு பகுதியில் பட்டப்பகலில் வீடு உடைத்து 35 பவுண் நகை கொள்ளை

(கரணவாய்)

பட்டப்பகல் வேளை வீடு உடைத்து உள் நுழைந்த திருடர்கள் 35 பவுண் தங்க நகையினையும் 35ஆயிரத்து 500 ரூபாய் பணத்தையும் திருடிச் சென்றுள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அரசியல் நடவடிக்கையில் படையினர் தலையிட வேண்டாம்

## இராணுவத் தளபதி கோரிக்கை

(கொழும்பு)

படையினர் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்று இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மஹேஸ் சேனநாயக்க கோரியுள்ளார்.

அண்மையில் வடக்கில் படையினர் மத்தியில் உரையாற்றிய அவர், படையினரின் ஒழுக்கம், அனைத்து மட்டங்களிலும் அவசியம் என்று குறிப்பிட்டுள்ளார்.



அத்துடன் நாட்டுக்கான அர்ப்பணிப்பு அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொதுமக்களுடன் சிறந்த உறவை பேணுவதுடன், நல்லிணக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் செயற்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இராணுவ தளபதியாகிய பின்னர் முல்லைத்தீவுக்கு அவர் முதல் தடவையாக விஜயம் மேற்கொண்டதாக இராணுவ ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.(ம)





உங்களின் வெளிநாட்டு பிரயாணம் சம்பந்தப்பட்ட அனைத்து தேவைகளுக்குமான தீர்வுகள் தற்போது யாழ்ப்பாணத்திலேயே....



மார்கழி 7 முதல் எமது யாழ்ப்பாணக் கிளையின் மூலம் பெற்றுக்கொள்ளக் கூடிய சேவைகள்

- அனைத்து நாடுகளுக்குமான விசா மற்றும் விசா சம்பந்தப்பட்ட ஆலோசனைகள் (Tourist, Business, Family Visit, Settlement and all Other Categories)
- அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயண சீட்டுக்கள் - Air Tickets
- அனைத்து நாடுகளுக்குமான ஹோட்டல் முன்பதிவுகள் - Hotel Reservations
- அனைத்து நாடுகளுக்குமான பிரயாணக் காப்புறுதி - Travel Insurance
- சுற்றுலா வசதிகள் - Tour Packages
- கப்பல் சுற்றுலா வசதிகள் - Cruise Packages

இலங்கையின் முன்னணி அனுபவம் வாய்ந்த நிறுவனங்களில் ஒன்றான Hemas Travels இன் யாழ்ப்பாணக் கிளை எதிர்வரும் 7ஆம் திகதி மார்கழி (07.12.2017) அன்று இல.14, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் திறக்கப் படவுள்ளது.

HEMAS

மேலதிக தொடர்புகளுக்கு
077 438 7521
www.hemastravels.com

(530)



## உடனடி வேலைவாய்ப்பு

**பத்து இலட்சம் தொழில் வழங்கல் கருத் திட்டத்தில் பதிவு செய்துள்ள MNC நிறுவனத்தில் ஆட்சேர்ப்பு ஆரம்பம்**

- தகைமை : O/L and A/L
- பயிற்சி : 180 நாட்கள்
- வருமானம் : 20,000/= தொடக்கம் 55,000/= இற்கு மேல்
- வசதிகள் : உணவு, தங்குமிடம் செய்து தரப்படும்
- வயதெல்லை : 18 - 35 வரை

தொடர்புகளுக்கு : 0766048878, 0772881162, 0771056848

(557)



## நோயாளர் பராமரிப்பு சேவை

உங்கள் வீடுகளுக்கே வந்து நோயாளர்கள், முதியோர்கள் பராமரிக்கப்படுவர்.

அழையுங்கள்: 077 873 0129

(555)



## வீடு விற்பனை

யாழ். சுண்டுக்குளி சுவாட்ஸ் வீதியில் வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0767049048

(556)



# கடைகள் வாடகைக்கு விடப்படும்




மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு எதிர்ப்புறமாக அமைந்துள்ள கட்டிடத் தொகுதியின் மேல்மாடியில் உள்ள சகல வசதிகளுடனும் கூடிய 4 (நான்கு கடைகள்) கடைகள் வாடகைக்கு விடப்படவுள்ளன.

தொடர்புகளுக்கு: Viber No. : +41764646827, Tel. : 0778587664

(சி-576)

## மத்திய வங்கி பிணை முறி மோசடி

# கொள்ளையர்களை தூக்கிலிட வேண்டும்

## பிரதி அமைச்சர் ரஞ்சன் காட்டம்

(கொழும்பு)

**இலங்கை மத்திய வங்கி பிணை முறி மோசடியுடன் தொடர்புடைய கொள்ளையர்களைத் தூக்கிலிட வேண்டுமென பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க காட்டமாகத் தெரிவித்துள்ளார்.**

கொழும்பு பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இவ்வாறு காட்டமாகக் கூறியுள்ளார். இலங்கை மத்திய வங்கி பிணை முறி மோசடிகளில் ஈடுபட்ட நபர்கள் தராதரம் பாராது தண்டிக்கப்பட வேண்டும்.



ஊழல் மோசடி செய்யப்பட்ட பல கோடி ரூபா பணம் மீளவும் அரசாங்கத்திற்கு செலுத்தப்பட வேண்டும். பிணை முறி மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனை விதிக்கப்படும் வரையில் மக்கள் ஆவலுடன் காத்திருக்கின்றார்கள்.

கள்வர்களுக்கு தண்டனை விதிப்பதாகத் தெரிவித்தே நல்லாட்சி அரசாங்கம் ஆட்சி அமைத்தது. நல்லாட்சி அரசாங்கத்திலும் இவ்வாறான மோசடிகள் இடம்பெற்றால் அது பாரதூரமான ஓர் நிலைமையாகும். பிணை முறி மோசடி கொள்ளையர்களுக்கு தண்டனை விதிக்கப்பட வேண்டியது ஜனாதிபதி, பிரதமரின் பொறுப்பாகும் என ரஞ்சன் ராமநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## கடந்தகால ஊழல் குற்றங்களை கண்டறிவதில் அரசு தயக்கம்

### அமைச்சர் சம்பிக்க மீண்டும் விமர்சனம்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் அனைத்தும் ஒரே தினத்தில் இடம் பெறுவது ஆரோக்கியமான விடயமாகும். முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு தவிர்ந்த ஏனைய அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் புதிய முறையில் தேர்தல் நடத்தப்படும் என பாரிய நகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். கடந்தகால ஊழல் குற்றங்களை கண்டறிவதில் இந்த அரசாங்கம் பின்வாங்குவதாகவும் அவர் விமர்சித்துள்ளார்.

பாரிய நகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் அனைத்தும் ஒரே தினத்தில் நடத்தப்பட வேண்டும் என்பதே ஐக்கிய தேசிய முன்னணியின் நிலைப்பாடாகும். எனினும் கடந்த காலங்களில் தேர்தலை நடத்துவதில் சில குழப்பங்கள் ஏற்படுத்தப்பட்ட போதிலும் தற்போது ஒரே தினத்தில் சகல தேர்தல்களையும் நடத்தவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. கட்சி தலைவர்கள் கூட்டத்தில் ஏகமனதாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இது வரவேற்கத்தக்க ஆரோக்கியமான விடயமாகும். புதிய தேர்தல் முறைமை கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் புதிய முறைமையில் தேர்தல் நடத்தப்படும். எனினும் புதுக்குடியிருப்பு மற்றும் முல்லைத்தீவு ஆகிய பிரிவுகளில் யுத்தத்தின் பின்னர் மக்கள் குடியமர்த்தப்பட்டதில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக எல்லை நிர்ணயம் செய்யப்படவில்லை. எனவே இந்த இரண்டு பகுதிக்கும் பழைய முறைமையில் தேர்தல் நடத்தப்படும். ஏனைய சகல பகுதிகளுக்கும் புதிய முறைமையில் தேர்தல் நடத்தப்படும். மேலும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்வது குறித்தும் நாம் பழிவாங்க முயற்சிப்பதாகவும் சிலர் தெரிவிக்கும் கருத்துக்கள் அடிப்படை உண்மை அற்றதாகும். எமக்கு யாரையும் பழிவாங்க வேண்டிய



அவசியம் இல்லை. எனினும் ஊழல், குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்காது இருக்கவும் முடியாது. ராஜபக்ஷ அமைப்பினால் எமது அமைச்சுக்கு 560 இலட்சம் ரூபாய் வழங்க வேண்டும். இவற்றை சட்ட ரீதியில் பெற்றுக்கொள்ள வேண்டும். அதேபோல் கடந்த கால ஊழல்கள், குற்றங்கள் குறித்து அரசாங்கம் விசாரணைகளை முன்னெடுக்கவில்லை. அல்லது விசாரணைகளை முன்னெடுப்பதில் பின்வாங்குவதாக மக்கள் குற்றம் சுமத்தி வருகின்றனர். அதை மறுக்கவும் முடியாது. ஆகவே முன்னைய ஆட்சியாளர் குடும்ப ஆட்சியாளர்கள் செய்த தவறுகள் குறித்து சட்டமுறைப்படி நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதில் நாமும் உறுதியாக உள்ளோம்.

எமது ஆட்சியில் ஊழல்கள் இடம்பெறவில்லை என கூறவில்லை, எனினும் எமது ஆட்சியில் செய்துள்ள ஊழல் குற்றங்கள் குறித்தும் சட்ட முறைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஊழல்களை ஒரே நேரத்தில் தடுத்துவிட முடியாது. எனினும் நாம் ஊழல் இல்லாத ஆட்சியை உருவாக்கும் வகையில் சகல தரப்பினருக்கும் அதிகாரங்களை கொடுத்து ஊடக சுதந்திரத்தை வழங்கி சுயாதீனத்தை ஏற்படுத்தி உண்மைகளை வெளிப்படுத்தக்கூடிய சூழலை உருவாக்கியுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். மகிந்த ஆட்சிக் காலத்தில் அமைச்சராகவிருந்த சம்பிக்க ரணவக்க மைத்திரி ஆட்சிக்காலத்திலும் முக்கிய அமைச்சராகவுள்ளார்.

இருப்பினும் மகிந்த ஆட்சியில் நடந்த ஊழல் மோசடிகள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனத் தொடர்ந்து விமர்சனங்களை முன்வைத்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## உள்ளூராட்சி தேர்தலுக்கு பின்னர் அமைச்சரவையில் மாற்றங்கள்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பின்னர் அமைச்சரவையில் மாற்றங்களை செய்து செயற்படக்கூடிய திறமையானவர்களுக்குப் பதவிகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம் வரவு- செலவுத்திட்டத்தில் அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை அபிவிருத்தித் திட்டங்களுக்கு பயன்படுத்தாமை மற்றும் முன்னேற்றங்களை காண்பிக்காமை ஆகிய காரணங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த அமைச்சரவை மாற்றம் மேற்கொள்ளப்படவுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பின்னர் ஜனாதிபதியும் பிரதமரும் இந்த விடயம் சம்பந்தமாக கலந்துரையாட உள்ளதுடன் அப்போது அமைச்சரவை மாற்றம் குறித்து முடிவு செய்யப்படும்.

இதன் பின்னர் ஜனாதிபதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடனும் பிரதமர் ஐக்கிய தேசியக் கட்சியுடனும் கலந்துரையாடி அமைச்சு பதவிகள் தொடர்பாக தீர்மானிக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசியல் ரீதியாக முன்னோக்கிச் செல்வது தொடர்பாக அரசாங்கத்திற்குள் பல்வேறு விதமான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. (இ)

## ஒகி சூறாவளியால் முறிந்து விழுந்த மரங்களை இரவோடு இரவாக அகற்றிய பிரதியமைச்சர்



(கொழும்பு)

ஒகி சூறாவளி காரணமாக இலங்கையில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தங்கள் காரணமாக இதுவரை 77,481 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

களுத்துறை மாவட்டத்தில் அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அனர்த்தம் காரணமாக களுத்துறையில் 33,977 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் போக்குவரத்திற்கு பாதிப்பு ஏற்படும் வகையில் வீதிகளில் மரங்கள் முறிந்து விழுந்துள்ளன.

எனினும் இரவு-பகல் பாராமல் வீதிகளிலுள்ள மரங்களை அகற்றும் நடவடிக்கைகளில் பிரதி அமைச்சர் பாலித தெவரப்பெரும ஈடுபட்டுள்ளார்.

இதற்கு முன்னர் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் போதும் பிரதி அமைச்சர் மக்களோடு இணைந்து செயற்பட்டிருந்தார்.

அவரின் செயற்பாடு குறித்து சமூக வலைத்தளங்களில் பெரிதும் பேசப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

## மைத்திரி - மகிந்த இணைய வேண்டும்

### முன்னாள் பிரதமர் ஜயரட்ன விருப்பம்



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இணைந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீண்டும் வலுப்படுத்த வேண்டும் என முன்னாள் பிரதமர் தி.மு.ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் அந்த கட்சி பிளவுபடும் நிலையில் இருந்த போதும் தற்போது வரை உடையாமல் பயணித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கண்டி பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். (இ)

# 71 பந்துகளில் சதம் கண்டார் கிராண்ட்ஹோம்

# நியூசிலாந்தின் பிடியில் மேற்கிந்தியத் தீவுகள்



## அடிலெய்ட் டெஸ்ட்

## முதல் நாள் நிறைவில் ஆஸி 4/209

அடிலெய்ட் பகலிரவு, பிங்க பந்து டெஸ்ட் போட்டியில், அவுஸ்திரேலியா முதல் நாள் ஆட்ட நேர நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 209 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

138/2 என்று நல்ல நிலையில் இருந்த அவுஸ்திரேலியா, உஸ்மான் கவாஜா (53) விக்கெட்டை அண்டர்சன் கைப்பற்ற, கிரெய்க் ஓவர்டன், ஸ்மித்தை (40) வீழ்த்த 209/4 என்று முடிந்தது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுபபயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி, அங்கு 5 போட்டிகள் கொண்ட வரலாற்று சிறப்புமிக்க ஆஷஸ டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டியில் வென்ற அவுஸ்திரேலியா 1-0 என்ற கணக்கில் தொடரில் முன்னிலையில் உள்ளது.

இந்நிலையில் இரு அணிகளுக்கு இடையிலான 2ஆவது டெஸ்ட் நேற்று அடிலெய்டில் தொடங்கியது. இது, 135 ஆண்டு கால ஆஷஸ் வரலாற்றில், முதல் முறையாக பகலிரவு போட்டியாக நடக்கிறது. இதில் நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

### மழை தொல்லை

அவுஸ்திரேலிய அணிக்கு வோர்னர், பான்கிராப்ட் ஜோடி ஆரம்பம் வழங்கியது. முதல் இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 24 மற்றும் 33 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது, மழை காரணமாக இருமுறை போட்டி தடைப்பட்டது.

மீண்டும் போட்டி ஆரம்பித்தபோது பான்கிராப்ட் (10 ஓட்.) ஆட்டமிழந்தார். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட வோர்னர், நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இவர், 102 பந்துகளில் 47 ஓட்டங்கள் எடுத்திருந்த போது, வோக்ஸ் 'வேகத்தில்' வெளியேறி, அரைச்சத வாய்ப்பை இழந்தார்.


### கவாஜா ஆறுதல்

வோக்ஸ் ஓவரில் இரண்டு பவுண்டரிகள் அடித்த கவாஜா, 44 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது கொடுத்த பிடியை ஸ்டோன்மேன் நழுவவிட்டார். இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்ட கவாஜா, டெஸ்ட் அரங்கில் தனது 9ஆவது அரைசதம் எட்டினார். பொறுப்பாக ஆடிய இவர், 53 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது, அண்டர்சன் பந்தில் ஆட்டமிழந்தார். அணித் தலைவர் ஸ்ரீவ் ஸ்மித், நிதானமாக ஓட்டங்கள் சேர்த்தார். இவர், 40 ஓட்டங்கள் எடுத்திருந்த போது, கிரெய்க் ஓவர்டன் 'வேகத்தில்' போல்டானார். பின் இணைந்த பீற்றர் ஹேண்ட்ஸ்கோம்ப், ஷோன் மார்ஷ் ஜோடி விக்கெட் சரிவிலிருந்து அணியை மீட்டது.

இந்நிலையில் முதல் நாள் ஆட்டநேரம் நிறைவுக்கு வந்தபோது அவுஸ்திரேலிய அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 209 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஹேண்ட்ஸ்கோம்ப் (36), மார்ஷ் (20) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

### 83.1

ஆஷஸ் தொடர், பிரிஸ்பேன் டெஸ்டில், அவுஸ்திரேலிய அணியின் முதல் இன்னிங்ஸில், கடைசி விக்கெட்டை, இங்கிலாந்தின் ஜோ ரூட் கைப்பற்றினார். இரண்டாவது இன்னிங்ஸில் 50 ஓவர்கள் வீசியபோதும், இங்கிலாந்து வீரர்கள் ஒரு விக்கெட் கூட வீழ்த்தவில்லை. நேற்று தொடங்கிய 2ஆவது டெஸ்டில், 33.1 வது ஓவர்களில், அதாவது 83.1 ஆவது ஓவரில் தான், இங்கிலாந்து வீரர் (வோக்ஸ்) விக்கெட் வீழ்த்தினார்.



வெலிங்டன் டெஸ்ட் போட்டியின் 2ஆம் நாள் ஆட்டத்தில் நியூஸிலாந்து அணியின் சகலதுறை வீரர் டி கிராண்ட்ஹோம் 71 பந்துகளில் அதிரடி சதம் விளாசி அசத்த, நியூஸிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் ஆட்ட நேர முடிவில் 9 விக்கெட்டுக்கள் இழந்து 447 ஓட்டங்கள் எடுத்து வலுவான நிலையில் உள்ளது.

களத்தில் பிளண்டெல் 57, போல்ட் 2 ஓட்டங்களுடன் இருக்க, நியூஸிலாந்து அணி மே.தீவுகளைக் காட்டிலும் 313 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

ஹென்றி நிகோல்ஸ் (67 ஓட்.), றோஸ் ரெய்லர் (93 ஓட்.) அருமையான அடித்தளம் அமைத்துக் கொடுக்க, கொலின் டி கிராண்ட்ஹோம் 74 பந்துகளில் 11 பவுண்டரிகள் 3 சிக்ஸர்களுடன் சதம் (105) விளாசினார்.

இவர் 71 பந்துகளில் எடுத்த சதம் பிரெண்டன் மக்கலம் ஆஸி. பந்துவீச்சை புரட்டி எடுத்து அடித்த அதிவேக சதத்திற்கு அடுத்ததானது.

மேற்கிந்திய தீவுகள் பந்துவீச்சாளர்கள், டி கிராண்ட்ஹோமுக்கு வீசும் பாணி தெரியாமல் திண்டாடினர். ஷோர்ட் பிட்ச் பந்துகளை வீசி பயனளிக்காதபோது, டி கிராண்ட்ஹோமின் கால்களில் வீசினர்,

இதனால் கிராண்ட்ஹோமின் முதல் 8 பவுண்டரிகள் லெக் திசையில் அடிக்கப்பட்டது. தேநீர் இடைவேளைக்குப் பிறகு நியூஸிலாந்து விளாசிய 180 ஓட்டங்களில் இவரது பங்களிப்பே பெரும்பான்மை வகித்தது.

பிளண்டலும் டி கிராண்டஹோமும் இணைந்து 7ஆவது விக்கெட்டுக்காக 148 ஓட்டங்களைச் சேர்த்து அணிக்கு வலுவூட்டினர். பிளண்டெல் உறுதுணையாக ஆடி 100 பந்துகளில் 57 ஓட்டங்கள் எடுத்தார்.

முன்னதாக ரெய்லர், நிகோல்ஸ் ஜோடி 4ஆவது விக்கெட்டுக்காக 127 ஓட்டங்களைச் சேர்த்தது. ரெய்லர் சமீப காலங்களில் மெதுவாக ஓட்டங்கள் எடுக்கிறார் என்ற குற்றச்சாட்டைப் பெற்றிருந்தார், ஆனால் நேற்று துடுப்பாட்டத்துக்கு சற்றே சாதகமான சூழலில் 160 பந்துகளில் 10 பவுண்டரிகளுடன் 93 ஓட்டங்கள் எடுத்து கிமார் ரோச்சின் இன்ஸ்விங்கரை பின்னங்காலில வாங்கி எல்பிடபிள்யூ ஆனார். ரிவியூவில்தான் எல்.பி. தீர்ப்பு பெறப்பட்டது. அதன் போது நியூஸிலாந்து 236/4 என்று ஆனது.

நீல் வோக்னர் போல ஷோர்ட் பிட்ச் ஆயுதம் மேற்கிந்தியத் தீவுகளுக்குக் கை கொடுக்கவில்லை. புதிய பந்தை எடுத்தவுடன் ஜேசன் ஹோல்டர் ஓட்டத் தடுப்பு களவியூகத்துக்குச் சென்றார், இது நியூஸிலாந்துக்கு சாதகமாக அமைந்தது. நிகோல்சும் தனது பாணிக்கு வந்தார்,

ஆனால் உணவு இடைவேளைக்குப் பிறகு ஜேசன் ஹோல்டர் பந்தை புல் செய்யும்போது விக்கெட் காப்பாளரிடம் பிடியானது, ஆனால் அது நோ-பால்.

மே...தீவுகள் பந்துவீச்சில் கட்டுக்கோப்பு இல்லை, நோ போல்கள், லெக் திசை பவுண்டரி பந்துகள் என்று மோசமாக அமைந்தது, இதனால் கொலின் டி கிராண்ட்ஹோம் நியூஸிலாந்து டெஸ்ட வரலாற்றின் இரண்டாவது அதிவேக சதத்தை அடித்தார்.

மேற்கிந்தியத் தீவுகளின் கிமார் ரோச் 3 விக்கெட்டுக்களையும் சேஸ், கமின்ஸ் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

போட்டியின் 3ஆம் நாளாட்டம் இன்றாகும். இப்போட்டி இலங்கை நேரப்படி அதிகாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகிறது.


சேவை நலன் பாராட்டு



**வெற்றிவேலு குமாரகுலசிங்கம்**

எமது வரணி பிரதேசத்தின் உப அஞ்சலகத்தில் 23 வருடங்கள் அஞ்சலராகவும் (Ups 1) சமூக சேவையாளராகவும் சேவையாற்றி இன்று (03.12.2017) ஓய்வுபெற்றுச் செல்லும் வெற்றிவேலு குமாரகுலசிங்கம் அவர்களின் சேவையினை பாராட்டுவதோடு பல்லாண்டு காலம் தேக ஆரோக்கியத்துடன் வாழ வாழ்த்துகின்றோம்.

**உப அஞ்சல் சமூகமும் (வரணி)**
**வரணி வாழ் மக்கள் மற்றும் நண்பர்களும்**

(C575)



கண்ணீர் அஞ்சலி

எமது சனசமூக நிலையத்தின் ஆரம்ப கால உறுப்பினராகிய

**அமரர் சிங்காரவேலு யோகநாதன்**



(உரிமையாளர் - Ogesta Electricals, முன்னாள் உரிமையாளர் - மூர்த்தி உணவகம்)


அவர்கள், 01.12.2017 அன்று சிவபதமடைந்த செய்தி கேட்டு துயர் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வண்ணார்பண்ணை காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாணர் விக்னேஸ்வர பிள்ளையாரை பிரார்த்திக்கின்றோம்.

**கலைவாணி சனசமூக நிலைய சமூகம்,**
**ஓட்டுமடம், வண்ணார்பண்ணை.**

(1552)

# அம்பாந்தோட்டை குத்தகைப் பணம் மூலம் நிரந்தர வைப்புக் கணக்கு ஆரம்பிக்கப்படும்

## பிரதமர் ரணில் தகவல்



(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறை முகத்தை குத்தகைக்கு விடுவதன் மூலம் கிடைக்கும் பணத்திற்காக இலங்கை மத்திய வங்கியின் தனியான நிரந்தர வைப்புக் கணக்கு ஆரம்பிக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அம்பாறை பேருந்து நிலையம் மற்றும் வர்த்தக கட்டடத் தொகுதியை நேற்றுத் திறந்து வைத்த பின்னர் நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றும் போதே பிரதமர் இதனை கூறியுள்ளார்.

தேசிய அரசாங்கத்தை அமைக்க நடவடிக்கை எடுக்காது போயிருந்தால், நாட்டின் கடன் நெருக்கடி உக்கிரமடைந்திருக்கும்.

தேசிய அரசாங்கத்தை அமைத்ததன் ஊடாக நாட்டின் கடன் சுமையை குறைக்க முடிந்துள்ளது எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (இ)

# இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள எல்லை நிர்ணயப் பணிகள்

(கொழும்பு)

மாகாண சபைகள் எல்லை நிர்ணயப்பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக, எல்லை நிர்ணயக்குழு தெரிவித்துள்ளது.

மாகாண சபைகள் எல்லை நிர்ணயம் தொடர்பில் 19 மாவட்டங்களில் பொதுமக்களின் கருத்துகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக அதன் செயலாளர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஏனைய மாவட்டங்களில் மக்கள் கருத்துக்களைப் பெறும் பணிகள் நிறைவடைந்ததன் பின்னர், எதிர்வரும் பெப்ரவரி மாதமளவில், அதன் இறுதி அறிக்கையை துறைசார் அமைச்சரிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு
1934-04-22

உதிர்வு
2017.11.02

காரைநகர் களபூமியை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் பிறவுன்வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர். பொன்னம்பலம் கதிரவேலு

(லலிதா ரெக்ஸ் யாழ்ப்பாணம், நியூ லலிதா ரெக்ஸ் வவுனியா-உரிமையாளர் )

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எல்லா வழிகளிலும் எம்மை நெறிப்படுத்தி 02.11.2017 இல் இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் தொலைபேசி வாயிலாக துயரைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் பத்திரிகைகள் வாயிலாகவும், பதாகைகள் மூலமாகவும், துண்டுப் பிரசுரமாகவும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய வர்த்தகப் பெருமக்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் கடந்த வியாழக்கிழமை காரைநகர் ஆலங்கன்று வைரவர் கோயிலடி அந்தியேட்டி மடத்தில் நடைபெற்றன.

வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று 03.12.2017 ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத் தருணம் தாங்கள் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சி-570)

194/3, பிறவுண் றோட்,
யாழ்ப்பாணம்.

தொ.இல: 021 222 9832

இங்ஙனம்,
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# இராசி பலன்

03.12.2017
(கார்த்திகை 17, ஞாயிறு)
சூரிய உதயம் காலை 6.15 மணிக்கு
பூரணை முன்னிரவு 10.31 மணிக்கு
கார்த்திகை முற்பகல் 10.05 மணிவரை
சுபநேரம் 9.45-10.45 மணிவரை
இராகுகாலம் 4.45-6.15 மணிவரை
பூரணை விரதம் , சர்வாலய தீபம்,
வீடுகளில் தீபம் **வளவன்**

| | | | |
|---|---|---|---|
| | | சந் | |
| · | கிரகநிலை சந்திராஷ்டமம் விசாகம் | | ராகு |
| கேது | | | |
| | சனி | சூரி குரு | செவ் |

**மீனம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பொது நல ஈடுபாட்டால் புகழ் கிடைக்கும், நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம்,

**மேடம்** குடும்பத்தினர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வாய்ப்புண்டு, யோகமான நாள், சுப தகவல்கள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**இடபம்** தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், திட்டமிட்ட காரிய மொன்றில் திருப்பங்கள் ஏற்படும்.

**மிதுனம்** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், புதிய நட்பால் பொருள் விரயங்கள் ஏற்படலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், மதிப்பும் மரியாதையும் உயரும், பயணங்களால் பலனுண்டு, மனதில் தோன்றுவதை செய்வீர்கள்.

**கடகம்** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் குதூகலம் இடம் பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மகரம்** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பிள்ளைகளால் பெருமைகள் .வந்து சேரலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்** வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், கௌரவமான நாள்.

**தனுசு** இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்குபடுத்த முற்படுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.

**விருச்சிகம்** பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு, களஸ்திர நன்மையுண்டு.

**துலாம்** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, முயற்சிகளில் சிறு தாமதங்கள் ஏற்படலாம்.

**கன்னி** தொழிலில் இருந்த மறைமுக எதிர்ப்புகள் மாறும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, கனிவாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

# 'அவளைத் தேர்ந்தெடுப்போம் வன்முறையை ஒழிப்போம்' யாழ்ப்பாணத்தில் நேற்று கையெழுத்து விழிப்புணர்வு


(படங்கள்:உ.சாளின்)

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பெண்களுக்கான அரசியல் பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தி "அவளை தேர்ந்தெடுப்போம் வன்முறையை ஒழிப்போம்" எனும் தொனிப்பொருளில் கையெழுத்து விழிப்புணர்வு ஒன்று நேற்றைய தினம் நடைபெற்றது.

இலங்கையில் பால் நிலை அடிப்படையிலான தேசிய குழுமமும் யாழ்.சமூக செயற்பாட்டு மையமும் இணைந்து மேற்கொண்டிருந்த இவ் விழிப்புணர்வு செயற்றிட்டமானது யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் இடம்பெற்றது. இவ் வேலைத்திட்டத்தில் பங்கு பற்றியிருந்த யாழ்.மாவட்ட பிரதித் தேர்தல் ஆணையாளர் அகிலன் கருத்து தெரிவிக்கையில்,

நாட்டில்காணப்படும் பெண்களின் எண்ணிக்கைக்கு அரசியலில் பெண்களின் பிரதிநிதிகள் குறைவாகவே உள்ளனர். குறிப்பாக நாட்டில் 52% பெண்களில் பாராளுமன்றத்தில் 5% வீதமே உள்ளார்கள்.

இவ்வாறு தீர்மானம் எடுக்கும் பொறுப்புக்களில் பெண்கள் குறைவாகவே உள்ளார்கள்.

மேலும் பெண்கள் அரசியலுக்குள் வருவதற்கு முயற்சிக்கும் போது அவர்கள் மீது அவதூறு பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதன் காரணமாக அவர்கள் அரசியலுக்குள் வருவதற்கும் பின்னிக்கின்றனர் எனத் தெரிவித்தார்.

மேலும் இந் நிகழ்வில் பெண்கள் மீதான வன்முறையை இல்லாமல் செய்ய வேண்டும் என்ற தொனிப்பொருளில் உறுதி மொழியும் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

மேலும் இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட பெண்கள் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் கௌதமன், பால் நிலை சார் மற்றும் ஊடக நிலை வளவாளர் கிருத்திகா மற்றும் மதினிநெல்சன் ஆகியோர் கலந்துகொண்டனர். (இ-4)

# எங்களையும் மக்களையும் அந்நியப்படுத்த அரசு சதி

## வடமாகாண அமைச்சர் அனந்தி சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையைப் புறக்கணித்து மத்திய அரசு நேரடியாக உதவிகளைச் செய்துவருகின்றது. தேசிய நல்லிணக்கத்திற்கும் ஒருமைப்பாட்டிற்குமான அமைச்சு மற்றும் புனர்வாழ்வு அமைச்சு ஊடாக மத்திய அரசு உதவித்திட்டங்களை வழங்கி வருவதானது எங்களையும் மக்களையும் அந்நியப்படுத்தும் முயற்சியாகும் என மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் சுட்டிக் காட்டியுள்ளார்.

வடமாகாண சபையின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரனால் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 19 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு 9.5 இலட்சம் பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. மருதங்கேணி பிரதேச செயலக வளாகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மருதங் கேணி பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்பங்கேற்று பெண் தலைமைத்துவ குடும்பங்க ளுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்கி வைத்தார். இதன்போது அவர்மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்திற்குட்பட்டு மாவட்ட ரீதியாக மகளிர் விவகார அமைச்சின் கீழான வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம். அதற்கு மருதங்கேணி பிரதேச செயலரின் ஒத்துழைப்பு உண்மையில் குறிப்பிட்டுச் சொல்லும் வகையில் அமைந்துள்ளது.

தன்னுடைய பிரதேசம் சார்ந்து கூடுதலான அக்கறையையும் கவனத்தையும் கொண்டுள்ள காரணத்தால்தான் இவ் உதவித்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடிந்துள்ளது. வடமாகாணத்தில் வேறு எங்கும் இங்கு செய்வதைப் போன்று குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தை அண்டி உதவிகள் வழங்கியதில்லை.


பிரதேச செயலாளர்களுக்குதான் கிராமமட்ட கட்டமைப்பும் தொடர்பாடலும் இருக்கின்றது. அவர்களது ஒத்துழைப்பும் ஆதரவும் இருந்தால்தான் மக்களுக்கு தேவையானஉதவிகளைச் செய்யமுடியும். வடக்கு மாகாணத்தைப் புறக்கணித்து மத்திய அரசு நேரடியாக உதவிகளை செய்து வருகின்றது.

தேசிய நல்லிணக்கத்திற்கும் ஒருமைப்பாட்டிற்குமான அமைச்சு மற்றும் புனர்வாழ்வு அமைச்சு ஊடாக மத்திய அரசு உதவி த்திட்டங்களைவழங்கிவருவதானது எங்களையும் மக்களையும் அந்நியப்படுத்தும் முயற்சியாகும்.

அவ்வாறு வழங்கப்படும் உதவிகள் சரியான முறையில் மக்களுக்கு கிடைத்தால்கூட பரவாயில்லை. மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் செயற்பட்டுவரும் நிர்வாகக் கட்டமைப்புகளின் ஊடாக அவ்வாறு மேற்கொள்ளப்படும் உதவிகள் உண்மையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு கிடைப்பதில்லை என்பதனை எமக்கு கிடைக்கும் முறைப்பாடுகள் மூலம் அறிய முடிகின்றது. தமது தேசிய கட்சிகளின் அரசியல் இலாபத்திற்காகவே இவ்வாறான நடிவடிக்கைகளை மத்திய அரசு மேற் கொண்டு வருவதாக அமைச்சர் மேலும் தெரிவித் தார். (இ-4)




# பயிரழிப்பு தொடர்கிறது



(யாழ்ப்பாணம்)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் தென்மராட்சி மந்துவில் பகுதியிலுள்ள நெற் பயிர்கள் மடிச்சுக்கட்டி மற்றும் எரிநோய் தாக்கங்களுக்குள்ளாகி அழிவடைந்து வருவதாக விவசாயிகள் கவலைவெளியிட்டுள்ளனர்.

கடந்த சிலநாட்களாக குடாநாட்டில் பெய்த கடும் மழையால்வயல்நிலங்களில்வெள்ள நீர் தேங்கி நின்று அதிகளவான நெற் பயிர்கள் அழிவடைந்த நிலையில் தற்போது நெற் பயிர்களில் தொற்று நோய்த் தாக்கம் ஏற்பட்டு அழிவடைந்து வருவதால் பெருந்தொகையான முதலீட்டில் இந்த வருடம் செய்த பெரும்போக நெற்செய்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற் கொண்டு வெள்ள நிவராணத்தை விரைவில் பெற்றுத்தர உரிய நடவடிக்கையெடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-10)

# சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் வடமராட்சி வலயக்கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் சி. நந்தகுமார் தலைமையில் இடம்பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர் சி.அகிலதாசஸ் கலந்து கொள்வார். (இ-10)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை


(யாழ்ப்பாணம்)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சாங்கத்தின் ஏற்பாட்டில் இன்று முழுக் கிராமத்திற்குமான டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அந்த வகையில் கிராமத்தவர்கள் அனைவரும் தங்கள் வீடுகள் தோறும் உள்ள டெங்கு நுளம்புபெருகஏதுவான பொருட்களை சேகரித்து பொதி செய்து வைக்குமாறு அறிவிக்கப்பட்டிருப்பதுடன் அவற்றை வீடுகளில் சென்று சேகரித்து உரிய முறையில் அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் சங்க உறுப்பினர்கள் ஈடுபடவுள்ளனர். இந்த செயற்றிட்டத்திற்கு இளவாலை பொலிஸார். வலி.வடக்கு பிரதேச ச்பையினர் மற்றும் இளவாலை ஜே/ 155 இளைஞர் கழகத்தினர்.டொன் பொஸ்கோ இளைஞர்கழகத்தினர் இணைந்து செயற்படவுள்ளனர் (இ-104)



யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தின் 37 ஆவது அணியினரின் கலையாழி மாதாந்தப் பத்திரிகை வெளியீடு கடந்த 29 ஆம் திகதி யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் மூன்றாம் வருட மாணவர் பிரதிநிதி ம. புதியஜோதி தலைமையில் நடை பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்: பல்கலைக் கழக துணை வேந்தர் பேராசிரியர் இ. விக்னேஸ்வரன் கலந்து கொண டார். (படங்கள்:- கட்டுடை செய்தியாளர்)


இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சில்லாலை பொதுமக்களுக்கான பொலிஸ் நடமாடும் சேவை சில்லாலை கிராம உத்தியோகத்தர் பணிமனையில் இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.சேனநாயக்க தலைமையில் இடம் பெற்றது. (படங்கள்:-இளவாலை செய்தியாளர்)







தியாகி அறக்கொடை நிறுவனத்தில் 02.12.2017 நேற்று நடைபெற்ற அறப்பணி நிகழ்வுகளின் போது பெருமளவிலான மக்கள் கலந்து கொண்டனர். இந் நிகழ்வின் போது ரூ.50 இலட்சத்திற்கு அறப்பணி தொடர்பான பொருட்கள் வழங்கப்பட்டன.




# பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி.

## தவயோகநாதன் றித்திக்கா

2017 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில்
177 புள்ளிகளைப் பெற்ற
தவயோகநாதன் றித்திக்கா அவர்களை
10வது பிறந்த நாளாகிய இன்று
பாராட்டி வாழ்த்துகின்றோம். இத்தோடு
கல்வி கற்பித்த யா/அல்வாய் ஸ்ரீலங்கா
வித்தியாசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும்
வியாபாரி மூலை வசந்தம் கல்விச் சேவை
ஆசிரியர்கள் யாவர்க்கும் பலநூறு
நன்றிகளையும்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

Congratulations

பூம்புகார், வியாபாரி மூலை,
பருத்தித்துறை.

C-572

தாத்தா, அப்பா-அம்மா, அக்கா-அத்தான்,
அண்ணாமார், அண்ணிமார்.


# யானைக் கூட்டணி சாத்தியமா? இன்று இறுதி முடிவு

ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைத்து உள்ளூராட்சி சபைத் தேர்தலில் களமிறங்கவுள்ள பங்காளிக்கட்சிகளுக்கான இடஒதுக்கீடு குறித்து இன்று ஞாயிற்றுக்கிழமை இறுதி முடிவெடுக்கப் படவுள்ளது.

2018 ஜனவரி இறுதியில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை எதிர்கொள்வதற்காக அரசியல் கட்சிகள் முழு வீச்சுடன் செயற்பட்டு வருகின்றன. ஒருசில கட்சிகள் கட்டுப்பணத்தைக் கூட செலுத்தி விட்டன. எனினும், குட்டித் தேர்தலில் கூட்டணி அமைத்து ஐக்கிய தேசியக் கட்சியின் யானை சின்னத்தின் கீழ் களமிறங்கவுள்ள கட்சிகளுக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையே இட ஒதுக்கீட்டு விவகாரத்தில் தொடர்ந்தும் இழுபறி இருந்து வருகின்றது குறிப்பிடத்தக்கது. (இ-7)


## கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கம் அவர்களின் 53வது நினைவு தினம்

கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கம் அவர்களின்
53வது நினைவு தின நிகழ்வு

05.12.2017 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு
அன்னாரின் நினைவு மண்டபமான கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில்
சபைத் தலைவர் திரு. தி.சுந்தரலிங்கம் அவர்களின்
தலைமையில் நடைபெறும்.
இந்நிகழ்வில் நினைவுப் பேருரையை
மனவளக்கலை பேராசிரியர் திருமதி. இந்திரா சண்முகசுந்தரம் (தமிழ்நாடு)
அவர்கள் நிகழ்த்தவுள்ளார்.
அத்துடன் நீண்டகாலம் கூட்டுறவுப் பணி செய்த
கூட்டுறவாளர்களும் கௌரவிக்கப்படவுள்ளார்கள். அனைத்து
கூட்டுறவாளர்களையும் ஆர்வலர்களையும் பங்குபற்றி
சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். (சி-581)

யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச்சபை, இல.12, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.



## யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

எம்முடன் பேசுங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்
104, 4 ம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை*
**021 222 8117, 077 900 8776**
*வவுனியாவில்: (024) 324 4444*
*(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)*



## வைத்தியம்

நோய் எதுவாயினும் தீர்வு உண்டு. தலைமுடி உதிர்தல், முள்ளந்தண்டுப் பிரச்சினை, பாரிசவாதம், சலரோகம், உடற்பருமன் குறைத்தல் (வயிறு/ மார்புகை) அல்லது கூட்டுதல், ஆண்மைக் குறைபாடுகள், குழந்தை யின்மை போன்றவற்றிற்கு மருந்தின்றி பக்கவிளை வின்றி அக்குபன்சர் சிகிச்சை வழங்கப்படும்.

தொடர்பு: (ACU)Dr.Sanker
T.P: 077 035 7307



## திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபை

தொண்டர் நாள்தோறும் துதி செயவருள்செய் கேதீச்சரமதுதானே

அருள்மிகு கௌரி அம்பாள் இணை திருக்கேதீச்சரநாதர் திருக்கோயில்

அருள்மிகு கௌரி அம்பாள் இணை திருக்கேதீச்சரநாதர்
திருக்கோயிலில் கருங்கல்லால் அமையப்படவிருக்கும்
**"பிரதான மூலவர் கர்ப்பக்கிரக விமான கருங்கல் சேர்மானப்
பணி ஆரம்ப விஞ்ஞாபனம்"**
நிகழும் மங்களகரமான ஏவிளம்பி வருடம் கார்த்திகை திங்கள் 21ம் நாள்
(06.12.2017) புதன்கிழமை
புனர்பூச நட்சத்திரமும் திருதியைத் திதியும்
சித்தயோகமும் பவகரணமும் கூடிய காலை 9.00 மணி முதல்
10.30 மணிவரையுள்ள மகரலக்கின சுபமுகூர்த்தத்தில்
இறையருளுடன் பூசைவழிபாட்டைத் தொடர்ந்து ஆரம்பமாகி நடைபெறும்.
அடியார் பெருமக்களை இந்நிகழ்வில் கலந்து எம் பெருமான் அருளை
பெறுமாறும் இத் திருப்பணிக்கு
நன்கொடை தரவிரும்பும் அடியார்களைத் தாராளமாகத்
தந்துதவுமாறும் திருப்பணிச்சபை சார்பில் வேண்டுகிறோம்.

புலவர்.அ.திருநாவுக்கரசு,
செ.இராகவன்
இணைச் செயலாளர்கள்.

(சி-563)

சரஸ்வதி மண்டபம், 75, லோறன்ஸ் வீதி, கொழும்பு-04.
தொலைபேசி: 023 205 0800, 023 323 0034, 011 258 5975
"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம் உத்தரம்
கி.பா: 40
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: பட்டதாரி/வங்கியாளர்
தொ.இ: B/7265

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 14 செவ் 7 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: பட்டதாரி/தனியார் தொழில்
தொ.இ: B/7268

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: சுவாதி
செவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L/சொந்ததொழில்
தொ.இ: B/7270

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
செவ் 8 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BA/அரசதொழில்
தொ.இ: B/7271

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 16
உயரம்: 5'6"
தகைமை/தொழில் LLB/தனியார் தொழில்
தொ.இ: G/5399

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 56 செவ் 12 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: கணக்காளர்
தொ.இ: G/3905

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 36 செவ் 4 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: G/3908

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 22
உயரம்: 160cm
தகைமை/தொழில்: A/L/கனடா PRஎதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/3914

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

### கூட்டு எதிரணி பலமாக செயற்படுவதால் தயக்கம்

# தாமதித்தாவது பொறுப்புக் கூறலை நல்லாட்சி அரசாங்கம் முன்னெடுக்கும்



## ஜெஹான் பெரேரா நம்பிக்கை

(கொழும்பு)

**நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் செயற்பாட்டை நல்லாட்சி அரசாங்கம் தாமதித்தாலும் அதனை முன்னெடுக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இன்னும் இருக்கின்றது. கூட்டு எதிரணி மிகவும் பலமாகச் செயற்படுகின்றமை காரணமாக அரசாங்கம் இந்த விடயத்தில் தயக்கத்தை காட்டுகின்றது என்று தேசிய சமாதான பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா தெரிவித்தார்.**

காணாமல் போனோர் குறித்து ஆராயும் அலுவலகத்துக்கான ஆணையாளர்களை நியமிக்கும் சாத்தியம் இருந்தும் அதனை அரசாங்கம் தாமதிக்கின்றது. பெரும்பாலும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முடிவடைந்ததும் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் நம்புகின்றேன் என்றும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கம்நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் செயற்பாட்டை தாமதிக்காமல் விரைந்து முன்னெடுக்க வேண்டும் என்று சர்வதேசம் தெரிவித்து வருகின்றமை தொடர்பில் விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

நல்லாட்சி அரசாங்கம் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் செயற்பாட்டை வாக்குறுதியளித்தபடி முன்னெடுக்கும் என்று எனக்கு நம்பிக்கை உள்ளது. அதாவது இந்த செயற்பாடுகள் தாமதம் அடைந்தாலும் முன்னெடுக்கப்படும் என்ற நம்பிக்கை வலுவாகவே உள்ளது.

அதாவது நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் செயற்பாடு தொடர்பில் புரிந்துகொண்டுள்ள அரசாங்கத்தின் தலைமையே தற்போது பதவியிலுள்ளது. நல்லிணக்கம் எந்தளவு தூரம் முக்கியத்துவம் மிக்கது என்பதனை இந்த அரசாங்கம் புரிந்து கொண்டுள்ளது.

ஆனால் கூட்டு எதிரணி மிகவும் பலமான முறையில் செயற்படுவதன் காரணமாக அரசாங்கத்தினால் இந்த செயற்பாடுகளை சரியான முறையில் முன்னெடுக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. காணாமல் போனோர் குறித்து ஆராயும் அலுவலகத்துக்கான ஆணையாளர்களை நியமிக்கும் சாத்தியம் இருந்தும் அதனை அரசாங்கம் தாமதிக்கின்றது.

அத்துடன் உண்மையை கண்டறியும் ஆணைக்குழு மற்றும் நட்டஈடு வழங்கும் அலுவலகம் என்பனவற்றை அமைப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ள போதிலும் அவற்றை சட்டமாக்குவதற்கு அரசாங்கம் தயங்குகின்றது.

காரணம் தற்போது உள்ளூராட்சிமன்றத் தேர்தலும் நடைபெற விருப்பதால் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் விடயங்களை அரசாங்கம் மேலும் தாமதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. காரணம் தற்போதைய சூழலில் காணாமல் போனோர் அலுவலகத்துக்கு ஆணையாளர்களை நியமித்தால் எதிர்க்கட்சிகள் அதனை வேறுவிதமாக தேர்தல் காலத்தில் பிரசாரம் செய்ய ஆரம்பித்து விடும்.

எனவே அரசாங்கத்துக்கு இந்த சூழலில் காணப்படுகின்ற சவால்களையும் நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நல்லிணக்கத்தையும் பொறுப்புக்கூறலையும் முன்னெடுக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு காணப்பட்டாலும் எதிர்க்கட்சிகள் அதனை மக்கள் மத்தியில் வேறு விதமாக பிரசாரம் செய்துவிடும் என்ற அச்சமுள்ளது. குறிப்பாக தேர்தல் காலத்தில் குழப்பம் ஏற்பட்டுவிடும் என்று அரசாங்கம் கருதலாம்.

ஆனால் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை முன்னெடுக்க வேண்டும் ஏன்ற தேவையும் அரசாங்கத்துக்குள்ளது. எனவே தாமதித்தாவது இந்தச் செயற்பாட்டை அரசாங்கம் முன்னெடுக்கும் என்று நம்புகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)




- 1592 - "எட்வேர்ட் பொனவென்ச்சர்" என்ற ஆங்கிலக் கப்பல் இலங்கைத் தீவின் காலியை வந்தடைந்தது.
- 1795 - ஜோன் ஜார்விஸ் யாழ்ப்பாணத்தின் ஆட்சியாளராக (Collector) நியமிக்கப்பட்டார்.
- 1800 - மியூனிக்கு அருகில் ஒகன்லின்டன் என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் பிரெஞ்சுப் படைகள் ஆஸ்திரியாவைத் தோற்கடித்தனர்.
- 1818 - இலினோய் ஐக்கிய அமெரிக்காவின் 21வது மாநிலமானது.
- 1903 - சேர் ஹென்றி பிளேக் ஆளுநராக நியமனம் பெற்று இலங்கை வந்து சேர்ந்தார்.
- 1904 - வியாழனின் ஹிமாலியா என்ற சந்திரன் சார்ல்ஸ் டில்லன் பெரின் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1912 - பால்கன் போரை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் பல்கேரியா, கிரேக்க நாடு, மொண்டெனேகிரோ மற்றும் சேர்பியா ஆகியன துருக்கியுடன் போர் நிறுத்த உடன்பாடு கண்டன.
- 1917 - 20 ஆண்டுகள் கட்டுமானப் பணியின் பின்னர் கியூபெக் பாலம் திறக்கப்பட்டது.
- 1944 - கிறீசில் கம்யூனிஸ்டுக்களுக்கும் அரச படைக்கும் இடையில் உள்நாட்டுப் போர் வெடித்தது.
- 1967 - தென்னாபிரிக்காவின் கேப் டவுனில் கிறிஸ்டியன் பார்னார்ட் தலைமையில் உலகின் முதலாவது இருதய மாற்றுச் சிகிச்சை 53 வயது லூயிஸ் வாஷ்கான்ஸ்கி என்பவர் மீது வெற்றிகரமாக நடத்தப்பட்டது.
- 1971 - இந்திய-பாகிஸ்தான் போர், 1971: இந்தியா கிழக்கு பாகிஸ்தானை முற்றுகையிட்டது. முழுமையான போர் ஆரம்பித்தது.
- 1978 - வேர்ஜீனியாவில் பயணிகள் தொடரூந்து ஒன்று தடம் புரண்டதில் 6 பேர் கொல்லப்பட்டு 60 பேர் காயமடைந்தனர்.
- 1984 - இந்திய நகரான போபாலில் யூனியன் கார்பைட் நிறுவனத்தில் இடம்பெற்ற நச்சு வாயுக் கசிவில் 3,800 பொதுமக்கள் உடனடியாகக் கொல்லப்பட்டனர். 150,000-600,000 பேர் வரையில் காயமடைந்தனர். (இவர்களில் 6,000 பேர் வரையில் பின்னர் இறந்தனர்). உலகில் இடம்பெற்ற மிக மோசமான தொழிற்சாலை விபத்து இதுவாகும்.
- 2007 - இலங்கைத் துடுப்பாட்ட அணியின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தேர்வுத் துடுப்பாட்டத்தில் 709 இலக்குகளை வீழ்த்தி புதிய உலக சாதனை படைத்தார்.

பிறப்புகள்

- 1753 - சாமுவேல் கிராம்டன், ஆங்கிலேயக் கண்டுபிடிப்பாளர், நெசவுத் துறையின் முன்னோடி (இ. 1827)
- 1795 - ரோலண்ட் ஹில், நவீன அஞ்சல் சேவையைக் கண்டுபிடித்த ஆங்கிலேயர் (இ. 1879)
- 1833 - கார்லோஸ் பின்லே, கியூபா மருத்துவர் (இ. 1915)
- 1857 - ஜோசப் கொன்ராட், போலந்து-ஆங்கிலேய எழுத்தாளர், போர்வீரர் (இ. 1924)
- 1860 - நா. கதிரவேற்பிள்ளை, ஈழத்துத் தமிழறிஞர் (இ. 1907)
- 1884 - இராசேந்திர பிரசாத், இந்தியாவின் 1வது குடியரசுத் தலைவர் (இ. 1963)
- 1886 -மன்னே சீகுபான், நோபல் பரிசு பெற்ற சுவீடிய இயற்பியலாளர் (இ. 1978)
- 1889 - குதிராம் போஸ், வங்காளப் புரட்சியாளர் (இ. 1908)
- 1900 - ரிச்சர்ட் குன், நோபல் பரிசு பெற்ற ஆஸ்திரிய-செருமன் வேதியியலாளர் (இ. 1967)
- 1925 -கிம் டாய் ஜூங், அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற தென்கொரிய அரசுத்தலைவர் (இ. 2009)
- 1928 - மகாராஜபுரம் சந்தானம், கர்நாடக இசைப் பாடகர் (இ. 1992)
- 1960 - ஜூலியானா மூரே, அமெரிக்க நடிகை, எழுத்தாளர்

இறப்புகள்

- 1154 - நான்காம் அனஸ்தாசியுஸ் (திருத்தந்தை) (பி. 1073)
- 1552 - பிரான்சிஸ் சவேரியார், எசுப்பானிய மதப்பரப்புநர் , புனிதர் (பி. 1506)
- 1882 - ஜேம்ஸ் சால்லிஸ், ஆங்கிலேய வானியலாளர் (பி. 1803)
- 1894 - ஆர். எல். இசுட்டீவன்சன், இசுக்கொட்டிய எழுத்தாளர் (பி. 1850)
- 2011 - தேவ் ஆனந்த், இந்திய நடிகர், இயக்குநர் (பி. 1923)

சிறப்பு நாள்

- பன்னாட்டு மாற்றுத்திறனாளிகள் நாள்

### இந்திய - இலங்கை

## கடற்படையினருக்கிடையில் ஜனவரியில் பேச்சுவார்த்தை



(டில்லி)

இந்திய - இலங்கை கடற்படையிருக்கிடையில் அடுத்த மாதம் பேச்சுவார்த்தை நடைபெறவிருப்பதாக இந்திய கிழக்கு பிராந்தியக் கடற்படையின் ரியர் அட்மிரல் அலோக் பட்நாகர் தெரிவித்துள்ளார்.

கடல் எல்லைப் பகுதியில் தமிழக மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் இந்தப் பேச்சுவார்த்தை நடைபெறவிருப்பதாக அவர் தெரிவித்தார்.

ஆண்டுதோறும் டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி இந்திய கடற்படை தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. இதை முன்னிட்டு தமிழகம், புதுச்சேரி கடல் பகுதியை உள்ளடக்கிய கிழக்கு பிராந்திய கடற்படையின் ரியர் அட்மிரல் அலோக் பட்நாகர், சென்னை துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்திய கடற்படைக்கு சொந்தமான சுமித்ரா போர் கப்பலில் நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது ஆழ்கடலில் மீன் பிடிக்கச் செல்லும் தமிழக, புதுச்சேரி மீனவர்களுக்கு ஏதேனும் பாதுகாப்பு குறைபாடு ஏற்பட்டால் அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் கிழக்கு பிராந்திய கடற்படை செய்து வருகிறது.

இயற்கை பேரிடர் காலங்களில் மீனவர்கள் ஆழ்கடல் பகுதியில் சிக்கிக் கொண்டால் அவர்களை மீட்பதற்கு கடற்படை எப்போதும் தயாராகவுள்ளது. எதிர்வரும்காலங்களில் மீனவர்கள் எல்லை பகுதியில் சுமுகமாக மீன் பிடிப்பதற்கும், அவர்களது பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் அடுத்த மாதம் இலங்கை கடற்படையினருடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளோம்.

சென்னையில் கடற்படை தளம் அமைப்பதற்காக தமிழக அரசிடம் இந்திய கடற்படை பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

"ஒகி" புயலால் பாதிக்கப்பட்ட கன்னியாகுமரி, நெல்லை மாவட்டங்களில் கடலில் தத்தளித்த 14 மீனவர்கள் இதுவரை எங்களது வீரர்களால் மீட்கப்பட்டுள்ளனர்.

கிழக்குப் பிராந்திய கடற்படை இந்த ஆண்டு தனது பொன் விழாவைக் கொண்டாடுகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் வெள்ளம்



(கொழும்பு)

சீரற்ற காலநிலையால் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் சில பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

வெலிப்பன்ன, மத்துகம, கொக்மாதூவவில் இருந்து கனங்கே இடைமாறல் வரையிலான பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

வாகனப் போக்குவரத்துக்கு இதனால் பாதிப்பு ஏற்படாவிட்டாலும் நீர் மூழ்கியுள்ள பகுதிகளில் வாகன நெரிசல் காணப்படுகிறது. இதனால் எச்சரிக்கையாக வாகனத்தை செலுத்துமாறு தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் பராமரிப்புகள் தொடர்பான பணிப்பாளர் எஸ். ஓபநாயக்க சாரதிகளிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

சீரற்ற காலநிலை காரணமாக அதிவேக நெடுஞ்சாலைகளில் வாகனங்களை செலுத்தும் போது மணிக்கு 60 கிலோமீற்றர் என்ற வேகத்தை அதிகூடிய வேக நிலைமையாக பேணுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார். (இ)

# 'சாகர்' புயல் 5 ஆம் திகதி வடக்கு-கிழக்கைத் தாக்கும்

(கொழும்பு)

அந்தமான் தீவுப் பகுதியில் உருவாகியுள்ள காற்றமுத்தம் தீவிரமடைந்து வருவதால் வடக்கு- கிழக்குப் பகுதிகளில் கடும் மழை பெய்வதற்குச் சாத்தியங்கள் உள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை வளிமண்டலவியல் திணைக்கள வட்டாரங்கள் இது குறித்து தகவல் வெளியிடுகையில், இலங்கைக்கு கிழக்கே அந்தமான் தீவுப் பகுதியில் உருவாகியுள்ள காற்றமுழுத்த தாழ்வுப் பகுதியை அவதானித்து வருகிறோம்.

தீவிர காற்றமுழுத்தமாக மாறி வடக்கு- கிழக்குப் பகுதிகளில் பாதிப்புக்களை ஏற்படுத்தலாம்.

தற்போது மழை பெய்வதற்கான சாத்தியங்கள் குறைவாகவே இருந்தாலும், 60 கி.மீ வேகத்தில் காற்று வீசக் கூடும்.

அந்தமான் கடலில் உருவாக்கியுள்ள குறைந்த காற்றமுத்தம் புயலாக மாறுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. அது பற்றி அடுத்த சில நாட்களில் தான் கூற முடியும்.

அதேவேளை அந்தமான் கடலில் உருவாகியுள்ள காற்றமுழுத்த தாழ்வுப்பகுதி புயலாக மாறி இலங்கையின் வடக்குப் பகுதியில் நாளை மறுதினம் 5 ஆம் திகதி தாக்கக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சரியான கணிப்புக்களை செய்ய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை ஒகி புயலின் தாக்கத்தினால் இலங்கையில் தொடர்ந்து கொட்டி வந்த மழை குறையும் என்றும் வடக்கு- கிழக்கு, ஊவா, தென், மேல், சப்ரகமுவ மாகாணங்களில் சில இடங்களில் மாத்திரம், 100 மி.மீ வரையான மழை பெய்வதற்கு சாத்தியங்கள் உள்ளதாகவும் வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.


இதனிடையே, வடக்கு- கிழக்கில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய புயலைக் கண்காணித்து வருவதாக இலங்கை செஞ்சிலுவைக் குழுவின் அனர்த்த முகாமைத்துவப்பிரிவு தெரிவித்துள்ளது.

வடக்கு- கிழக்கிலும் இந்தியாவிலும் கடும் மழையும் காற்றும் எதிர்பார்க்கப்படுகிறது என்றும் இலங்கை செஞ்சிலுவைக் குழுவின் அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

அந்தமான் கடல் பகுதியில் உருவாகியுள்ள காற்றமுத்தம் புயலாக தீவிரம் பெற்றால் அதற்கு சாகர் என்று பெயரிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# மட்டு.மீனவர்களின் வலைகளில் பாம்பு

## மக்கள் மத்தியில் அச்சம்



(கொழும்பு)

மட்டக்களப்பு நாவலடியில் நேற்றுக்காலை கர வலை தொழிலில் ஈடுபட்ட அனைத்து மீனவர்களின் வலைகளிலும் பாம்புகள் பிடிபட்டுள்ளதால் மக்கள் மத்தியில் பெரும் அச்சம் நிலவியது.

அண்மைக் காலமாக கடல் கொந்தளிப்பு காரணமாக மீனவர்கள் பாரிய நெருக்கடிக்கு மத்தியில் தங்களது வாழ்க்கையினை கொண்டு செல்கின்ற நிலையில் நேற்று இவ்வாறு வலையில் பாம்புகள் சிக்கியுள்ளது பெரும் ஏமாற்றத்தை கொடுத்துள்ள நிலையில் ஏதும் காலநிலை மாற்றங்கள் ஏற்பட சாத்தியக்கூறுகள் உள்ளதாவென மக்கள் மத்தியில் அச்சநிலை யொன்று ஏற்பட்டுள்ளது.


இதுபோன்று கடந்த 2004 ஆம் ஆண்டு சுனாமி பேரலை ஏற்பட்ட காலத்திலும் பெருமளவான பாம்புகள் மட்டக்களப்பு பகுதியில் படையெடுத்ததால் இவ்வாறு மக்கள் மத்தியில் அச்சநிலை யேற்பட்டுள்ளது.

அதிகளவிலான பாம்புகள் ஏன் பிடிபடுகின்றன என்பது தொடர்பாக அதிகாரிகள் ஆய்வு நடத்த வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சாந்தமருதில் கறுப்புக்கொடி ஏந்திப் பேரணி

(கொழும்பு)

சாய்ந்தமருதில் தனியான உள்ளூராட்சி மன்றக் கோரிக்கையை வலியுறுத்தி கறுப்புக்கொடி ஏந்தி பேரணி இடம் பெற்றுள்ளது.



குறித்த பேரணி நேற்று முன்தினம் ஜும்மா ஆ தொழுகை முடிந்த பின்னர் இடம்பெற்றது. அத்துடன், சாய்ந்தமருதில் ஆரம்பித்த இந்தப் பேரணி மாளிகைக்காடு வரை சென்று மீண்டும் சாய்ந்தமருது பெரிய பள்ளிவாசலை அடைந்துள்ளது.

கடந்த காலங்களில் பல வித போராட்டங்களைச் செய்த சாய்ந்தமருது மக்கள் நேற்று முன்தினம் பள்ளிவாசல் தலைவர் வை.எம். ஹனிபா மாஸ்டர் தலைமையில் இந்த நடைபவனியை முன்னெடுத்துள்ளனர். (இ)

# புதுக்குடியிருப்பு வடிகாலமைப்பு; அதிகாரிகள் நேரில் சென்று ஆராய்வு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் அண்மைய நாட்களில் வெள்ளம் கடைகள், வீடுகளினுள் புகுந்து பல்வேறு அழிவுகளை ஏற்படுத்தியிருந்தது.



இந்நிலையில் இந்த விடயம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டம் கடந்த 29 ஆம் திகதி புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற போது கலந்துரையாடப்பட்டது.

இது தொடர்பில் உரிய வடிகால் அமைப்புக்கள் இல்லாமையினாலேயே இவ்வாறு நடைபெறுவதாகவும் எனவே இது தொடர்பில் நேரில் சென்று பார்வையிட்டு முடிவு எடுப்பதாகவும் இதற்கென குழு ஒன்றும் இதன்போது நியமிக்கப்பட்டது.

அதனடிப்படையில் பிரதேச செயலாளர்,பிரதேச சபை செயலாளர் இணைத் தலைவர்களில் ஒருவரான வைத்திய கலாநிதி சி.சிவமோகன், அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் மாவட்ட உதவிப்பணிப்பாளர், வீதி அபிவிருத்தி திணைக்கள அதிகாரி மற்றும் வர்த்தக சங்க செயலாளர் உள்ளிட்ட அணி நியமிக்கப்பட்டது.

இதனடிப்படையில் இந்தக் குழுவினர் புதுக்குடியிருப்பு நகர் பகுதியைப் பார்வையிட்டு அங்கு காணப்படும் குறைகளை நேரில் ஆராய்ந்ததோடு வடிகால்கள் அமைக்கப்பட வேண்டிய இடங்களையும் பார்வையிட்டு புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் வீதியால் வரும் நீரை நேரடியாக கடைகளுக்குள் செல்வதை தடுக்கும் முகமாக வடிகால்களை அமைக்கவும் மு/சுப்பிரமணிய வித்தியாசாலை அருகில் பதிதாகபாலம் ஒன்றை அமைத்து நீரை வெளியேற்றவும் இதுதொடர்பில் நிதியீட்டங்களை பெற்றுக்கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடியதோடு நீர் வழிந்தோடும் கால்வாய்களை பிரதேச சபையை உடனடியாக துப்புரவுப்பணி ஒன்றை மேற்கொள்ளுமாறும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. (2-281)

# திறப்பு விழாக்களும் மரநடுகையும்

(தும்பளை)

குடத்தனை விவசாயம் சார் உணவு உற்பத்தி மற்றும் பனைசார் உற்பத்தி நிலையம், அம்பன் தென்னை - பனை சார் உற்பத்தி நிலையம், அம்பன் கிழக்கு சிவனொளி முன்பள்ளி திறப்பு விழாவும் அம்பன் கிழக்குப் பகுதியில் மரமுந்திரிகை மர நடுகை நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரைக்கும் இடையில் இடம்பெறும்.

மருதங்கேணி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந் நிகழ்வுகளுக்கு பிரதேச செயலர் க.கணேஸ்வரன் தலைமை தாங்குவார்.

இந்நிகழ்வுகளில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ-10-19)

# அன்பின் ஆழம் வகுப்பு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா வால் வாரந்தோறும் ஞாயிற்றுக் கிழமைகளில் பிற்பகல் 1.30 மணி முதல் 2.30 மணிவரை 13 வயது முதல் 16 வயதினருக்கான வகுப்பு சின்மயா மிஷன், இல. 9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர் எனும் முகவரியில் நடைபெறும். இன்று ஞாயிற்றுக்கிழமை "அன்பின் ஆழம்" என்ற தலைப்பில் வகுப்பு இடம் பெறும்.

ஆர்வலர்கள் அனைவரும் கலந்து பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர். அனுமதி இலவசம். (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 140 | 120 | 150 |
| உருளைக்கிழங்கு | 100 | 60 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 600 | 550 | 800 | 800 |
| தக்காளி | 80 | 100 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 50 | 60 |
| கோவா | 140 | 140 | 200 | 120 |
| கரட் | 180 | 200 | 240 | 200 |
| பூசணி | 80 | 60 | 80 | 80 |
| புடோல் | 100 | 100 | 120 | 120 |
| வாழைக்காய் | 80 | 70 | 120 | 70 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 400 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 140 | 180 |
| பாகற்காய் | 300 | 240 | 200 | 400 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 120 | 160 |
| கருணைக்கிழங்கு | 80 | 60 | 80 | 70 |
| பயற்றங்காய் | 300 | 240 | 240 | 300 |
| லீக்ஸ் | 200 | 240 | 240 | 200 |
| பீற்றூட் | 100 | 120 | 200 | 140 |
| குடைமிளகாய் | 250 | 280 | 300 | 300 |
| முருங்கைக்காய் | 400 | 160 | 300 | 400 |
| போஞ்சி | 200 | 160 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | 120 | 120 | 140 |
| கீரை-1பிடி | 80 | 80 | 60 | 60 |
| தேசிக்காய் | 100 | 80 | 80 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 80-100 | 100 |
| இராசவள்ளி | — | — | 300 | — |
| வெங்காயப்பூ | 300 | — | 240 | 250 |
| முள்ளங்கி | 100 | 80 | 120 | 70 |
| பொன்னாங்காணி | 60 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 30 | 20 | 20 | 40 |
| ஈரப்பலா | 80 | 60 | 100 | 100 |



கடந்த கால யுத்தத்தினால் சேதமடைந்த மயிலிட்டி முனையன் வளவு முருகையன் ஆலய மீள் கட்டுமானத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்றது. அடிக்கல்லை தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய தலைவர் ஆறு.திருமுருகன் நாட்டிவைத்தார். (படங்கள்:-தும்பளை செய்தியாளர்)

# தேவநம்பியதீசன் சிங்கள மன்னன் இலங்கை சிங்கள பௌத்த நாடு

## சரத் வீரசேகர கூறுகிறார்



(கொழும்பு)

தேவநம்பியதீசன் ஒரு தமிழ் மன்னன் என வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கூறியிருந்த நிலையில், தீசன் என்பது சிங்கள அரசரின் பெயர் என்றும் இலங்கையின் மூலப் பெயர் சிங்கலே என்றும் கூறியிருக்கிறார் றியர் அட்மிரல் சரத் வீரசேகர.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் பிரதியமைச்சராக இருந்த றியர் அட்மிரல் சரத் வீரசேகரவிடம், சிலோன் ருடே ஆங்கில நாளிதழ் எழுப்பிய கேள்விகளுக்கே இவ்வாறு பதிலளித்துள்ளார்.

கேள்வி:- தேவநம்பிய தீசன் உண்மையில் ஒரு தமிழ் மன்னன் என அண்மையில் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கூறியுள்ளார். இது தொடர்பான தங்களது கருத்து என்ன?

பதில்:- தீசன் என்பது சிங்கள அரசரின் பெயராகும். தேவநம்பிய என்பது இந்த அரசனைக் கௌரவிக்கும் முகமாக வழங்கப்பட்ட பெயராகும்.

இந்தியாவின் லும்பினியில் காணப்படும் அசோகரின் தூணில் (Ashok Pillar) செதுக்கப்பட்டுள்ள கல்வெட்டில், அசோகச் சக்கரவர்த்தியை கௌரவிக்கும் முகமாக வழங்கப்பட்ட தேவனபியேன பிரியதர்சன அசோக (Devena Piyena Priyadarshana Ashoka) எனப்பொறிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண முதலமைச்சர் இந்தியாவிற்குச் சென்று 'தீசன்' கதையைக் கூற வேண்டும். இந்தியர்களிடம் போய் மௌரியப் பேரரசனான அசோகனும் தமிழ் மன்னன் என்று அவர் கூறட்டும்.

கேள்வி:- இது சிங்கள பௌத்த நாடல்ல என முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கூறுகிறார். இது தொடர்பான தங்களின் கருத்து என்ன?

பதில்:- இந்த நாட்டின் மூலப் பெயர் 'சிங்கலே"( Sinhale) என்பதாகும். 1815இல் பிரித்தானியத் தலைவர்களாலும் 'சிங்கலே' தலைவர்களாலும் கண்டிய சாசனம் எழுதப்பட்டது.

எமது நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் 'சிங்கலே' என்ற பெயரைத் தொடர்ந்தும் நாம் பயன்படுத்தியிருந்தால் இந்த நாட்டிலுள்ள அனைவரும் 'சிங்களவர்களாகவே' இருந்திருப்பார்கள்.

உலகிலுள்ள அனைத்து நாடுகளும் பல்லினங்களைக் கொண்ட நாடுகளாகவே உள்ளன. ஆனால் பொதுவாக நாடுகளில் உள்ள பெரும்பான்மை சமூகத்தினர் மற்றும் பெரும்பான்மை மதங்களை அடிப்படையாகக் கொண்டே அந்தந்த நாடுகள் அடையாளங் காணப்படுகின்றன.

ஆகவே எமது நாடானது சிங்கள பௌத்த நாடு என அழைக்கப்படுவதை எவரும் எதிர்க்க முடியாது. ஏனெனில் இந்த நாட்டில் 74 சதவீதமான சிங்களவர்களும் இவர்களில் 85 சதவீதமானவர்கள் பௌத்தர்களாகவும் உள்ளனர். இதுவே உண்மையான நிலைப்பாடாகும்.

சிங்களவர்கள் வடக்கில் குடியேறுவதை முதலமைச்சர் விக்னேஸ்வரன் விரும்பவில்லை.

யாழ்ப்பாணத்திலுள்ள புத்தர் சிலைகளை அகற்றுமாறும் முதலமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார். ஆனால் கொழும்பிலுள்ள சிங்களவர்கள் மத்தியில் தமிழர்கள் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்கின்றனர். ஏனெனில் இது சிங்கள பௌத்த நாடாகும்.

முஸ்லிம் நாடொன்றில் வாழும் முல்லாக்களை முதலமைச்சர் விக்னேஸ்வரன் இவ்வாறு துன்பப்படுத்தினால், அவரது தலை துண்டிக்கப்படும். ஆனால் இது சிங்கள பௌத்த நாடு என்பதை விக்னேஸ்வரன் அறிந்துள்ளதால் தான் அவர் தனது அதிருப்திகளை வெளியிட்டு வருகிறார்.

பௌத்தர்கள் ஏனைய மதங்களை மதிக்கின்றனர். இதன் காரணமாகவே இந்த நாட்டில் பல ஆயிரக்கணக்கான கோயில்கள், தேவாலயங்கள் மற்றும் பள்ளிவாசல்கள் போன்றன அமைக்கப்பட்டுள்ளன.

வெசாக் போயா தினத்தை அனைத்துலக விடுமுறை தினமாக அறிவிக்குமாறு ஜெனீவாவில் வைத்து லக்ஸ்மன் கதிர்காமர் பரிந்துரை செய்திருந்தார். இதுவே உண்மையான நல்லிணக்கமாகக் காணப்பட்டது. ஆனால் இன்று இந்த நல்லிணக்கத்தை விக்னேஸ்வரன் போன்றவர்கள் அழிக்க முயற்சிக்கிறார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## ஏன் இந்தக் கொலை வெறி!

### பெண்மீது 14 தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம்

(கொழும்பு)

கொட்டாவ பொலிஸ் பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் கடந்த 30ஆம் திகதி இரவு 8.40 மணியளவில் இனந்தெரியாதோரால் வீடு புகுந்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக கொட்டாவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சுமித்த கருணாரத்ன தெரிவித்தார்.

இதேவேளை, உயிரிழந்த பெண் விளக்கமறியலிலிருந்து விடுதலையாகி வந்த பின்னர் பல இடங்களில் தலைமறைவாகியிருந்த நிலையில் அண்மையில் பிள்ளைகளும் கணவரும் தங்கியிருந்த வீட்டுக்குச் சென்றிருந்த போது இந்த அசம்பாவிதம் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டாவ, பாலிகா குடியிருப்பு வீதி, ருக்மலே, பன்னிப்பிட்டியவை சேர்ந்த 42 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயாரான மஞ்சுளா சந்துனி என்ற பெண்ணே இவ்வாறு இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இரவு 8.40 மணியளவில் கொட்டாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ருக்மலே பன்னிப்பிட்டிய பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் துப்பாக்கிப் பிரயோகச் சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளதாக 119 அவசர உதவி சேவைப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து, கொட்டாவ பொலிஸ் நிலைய அதிகாரிகள் அந்த இடத்தை நோக்கி செல்ல பணிக்கப்பட்டுள்ளனர்.

கொட்டாவ பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரியின் பணிப்புரைக்கமைய உடனடியாக அப்பிரதேசத்திற்கு விரைந்து சென்ற கொட்டாவ பொலிஸ் நிலைய அதிகாரிகளால் கொலையுண்ட இடத்திலிருந்து கொலை செய்யப்பட்ட பெண்ணின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இக்கொலைச் சம்பவம் இடம்பெற்ற இடத்திலேயே பொலிஸாரின் பலத்த பாதுகாவலின் மத்தியில் கொலையுண்ட பெண்ணின் சடலம் கடந்த வியாழக்கிழமை இரவு முழுவதும் வைக்கப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொலையுண்ட பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைக்குட்படுத்தப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளும் இடம்பெற்றன.

இவ்விசாரணைகளின் போது தெரியவருவதாவது, கொலையுண்ட பெண் வீட்டு வாசலில் அமர்ந்திருந்த வேளையில் குறித்த பெண்ணை நோக்கி முழுமையாக முகத்தை மூடிய கறுப்புநிற தலைக்கவசம் அணிந்திருந்த மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு சந்தேக நபர்கள், துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டு விட்டு தப்பித்துச் சென்றுள்ளனர்.

துப்பாக்கி பிரயோகத்தின் போது கொலையுண்ட பெண்ணின் மார்பில் முதல் துப்பாக்கி ரவை பதியப்பட்டு பெண் மயங்கி சரிந்த வேளையில், தொடர்ந்து பெண்ணை நோக்கி 14 முறை துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு இனந்தெரியாத மர்ம நபர்கள் தப்பிச் சென்றுள்ளதாக தெரியவருகின்றது.



கொலை இடம்பெற்ற வேளையில் கொலையுண்ட பெண்ணின் மாமியார் மாத்திரமே வீட்டில் இருந்ததாகவும் குறித்த பெண்ணின் கணவர் மற்றும் இரண்டு குழந்தைகளும் குறித்த சம்பவத்தின் போது அருகிலிருக்கவில்லை எனவும் தெரியவருகின்றது.

குடும்ப தகராறு ஒன்றின் காரணமாக குறித்த பெண் கணவனை விட்டு பிரிந்திருப்பதாகவும் தனது குழந்தைகளை பார்க்க மாத்திரமே இவர் வந்து செல்வதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மேலும் கொலையுண்ட பெண் அத்துறுகிரிய பிரதேசத்தில் அழகு நிலையமொன்றின் உரிமையாளர் எனவும் அந்த அழகு நிலையத்தில் கடந்த பெப்ரவரி மாதம் பாதாள உலக கோஷ்டியுடன் சம்பந்தப்பட்ட பனில் பண்டார தர்மசேன என்ற 33 வயதுடைய நபரை சுட்டுக்கொன்ற சம்பவத்துடன் இவர் தொடர்புடையவர் என்பதும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

அந்த துப்பாக்கி பிரயோக சம்பவத்துடன் தொடர்புடைய கொலையாளிகளுக்கு தகவல் வழங்கிய குற்றச்செய்திக்காக கடந்த ஆறுமாத காலம் சிறையிலிருந்த நிலையில் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பே இவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

பிணையில் வந்த இவருக்கு மரண அச்சுறுத்தல் இருந்ததால் பல்வேறு இடங்களில் வசித்து வந்துள்ள நிலையில், கடுவல நீதிமன்றில் நடைபெறும் வழக்கு விசாரணைகளுக்கு சமுகமளித்துவிட்டு கணவர் மற்றும் குழந்தைகள் தங்கியிருந்த வீட்டுக்கு வந்த நேரத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொலைக்கான காரணம் தெரியாத நிலையில், இச்சம்பவம் தொடர்பாக இதுவரையில் எவரும் கைது செய்யப்படவில்லை. நேற்று முன்தினம் சம்பவம் நடைபெற்ற இடத்தை ஹோமாகம நீதவான் நீதிமன்ற பதில் நீதிபதி பார்வையிட்டதுடன் மேலதிக விசாரணைகளை கொட்டாவ, மிரியான மற்றும் நாகமுவ பிரதேச பொலிஸாரை மேற்கொள்ளுமாறும் உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி மேலதிக விசாரணைகளை கொட்டாவ, மிரியான மற்றும் நாகமுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## மகிந்த ஆட்சியை கவிழ்க்க ரணில் -மைத்திரி கூட்டணி

### திஸ்ஸ அத்தநாயக்க கண்டுபிடிப்பு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசிய கட்சியும் இணைந்தமையானது நாட்டை கட்டியெழுப்புவதற்கு அல்ல. மாறாக மகிந்த ஆட்சியை கவிழ்ப்பதற்காக மாத்திரமேயாகும். இவ்விரு கட்சிகளும் அமைச்சுக்களை பகிர்ந்து கொண்டாலும் இரு வேறு கொள்கைகளை கொண்டே அரசியலை நடத்தி வருகின்றன என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.


மல்வத்து மற்றும் அஸ்கிரிய மஹாசங்கத்தினரை நேற்று முன்தினம் சந்தித்த பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியை கவிழ்ப்பதற்காகவேயன்றி வேறு எந்த காரணத்திற்காகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஐக்கிய தேசிய கட்சியும் ஒன்றிணையவில்லை. முன்னைய ஆட்சியைக் கவிழ்ப்பதற்காகவே ஒன்றிணைந்தனர். நாட்டை முன்னேற்றப்பாதையில் இட்டுச்செல்வதற்காக அல்ல. ஆனால் இவ்விரு கட்சிகளும் ஒரு நோக்கத்தின் கீழ் செயற்படவில்லை. அதனால் தற்போது ஆட்சியில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

மேலும் ஐக்கிய தேசிய கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மேல் மட்டத்தில் ஒன்றிணைந்து காணப்பட்டாலும் கீழ் மட்டத்தில் ஒன்றிணைந்து செயற்படவில்லை என்பது தெளிவாகிறது. காரணம் ஒரே நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படவில்லை. ஏதோ ஒரு காரணத்திற்காக ஒன்றிணைந்துள்ளோம் என அவர்கள் தெரிவித்தாலும் அவர்களின் செயற்பாடு வேறொன்றாகவே காணப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# திருக்கார்த்திகைத் தீபத்திருநாள்

உலகின் இருளகல ஒளியானது எவ்வளவு அவசியமோ அதே போன்று மக்கள் மனதை பீடித்திருக்கும் அஞ்ஞான இருளகல மெய்ஞ்ஞான ஒளி அவசியமாகும். இவ்வுலக மக்களின் நல்வாழ்விற்கு ஆன்மீக நெறி வழியான மெய்ஞ்ஞான ஒளியுணர்வு ஏற்பட வேண்டுமாயின் கார்த்திகைத் தீபத்திருநாள் ஒளிவழிபாடுகளும் தீப ஒளியில் நாம் காணும் இறை வழிபாட்டின் தெய்வீக உணர்வும் மண்ணில் நல்ல வண்ணம் நாம் வாழ்ந்திட வழி சமைக்கும் எனலாம்.



மண்ணுலக மக்களின் நல்வாழ்விற்கு உலகைப் பீடித்திருக்கும் மும்மலங்களின் இருள் நீங்கத் தெய்வீக ஒளி எங்கும் பரவவேண்டியே முழுமுதற் கடவுளாகிய சிவபிரான் அடி முடி தெரியாத பெருஞ்சோதி வடிவினனாகத் திருக்கார்த்திகைத் தீப நன்னாளிற் காட்சிதந்தான். இந்தச் சிறப்பினை மனதிருத்தியே மக்கள் இந்நன்னாளில் ஆலயங்கள்தோறும் "சொர்க்கப்பானை" எனும் பெயரிற் பெரும் தீச்சுடர் பிரகாசிக்கச்செய்தும் வீடுகளிலும் தோட்டம், தொழுவங்கள் எல்லா இடத்திலும் தீப்பந்தங்கள் வைத்தும் தீபங்கள் ஒளி வீசச் செய்தும் வழிபாடுகள் நடத்துகின்றனர்.

விளக்கினை ஏற்றி
வெளியை அறிமின்
விளக்கினின் முன்னை
வேதனை மாறும்
விளக்கை விளக்கும்
விளக்குடை யார்கள்
விளக்கில் விளங்கும்
விளக்காவர் தாமே

எனத் திருமந்திரத்திற் திருமூலநாயனார் ஆன்மீகத் தத்துவார்த்தமாக விளக்கு ஏற்றிடும் சிறப்பை எடுத்து விளக்குகின்றார்.

மேலும் திருவிளக்கேற்றுவதையும் தீபவழிபாடு செய்வதையும் சிறப்பித்துச் சோதியே சுடரே சூழ் ஒளி விளக்கே எனவும் ஒளிவளர் விளக்கே மனமணி விளக்கே, இடர் கொடுத்திடும் இல்லக விளக்கே எனவும் விளக்கு வழிபாட்டினையும் அதன் சிறப்புக்கள், பயன்பாடுகளையும் இறைவழிபாட்டாளர்கள் பலவாறு பெருமைப்படுத்தி பக்தியுடன் பரவியுள்ளார்கள்.


வருடந்தோறும் கார்த்திகை மாதத்திலே கார்த்திகை நட்சத்திரத்திலே கலியுக வரதனாகிய கந்தப் பெருமானுக்கும் கார்த்திகைப் பூரண நன்னாளிலே சர்வாலயங்கள், இல்லங்கள் மற்றும் எல்லா இடங்களிலும் கார்த்திகை ரோகிணி நட்சத்திரத்திலே நாராயணனாகிய மகாவிஷ்ணுவுக்கும் சிறப்பாகத் தீபங்கள் ஏற்றியும் சொர்க்கப்பானை கொளுத்தியும் எங்கும் இருளகன்று ஒளி வீசச் செய்து மக்கள் தம் மனங்களிலும் இருளகன்று ஒளி வீசிடச் செய்து ஆன்மீக ஒளி பரவ வேண்டி இறை வழிபாடுகள் செய்வார்கள்.

நீர்வை மணி

# மியன்மார் ரோஹிஞ்யா முஸ்லிம் அகதிகளிடம் பாவமன்னிப்புக் கோரினார் போப் ஆண்டவர்

(டாக்கா)

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நேற்று ரோஹிஞ்யா அகதிகளைச் சந்தித்த போப்பாண்டவர், அந்த மக்கள் எதிர்கொண்ட அனைத்து துன்பங்களுக்கும் பாவ மன்னிப்புக் கோரியதுடன் அவர்களின் உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.



முஸ்லிம், பௌத்தம், இந்து மற்றும் கிறிஸ்தவ மதத் தலைவர்கள் பங்கேற்ற கூட்டத்தில் பேசிய போப்பாண்டவர், மியன்மார் பயணத்தின் போது சொல்லமறுத்த "ரோஹிஞ்யா" என்ற சொல்லுடன் அந்த இன மக்களை அழைத்துள்ளார்.

இக்கூட்டத்திற்காக காக்ஸ் பஜாரில் தஞ்சமடைந்திருக்கும் 16 ரோஹிஞ்யாக்கள் (12 ஆண்கள், 2 பெண்கள் மற்றும் 2 பெண் குழந்தைகள்) டாக்காவிற்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

மியன்மார் - பங்களாதேஷ் எல்லையோரத்திலுள்ள காக்ஸ் பஜாரில் 620,000 ரோஹிஞ்யா அகதிகள் தற்காலிக முகாம்களில் வசித்து வருகின்றனர். இந்நிலை ஆசியாவின் மிக மோசமான அகதிகள் நெருக்கடி என வர்ணிக்கப்படுகின்றது.

இந்நிலையில் ரோஹிஞ்யா முஸ்லிம் அகதிகளை வாழ்த்தி வரவேற்று கைகளைப் பற்றிய போப்பாண்டவர், துன்பங்கள் நிறைந்த அவர்களின் சோகக் கதைகளைக் கேட்டுள்ளார்.

ரோஹிஞ்யா மக்களை கடவுளுடன் ஒப்பிட்ட போப்பாண்டவர், "உங்களை துன்பத்திற்கு உள்ளாக்குபவர்கள், உங்களை துன்புறுத்தியவர்கள், உங்களை காயப்படுத்தியவர்களின் பெயரால் நான் மன்னிப்புக் கேட்கிறேன். எல்லாவற்றிருக்கும் மேலாக இவ்வுலகம் உங்கள் மீது காட்டுகின்ற அலட்சியத்திற்கும் மன்னிப்புக் கோருகிறேன்" என்றார்.

ரோஹிஞ்யா அகதிகளை அனுமதித்த பங்களாதேஷத்தின் பெரிய மனதை சுட்டிக் காட்டிய போப்பாண்டவர், "இப்போது பெரிய மனம் படைத்த உங்களிடம் (ரோஹிஞ்யா) நாங்கள் கோரியுள்ள பாவமன்னிப்பை தருமாறுக் கேட்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

ரோஹிஞ்யா அகதிகளுக்கு தொடர்ந்து உதவிகள் கிடைக்கவும் அவர்கள் உரிமைகள் அங்கீகரிக்கப்படவும் ஆதரவுக் குரல்கள் எழுப்ப வேண்டும் என அவர் வேண்டியுள்ளார்.

மியன்மார் அரசு ரோஹிஞ்யா இன மக்களை பெங்காலிகள் என வர்ணிக்கும் சூழலில், மியன்மார் பயணத்தின்போது "ரோஹிஞ்யா" என்ற சொல்லை போப்பாண்டவர் தவிர்த்தது கடும் விமர்சனங்களை உருவாக்கியிருந்தன.

மியன்மார் பயணத்தை நிறைவுச் செய்து பங்காளதேஷ் வந்துள்ள போப்பாண்டவர், ரோஹிஞ்யா இன மக்களை 'ரோஹிஞ்யா' என்ற சொல் கொண்டு அழைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# மன்னர் ஆட்சிக்கால வாள்களுடன் இருவர் கைது

(கொழும்பு)

மன்னர் ஆட்சிக் காலத்தில் யுத்தங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட பெறுமதிமிக்க இரு வாள்களும் புத்தர் சிலையொன்றையும் பிபிலை பொலிஸார் நேற்று முன்தினம்மாலை மீட்டுள்ளதுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிபிலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆரிய பந்து வெதசெதரவிற்கு கிடைக்கப்பெற்ற தகவலொன்றினையடுத்து, அவர் தலைமையிலான பொலிஸ் குழுவொன்று விரைந்து, குறிப்பிட்ட இடத்தையும் வீடொன்றையும் சுற்றிவளைத்து தேடுதல்களை மேற்கொண்டது.

அவ்வேளையிலேயே வீட்டுத் தோட்டத்தில் குழியொன்றினுள் மூடி மறைக்கப்பட்டிருந்த இரு வாள்களும், வீட்டிற்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த புத்தர் சிலையொன்றும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. (இ)

# பழங்குடியின தலைவரை சந்தித்த அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர்





(கொழும்பு)

இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் ப்ரைஸ் ஹட்செஸன் நேற்று முன்தினம் பழங்குடியின தலைவரைச் சந்தித்துள்ளார்.

வளமான சுதேச கலாசாரம் மற்றும் பாரம்பரியங்கள் தொடர்பில் வேடுவ பழங்குடியின தலைவரிடம் தாம் கற்றுக்கொண்டதாக அவுஸ்திரேலிய பழங்குடியினருடனான தொடர்புகள் குறித்து கேட்டறிந்ததாகவும் தெரிவித்தார்.

இந்த சந்திப்பின் போது பழங்குடியின மரபுகளுக்கு அமைய அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

31 ஆம் நாள் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
02
04
1953



மறைவு
04
11
2017

திருமதி சரசரத்தினம் புலேந்திரலிங்கம் (கிளி ரீச்சர்)
(ஓய்வுபெற்ற கணித ஆசிரியரும், உப அதிபரும்)

கடந்த 04.11.2017 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (04.12.2017) திங்கட்கிழமை காலை 5.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக் கரையில் கரைக்கப்படும். தொடர்ந்து அன்றைய தினம் வீட்டுக்கிருத்தியம் நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.
அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்.

(1513)

# ஒதியமலை படுகொலையின் 33ஆம் ஆண்டு நினைவேந்தல்





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைப்புற கிராமமான ஒதியமலை கிராமத்தில் 1984.12.02 அதிகாலை வேளையில் இராணுவம் சந்திப்புக்கென அழைத்து சுட்டு படுகொலை செய்யப்பட்ட 32 அப்பாவி பொதுமக்களின் 33 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணிக்கு ஒதியமலை படுகொலை நடைபெற்ற இடத்தில் ஒதியமலை கிராம அபிவிருத்தி சங்க ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதன்போது படுகொலை செய்யப்பட்ட 32 அப்பாவி பொதுமக்களுக்கு உறவுகளால் சுடரேற்றி மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஒதியமலை பிள்ளையார் ஆலயத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளும் அன்னதானமும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, வடக்கு மாகாண சபை பிரதி அவை தலைவர் வ.கமலேஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம், வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

## 'நியமனம் வழங்குவதை துரிதப்படுத்து'

## வேலையற்ற பட்டதாரிகள் வவுனியாவில் கவனயீர்ப்பு




(குருமன்காடு)

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகத்தின் ஏற்பாட்டில் கவனயீர்ப்புப் போராட்டம் வவுனியா அரச பேருந்து நிலையத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

அரசினால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நீண்ட காலமாக நிறைவேற்றப்படாமையையடுத்து வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகளினால் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள்,

"சந்திரிகா ஆட்சியில் 65 ஆயிரம், மகிந்த ஆட்சியில் 20 ஆயிரம் வேலை வாய்ப்புக்கள். ஆனால் நல்லாட்சியில்....? நியமனம் வழங்கு வதைப் துரிதப்படுத்து அரசே! வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எங்கே? எதிர்க்கட்சித் தலைவரே தூங்காதே 20 ஆயிரம் அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனங்கள் எங்கே?" ஆகிய பதாகைகளை ஏந்தியவாறு கோசங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அத்தோடு இப்போராட்டத்தில் ஈடுபட்ட வடக்கு மாகாண வேலையில்லா பட்டதாரிகளால் துண்டுப்பிரசுரங்களும் விநோகிக்கப்பட்டன.

தொடர்ந்தும் இப்போராட்டத்தின் பின்னரும் தமக்கான நியாயமான தீர்வு வழங்கப்படாதவிடத்து தொடர் போராட்டங்களை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக வேலையில்லா பட்டதாரிகள் மேலும் தெரிவித்திருந்தனர். (2-15-250)

## அடைமழைக்கு மத்தியிலும்

## தீர்வின்றி தொடர்கிறது போராட்டம்



(பனிக்கன்குளம்)

தமது உறவுகளுக்கு தீர்வு கிடைக்கும்வரை தமது போராட்டத்தை கைவிடப்போவதில்லை என தொடர்போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வலியுறுத்தியுள்ளனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முல்லைத்தீவில் கடந்த மார்ச் மாதம் 8 ஆம் திகதி ஆரம்பித்த போராட்டம் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக நேற்று 270 ஆவது நாளாக தொடர்ந்து வருகிறது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது சரணடைந்த, இராணுவத்திடம் கையளித்த, கைது செய்யப்பட்ட மற்றும் யுத்த காலத்தில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தமது உறவுகள் தொடர்பில் உரிய தீர்வை முன்னெடுக்குமாறு வலியுறுத்தி தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையில் இவர்களின் போராட்டத்துக்கு எந்தவித பதில்களும் கிடைக்காத நிலையில் அடைமழைக்கு மத்தியிலும் போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இந் நிலையில் அரசால் தமக்கு எந்த தீர்வும் வழங்க முடியவில்லை எனவும் சர்வதேச விசாரணையே தமக்கு தேவை எனவும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர். (2-281)




## 12 நீர்ப்பாசனக் குளங்களின் நீர்மட்ட அளவுகள்

### வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத் தகவல்படி

(மல்லாவி)

வவுனிக்குளம் நீர்ப்பாசனக் திணைக்களத்திற்குட்பட்ட 12 நீர்ப்பாசனக் குளங்களில் கடந்த 24 மணி நேரத்தில் கிடைக்கப்பெற்ற மழை வீழ்ச்சி காரணமாக குளங்களின் நீர் மட்டம் உயர்வடைந்துள்ள புள்ளி விபரத் தகவல்களை வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

இதற்கமைய, 25 அடி கொள்ளளவுடைய வவுனிக்குளத்தின் தற்போதைய நீர் மட்டமானது 16 அடி 11 அங்குலமாகவும், 10 அடி கொள்ளளவுடைய தென்னியன் குளத்தின் நீர் மட்டம் 5 அடி 8 அங்குலமாகவும், 12 அடி கொள்ளளவுடைய ஐயங்கன் குளத்தின் நீர் மட்டம் 9 அடி 10 அங்குலமாகவும், 10 அடி கொள்ளளவுடைய அம்பலபெருமாள் குளத்தின் நீர் மட்டம் 5 அடி 5 அங்குலமாகவும், 11 அடி 6 அங்குலம் கொள்ளளவுடைய கல்விளான் குளத்தின் நீர் மட்டம் 5 அடி 5 அங்குலமாகவும், 9 அடி 6 அங்குலம் கொள்ளளவுடைய கோட்டைகட்டிய குளத்தின் நீர் மட்டம் 8 அடி 10 அங்குலமாகவும், 9 அடி 6 அங்குலம் கொள்ளளவுடைய பழைய முறிகண்டி குளத்தின் நீர் மட்டம் 6 அடி 10 அங்குலமாகவும், 11 அடி கொள்ளளவுடைய கொல்லவிளான் குளத்தின் நீர் மட்டம் 9 அடி 7 அங்குலமாகவும், 12 அடி 6 அங்குலம் கொள்ளளவுடைய மல்லாவிக் குளத்தின் நீர் மட்டம் 7 அடி 10 அங்குமாகவும், 9 அடி 6 அங்குலம் கொள்ளளவுடைய பனங்காமம் குளத்தின் நீர் மட்டம் 5 அடி 7 அங்குலமாகவும் காணப்படுகின்றது.

இதேவேளை, வவுனிக்குளத்திற்குட்பட்ட இரண்டு நீர்ப்பாசனக் குளங்கள் வான் பாயத் தொடங்கியுள்ளன.

அவையாவன, 11 அடி 2 அங்குலம் கொள்ளளவுடைய தேறாங்கண்டல் குளத்திற்கு 11 அடி 2 அங்குலமாக நீர் வரத்து கிடைக்கப் பெற்ற நிலையில் தற்போது ஒரு உயரத்திற்கு வான் பாயத் தொடங்கியுள்ளது. 9 அடி 6 அங்குலம் கொள்ளளவுடைய புற்றுவெட்டுவான் மருதங்குளத்திற்கு நீர் வரத்து 9 அடி 6 அங்குலத்திற்கு நீர் வரத்துக் கிடைக்கப் பெற்ற நிலையில் தற்போது ஒரு அங்குல உயரத்திற்கு வான் பாயத் தொடங்கியுள்ளது.

இந் நிலையில் நேற்று முன்தினம் காலை 6 மணி தொடக்கம் நேற்றுக் காலை 6 மணி வரையான காலப் பகுதியில் 24 மணி நேரத்தில் வவுனிக்குளம் நீரேந்து பிரதேசத்தில் 22 மில்லி மீற்றராகவும், அம்பலபெருமாள் குள நீரேந்து பிரதேசத்தில் மழைவீழ்ச்சி எதுவும் பதிவாகவில்லை. ஐயங்கன் குள நீரேந்து பிரதேசத்தில் 17 மில்லி மீற்றராகவும், கல்விளான் குள நீரேந்து பிரதேசத்தில் 22 மில்லி மீற்றராகவும் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

## ஜெயந்திநகர் செல்லும் பிரதான பாலத்தடியை சற்று கவனியுங்கள்



(சிவநகர்)

கிளிநொச்சி இந்துக்கல்லூரிக்கு அருகாமையிலுள்ள நீர் வடிகான் பகுதி தொடக்கம் ஜெயந்தி நகர் பாலத்தின் முன்பாகவுள்ள பகுதிவரை உருத்திரபுரம் வீதி மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இதேவேளை கிளிநொச்சி இந்துக்கல்லூரிக்கு அருகாமையிலுள்ள நீர்வடிகான் பகுதி தொடக்கம் உருத்திரபுரம் பிரதான வீதியின் ஊடாக ஜெயந்திநகர் செல்லும் பிரதான பாலத்தடியில் பள்ளங்கள் ஏற்பட்டு குளம் போல நீர் தேங்கி காணப்படுவதாக போக்குவரத்தை மேற்கொள்வோர் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியூடாக மாணவர்கள் தொடக்கம் உருத்திரபுரம் கிழக்கு, மேற்கு, வடக்கு மற்றும் சிவநகர் கிராமங்களில் வசிக்கின்ற அனைத்து மக்களும் பயன்படுத்துகின்ற இப் பிரதான வீதியின் ஜெயந்திநகர் பாலத்திற்கு முன்பாக பள்ளங்கள் ஏற்பட்டு நீர் தேங்கி நிற்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் கொள்ளாது இருப்பது ஏன் என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே பொதுமக்கள், மாணவர்கள் ஆகியோரின் நலனில் அக்கறையுள்ளோர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது. (2-254)

## கோமா நிலையில் இருந்த குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலையப்பிரிவில் உள்ள கல்லாறுக்கிராம குடியிருப்பு பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் நிலத்தில் தவறிவீழ்ந்து மயக்கமடைந்து கோமா நிலையில் கடந்த 3 நாட்களாக கிளிநொச்சி, அநுராதபுரம் ஆகிய மாவட்டப் பொது வைத்தியசாலைகளின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த 29 ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்ற நிலையில் உடனடியாக தருமபுரம் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் அதிதீவிர மேலதிக சிகிச்சைகளுக்காக அநுராதபுரம் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்ட நிலையில் மீண்டும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சில மணிநேரத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் அவர் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவத்தில் தருமபுரம் கல்லாறுக் கிராம குடியிருப்பு பகுதியைச்சேர்ந்த வேலாட்சி- சூரியகுமார் (வயது-44) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தவராவார். இச்சம்பவம்தொடர்பில்தருமபுரம்பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில் பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் கையளிக்கப்படவுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு – நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு
~ மகாகவி பாரதியார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## விதுரன் வில் முறிக்க வேண்டும் வீஷ்மர் வில்லை நிலத்தில் போட வேண்டும்

மகாபாரதப் போரில் பாண்டவர்கள் வெல்ல வேண்டும் என்பதற்காக போருக்கு முன்பாகவே சில பல ஆயத்தங்களை கிருஷ்ண பரமாத்மா செய்து விட்டார்.

போர் நிறுத்தத்துக்கான நடவடிக்கைகள் நடந்து கொண்டிருந்தாலும் போரில் பாண்டவர்கள் வெல்வதற்கான அத்தனை தந்திரோபாய முயற்சிகளையும் கிருஷ்ண பரமாத்மா செய்யலானார். அதில் ஒன்று விதுரனின் வில்லை முறிப்பதாகும்.

மகாபாரதத்தில் வில்லுக்கு விதுரன் என்பதே புகழ்ச்சிக்குரியதாக இருந்தது. வில்வித்தையில் அத்துணை வல்லமை பொருந்தியவன் விதுரன்.

குருசேத்திரப் போரில் விதுரன் வில்லெடுத்து போரிடுவானாக இருந்தால், பாண்டவர்களின் வெற்றி என்பது சாத்தியமற்றதாகும்.

எனவே விதுரன் வில்லை முறித்து போர்க்களம் புகமாட்டேன் என்று சபதம் செய்ய வேண்டும். இதனைச் செய்விப்பதற்கு கிருஷ்ண பரமாத்மா வியூகம் அமைத்தார்.

அந்த வியூகத்தின் விளைவாக கெளரவர் சபை கூடிய வேளையில் துரியோதனன் விதுரனைப் பார்த்து மிகமோசமான வார்த்தைகளால் நிந்திக்கின்றான்.

துரியோதனனின் தகாத வார்த்தைகளைக் கேட்ட விதுரன் கோபாவேசத்துடன் வில்லை முறித்து போரில் இறங்கேன் என்று சபதமும் எடுக்கலானான்.

வில்லுக்கு விதுரன் என்ற பெயரையே அடக்கிவிட்ட கிருஷ்ண பரமாத்மா, வீஷ்மர் கையில் இருக்கும் வில்லை நிலத்தில் போடத் திட்டம் தீட்டினார்.

அதற்காக குருசேத்திரத்தில் முதல் நாள் போரில் போர்க்களத்தில் நிற்கும் வீஷ்மரிடம் அருச்சுனனை அனுப்பி ஆசி பெற வைக்க,

அருச்சுனா! வெற்றி உமதாகட்டும். சிகண்டி என்பான் என் முன் தோன்றுகையில் என் கைவில்லை நிலத்தில் போடுவேன் என்றார் வீஷ்மர்.

ஆக, விதுரனின் வில்லை முறித்து; வீஷ்மரின் வில்லை நிலத்திடை வீச வைத்தே பாண்டவர்களுக்கான் வெற்றியை கிருஷ்ண பரமாத்மா உறுதி செய்தார்.

இந்தச் செய்தியைக் கூறும்போது இவை எதற்காக என்று கேள்வி எழுந்தால், தேர்தல் வந்த பின்பு வாக்காளர்களைத் தேடிச் செல்லுதல் என்ற திட்டம் வெற்றிக்கு பெருந்துணை புரியாது.

மாறாக, தேர்தல் வருமுன்னரே திட்டம் தீட்ட வேண்டும். வாக்காளர்களுக்கு உண்மையை எடுத்துரைத்தல் அவசியம்.

தேர்தலில் வெற்றி பெறாமல் போவது எம் இனத்துக்குக் கேடாகும் என்று கருதினால், பல அணிகள் கூறுபடாமல் ஒன்றுபடுவதே நல்லது.

அனைவரும் ஒன்றுபட்டு ஓர் இலக்குடன் பயணிக்கும்போது அதற்கு மக்கள் நிச்சயம் தங்கள் ஆதரவை வழங்குவர்.

எனவே எவ்வாறு அப்படி ஒன்றுபடுவது என்று சிந்திப்பது தேர்தலில் வெற்றி பெறுவதற்கு மிகவும் முக்கியமானது என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

# காணாமல்போன குடும்பஸ்தர் காட்டுப்பகுதியில் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஆண்டாங்குளம் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் காணாமல்போய் சுமார் 37 நாட்களை கடந்த நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை மடு காட்டுப்பகுதியில் உருக்குலைந்த நிலையில் சடலமாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஆண்டாங்குளம் கிராமத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை சன் நீக்கிலாஸ் (வயது-56) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

ஆண்டாங்குளம் சந்தியில் முடி திருத்தகத்தை (சலூன்) நடத்தி வரும் குறித்த குடும்பஸ்தர் கடந்த 25-10-2017 அன்று மாலை 4 மணியளவில் காணாமல் போயுள்ளதாக அவரது மனைவி அடம்பன் பொலிஸ நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த நிலையில் அடம்பன் பொலிஸார் மற்றும் உறவினர்கள் குறித்த குடும்பஸ்தரை நீண்ட நாட்கள் தேடியும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் மன்னார்-மதவாச்சி பிரதான வீதி, மடு பூமலந்தான் கிராம அலுவலகர் பிரிவுக்குட்பட்ட மடு 3ஆம் கட்டை காட்டுப் பகுதியில் மிகவும் உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று காணப்படுவதாக மடு பொலிஸாருக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை தகவல் கிடைத்த நிலையில் மடு பொலிஸார் சடலத்தை சென்று பார்வையிட்டனர்.

இந்த நிலையில் குறித்த சடலத்தை நேற்று சனிக்கிழமை காலை பார்வையிட்ட காணாமல்போன குடும்பஸ்தரின் உறவினர்கள், சடலத்தை பார்வையிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டவர் காணாமல் போன ஆண்டாங்குளம் கிராமத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை சன் நீக்கிலாஸ் (வயது-56) என்பதனை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் மடு பொலிஸார், கிராம அலுவலகர் மற்றும் விசேட தடயவியல் நிபுணத்துவ பொலிஸார் ஆகியோர் சடலம் மீட்கப்பட்ட இடத்திற்கு வந்து சடலத்தை பார்வையிட்டதோடு, மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (ம-4,15)

## கே.பிக்கு எதிரான மனு நீதிமன்றத்தால் நிராகரிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச பொறுப்பாளர் குமரன் பத்மநாதனை கைது செய்ய வேண்டும் என்று ஜே.வி.பி தாக்கல் செய்திருந்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

7 கப்பல்கள், வெளிநாட்டு பணம், தங்கம் மற்றும் வெளிநாட்டு வங்கிக்கணக்குகள் என்பவை தொடர்பில் 193 குற்றச்சாட்டுக்களை முன்வைத்து ஜே.வி.பியின் பிரசார செயலர் விஜித ஹேரத் இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

ஏற்கெனவே இந்த வழக்கின் அடிப்படையில் கே.பி வெளிநாடு செல்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடையை விதித்திருந்தது.

எனினும் அந்த இடைக்கால தடையும் நீதிமன்றால் அகற்றப்பட்டுள்ளது. செய்தித்தாள்கள், இணையங்கள் உட்பட்ட பல்வேறு சான்றுகளை கொண்டே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இலங்கை கணக்காளர் சேவை நிறுத்தம் தொடர்பான கலந்துரையாடல்

இலங்கை கணக்காளர் சேவை தரம் III பரீட்சை எழுதி அதன் முடிவு வராத நிலையில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இல.163, 1ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள DCM கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்கு தோற்றி பாதிக்கப்பட்ட அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களுக்கு 0773734136 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (ம)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### குழந்தை துணிகளை வெளியில் காயப் போட்டால் பேய் பிசாசுகள் அண்டுமா?

அந்தக் காலத்தில் குழந்தை துணிகளை வெளியே உலர வைக்க போட்டால் பொழுது போவதற்குள் எடுத்து விடுவார்கள். காரணம் கேட்டால் பேய், பிசாசுகள் துணியை அண்டிக் கொள்ளும் என்பார்கள். மாலைநேரம் கழிந்து இரவு வரும் பொழுது விஷப்பூச்சிகள் குழந்தை துணியில் படிந்து விடும். இதைப் பார்க்காமல் மடித்து வைத்து குழந்தைக்கு உபயோகித்தால் கெடுதல் ஏற்படும். இரவு வருவதற்குள் துணியை எடுத்து விடவேண்டும். இல்லையேல் பேய் பிசாசு அண்டும் என்பார்கள். (தொடரும்)

## விசேட வழக்குகளை ஆராய 3 புதிய நீதிமன்றங்கள்

விசேட வழக்கு விசாரணைகளை துரிதமாக மேற்கொள்வதற்காக எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் மூன்று நீதிபதிகள் கொண்ட மூன்று நீதிமன்றங்களை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு விவகார அமைச்சர் தலதா அத்துகோரல இதனைத் தெரிவித்தார்.

நேற்றைய தினம் 400 மில்லியன் ரூபாய் செலவில் மாத்தளையில் நிர்மாணிக்கப்படவுள்ள புதிய நீதிமன்ற கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இந்த கருத்தை வெளியிட்டார்.

மகளிர் மற்றும் சிறார் துஷ்பிரயோகம் தொடர்பாக 19 ஆயிரம்முறைப்பாட்டு ஆவணங்கள் சட்டமா அதிபர் காரியாலயத்தில் கிடப்பில் உள்ளதாகவும், அவற்றை விசாரிப்பதற்கு தனியான பிரிவொன்றை ஆரம்பிக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் நீதிமன்ற அமைச்சின் செயலாளர் பத்மசிறி ஜயமான்ன, மேல் நீதிமன்ற நீதியரசர் சரோஜினி குசலா வீர்வர்தன, பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சனி அலுவிகார, விவசாய ராஜாங்க அமைச்சர் வசந்த அலுவிகார உள்ளிட்ட தரப்பினர் கலந்து கொண்டனர். (ம)

## நான் ஜனாதிபதி பதவியிலிருந்தால் பிரதமரை சாட்சிக்கூண்டில் ஏற இடமளித்திருக்கமாட்டேன் ;மகிந்த

(பேருவளை)

தாம் ஜனாதிபதியாக பதவி வகித்திருந்தால், எந்தவொரு சந்தர்ப்பத்திலும், பிரதமரை சாட்சிக்கூண்டில் ஏற இடமளித்திருக்க மாட்டேன் என நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பேருவளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த மூன்று ஆண்டுகளுக்கு பழிவாங்கல் செயற்பாடே இடம்பெற்றது. இந்த நிலையில், கடந்த கால பிணை முறிகள் தொடர்பில் அடுத்துள்ள இரண்டு ஆண்டுகளில் ஆராய உள்ளதாக கூறுகின்றனர்.


தற்போதைய ஆணைக் குழு அறிக்கை தொடர்பில் மிகவும் அவதானமாக இருப்பதாக மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். தாம் ஜனாதிபதியாக பதவி வகித்திருந்தால், தமது பிரதமருக்கு இவ்வாறு நேர்ந்திருந்தால், தாம் பிரதமரை அந்த இடத்திற்கு அனுப்ப அனுமதித்திருக்க மாட்டேன் என்று அவர் கூறியுள்ளார்.

பிரதமர் ஒருவர் உலகில் முதல் முறையாக சாட்சிக் கூண்டில் ஏறி, சாட்சியமளிப்பது பொருத்தமற்ற நடவடிக்கையாகும். எனவே, தயவு செய்து பதவி விலகிச் சென்று சாட்சியமளித்துவிட்டு வருமாறு தாம் கூறுவதாகவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஏனெனில் இதனை உலகம் அவதானித்துக் கொண்டிருக்கின்றது. நாட்டுக்கு முதலீட்டாளர்கள் வருவதில் சந்தேகத்தை ஏற்படுத்தும் என மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். (ம)

JSAC
பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்புச் செயற்பாடு (கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
16 2017
சம உரிமை பேண சகாப்தங்களாய் போராடும் பெண். உரிமை பேண பின் நிற்பதன் காரணம் தான் என்ன???
யாழ் சமூக செயற்பாட்டு மையம்

# பொன் விபுலாநந்தன் கூடைப்பந்தாட்டம் அடுத்த சுற்றில் நான்கு அணிகள் மோதல்



சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் மறைந்த பொன் விபுலாநந்தன் ஞாபகார்த்தமாக, வடமாகாண கூடைப்பந்தாட்ட கழகங்களுக்கிடையில் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி கடந்த முதலாம் திகதி வெள்ளிக்கிழமை முதல் நடத்தப்பட்டு வருகின்றது. இந்தச் சுற்றுப்போட்டியில், ஜொலி ஸ்ரார்ஸ், கொக்குவில் மத்திய சனசமூக நிலையம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், வவுனியா கழகம், பற்றீசியன், சென்றலைட்ஸ், ஸ்கந்தா ஆகிய 7 அணிகள் இந்தச் சுற்றுப்போட்டியில் பங்கு பற்றுகின்றன.

இந்தச் சுற்றுப்போட்டியின் ஆட்டங்கள் லீக் முறையில் நடைபெற்று, அரையிறுதி மற்றும் இறுதியாட்டங்கள் எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

**சென்றலைட்ஸ் அணி வெற்றி**

முதலாவது போட்டியில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து பற்றீசியன் அணி மோதியது. முதல் கால் பாதியில் இரண்டு அணிகளும் தலா 12 புள்ளிகளைப் பெற்றன. இரண்டாவது கால் பாதியில் சென்றலைட்ஸ் அணி, 12:08 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை பெற்றது. மூன்றாவது கால் பாதியையும், சென்றலைட்ஸ் அணி 16:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. தொடர்ந்து நான்காவது பாதியையும் சிறப்பாக ஆடிய சென்றலைட்ஸ் அணி அந்தச் சுற்றை 23:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. முடிவில் சென்றலைட்ஸ் அணி 63:44 என்ற மொத்தப் புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

**கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி வெற்றி**

இரண்டாவது போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியை எதிர்த்து வவுனியா விளையாட்டுக்கழகம் மோதியது. முதல் கால் பாதியாட்டத்தில் மிகச் சிறப்பாக ஆடிய வவுனியா அணி 22:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. எனினும், இரண்டாவது கால் பாதியில் விட்டுக் கொடுக்காது ஆடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி அதனை 25:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. மூன்றாவது சுற்றில் போராட்டத்தை வெளிப்படுத்திய வவுனியா அணி அந்தச் சுற்றை ஆதிக்கம் செலுத்தி 20:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. தீர்க்கமான நான்காவது சுற்றில் கொக்குவில் அணி 23:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. முடிவில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி 75:64 என்ற மொத்தப் புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது.


**ஜொலிஸ்ரார்ஸ் அணி வெற்றி பெற்றது**

மூன்றாவது போட்டியில் ஜொலிஸ்ரார்ஸ் அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி மோதியது. முதல் கால் பாதியில் ஜொலிஸ்ரார்ஸ் அணி 13:09 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. இரண்டாவது கால் பாதியிலும் ஜொலிஸ்ரார்ஸ் அணி 17:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. மூன்றாவது சுற்றில் ஜொலிஸ்ரார்ஸ் அணி 13:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. நான்காவது சுற்றையும் அதே உத்வேகத்துடன் ஆடி 15:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. முடிவில் ஜொலிஸ்ரார்ஸ் அணி 58:42 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது.

**வவுனியா விளையாட்டுக் கழகம் வெற்றி**

நான்காவது போட்டியில் வவுனியா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி மோதியது. முதல் கால் பாதியாட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 09:08 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. இரண்டாவது கால் பாதியில் வவுனியா அணி 06:04 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. மூன்றாவது சுற்றை வவுனியா அணி 18:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. நான்காவது சுற்றை 15:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. முடிவில் வவுனியா அணி 48:41 என்ற மொத்த புள்ளிகள் அடிப்படையில் வென்றது. (க-26)





2017 இற்கான இலங்கை தேசிய ரீதியிலான கராத்தே சுற்றுப் போட்டி 28 ஆம் திகதி கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் நடை பெற்றது. இப் போட்டியில் திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த எஸ்.கமல்ராஜ் 21 வயதிற்கான 55-60 கிலோ பிரிவில் குமித்தே போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார். இப் போட்டியில் இவ் இல்லத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு 5 பதக்கங்கள் கிடைத்துள்ளன. இவருடன் பயிற்சி ஆசிரியர் சென்சே விஜயராஜையும் படங்களில் காணலாம்.

# முல்லை.வர்ண இரவு விருது விழாவில் சாதனை வீரர்கள் கௌரவிப்பு

முல்லைத்தீவு மாவட்ட செயலக ஊழியர் நலன்புரி சங்கமும், முல்லைத்தீவு மாவட்ட செயலக விளையாட்டு பிரிவினரும் இணைந்து "வர்ண இரவு" என்னும் விருது வழங்கும் விழாவில் நடப்பாண்டுக்குரிய முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் வெற்றிக் கிண்ண பரிசளிப்பும், மாவட்ட விளையாட்டு வீரர்கள் கௌரவிப்பும் நடைபெறவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட செயலக ஊழியர் நலன்புரி சங்க தலைவர் ஜெகதீசன் - கோபிநாத் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 5.30 மணியளவில் முல்லைத்தீவு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கலந்து கொண்டு வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளுக்கு சான்றிதழ்களையும், பரிசில்களையும் வழங்கி கௌரவிக்கவுள்ளார். விருந்தினராக இலங்கை சார்பில் முதன்முதலாக ஒலிம்பிக் போட்டியில் பங்கு கொண்டு உயரம் பாய்தல் போட்டியில் வெற்றியீட்டிய சாதனையாளர் எதிர்வீரசிங்க கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்காக அயராது உழைத்த 28 சாதனையாளர்களையும் மற்றும் முல்லைத்தீவு மாவட்டம் சார்பாக மாகாண மட்டம், தேசிய மட்டங்களில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொண்டு வெற்றியீட்டிய 25 வீர, வீராங்கனைகள் உட்பட இவர்களைப் பயிற்றுவித்த பயிற்சியாளர்களும் மற்றும் அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்தில் வெற்றியீட்டிய வீர,வீராங்கனைகளுமாக சுமார் 150 இற்கு மேற்பட்ட சாதனையாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட செயலக ஊழியர் நலன்புரிச் சங்க தலைவர் தெரிவித்துள்ளார். (க-15)



2017 இற்கான இலங்கை தேசிய ரீதியிலான கராத்தே சுற்றுப் போட்டி 11,12 ஆம் திகதிகளில் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இப் போட்டியில் பள்ளிக்குடா பூநகரியைச் சேர்ந்த ஐ.ஜெனிஸ்ரன் 11 வயதுப் பிரிவு குமித்தே போட்டியில் தங்கப் பதக்கமும் A. ஜெனிஸ்ரலா 8 வயதுப் பிரிவு காட்டா போட்டியில் தங்கப் பதக்கமும் வென்று சாதனை படைத்துள்ளனர்.

# ஆண்டுக்கு இரண்டு கோடி சம்பளம் பெறப்போகும் இந்திய வீரர்கள்

இந்திய கிரிக்கெட் அணி வீரர்களுக்கு ஏ, பி, சி என மூன்று தரமாக பிரித்து ஊதியம் கொடுக்கப்படும்.

'ஏ' கிரேடு வீரர்களுக்கு ஆண்டுக்கு ரூ.2 கோடியும், 'பி' பிரிவில் உள்ளவர்களுக்கு ரூ.1 கோடியும், 'சி' பிரிவில் இடம் பெறும் வீரர்களுக்கு ரூ.50 லட்சமும் வழங்கப்படுகிறது.

வீரர்களின் ஊதிய ஒப்பந்தம் கடந்த செப்டெம்பர் மாதத்துடன் முடிவடைந்தது. அதை இப்போது புதுப்பிக்க வேண்டும்.

இதே போல் ஒரு டெஸ்ட் போட்டிக்கு ரூ.15 இலட்சமும், ஒரு நாள் போட்டிக்கு ரூ.6 இலட்சமும், 20 ஓவர் போட்டி ஒன்றுக்கு ரூ.3 இலட்சமும் வீரர்களுக்கு போட்டி கட்டணமாக வழங்கப்படுகிறது.

அணிக்கு தேர்வாகி களம் இறங்க வாய்ப்பு கிடைக்காத வீரர்களுக்கு அந்த தொகையில் பாதி கிடைக்கும்.

இந்த நிலையில் கிரிக்கெட் வாரியத்தின் வருமானம் அதிகரித்து கொண்டே போவதால், தங்களது ஊதியத்தையும் உயர்த்தி தர வேண்டும் என்று சில மாதங்களாகவே இந்திய வீரர்கள் தரப்பில் வலியுறுத்தப்பட்டு வருகிறது.



முன்னாள் பயிற்சியாளர் அனில் கும்பிளே, 'ஏ' கிரேடு வீரர்களுக்குரிய சம்பளத்தை ரூ.5 கோடியாக உயர்த்த வேண்டும் என்று முறையிட்டார்.

வீரர்களுக்கு இழப்பீட்டு தொகை வழங்குவதற்கும், அதை ஊதிய ஒப்பந்தத்தில் இடம் பெறச் செய்வதற்கும் கொள்கை அளவில் நிர்வாக கமிட்டி ஒப்புக்கொண்டது. இந்த சந்திப்பு ஆக்கபூர்வமாக இருந்ததாக வினோத்ராய் குறிப்பிட்டார். (க)

## குடும்பஸ்தர் சடல...

உள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

இதில் கண்டி தலதோய என்ற இடத்தைச் சேர்ந்த மலயன்-பாலசுப்பிரமணியம் (வயது 44) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் தெல்லிப்பழை வைத்தியசாலை திடீர் மரண விசாணை அதிகாரி எஸ்.பாஸ்கரன் சடலத்தை நேரில் சென்று பார்வையிட்டதுடன் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-78)

## பட்டப் பகலில் வீடு...

கடந்த வியாழக்கிழமை நாகர்கோவில் கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற இத்திருட்டு தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

வீட்டில் உள்ளோர் பிற்பகல் 1.00 மணியளவில் வீட்டினைப் பூட்டிவிட்டு அயலில் உள்ள வீடு ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வுக்கு சென்று விட்டு திரும்பி வந்த போது வீடு உடைக்கப்பட்டு திருட்டு இடம்பெற்றமை தெரியவந்தது.

வீட்டின் அறையில் வைக்கப்பட்டிருந்த பையில் இருந்த 35 பவுண் நகை மற்றும் 28 ஆயிரம் ரூபாய் பணமும் பேஸ் ஒன்றில இருந்த 7500 ரூபாய் பணமும் திருடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-60)

## அத்துமீறி மீன்...

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 20 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணம் பருத்தித்துறை கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போதே இவ் 20 மீனவர்களையும் கடற்படையினர் கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் தமிழ் நாடு நாகை மாவட்டத்தை சேர்ந்தவர்கள் எனவும் இவர்களிடமிருந்து இரண்டு இழுவை படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மேலும் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களிடம் கடற்படையினர் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டதை தொடர்ந்து அவர்களை யாழ்.நீரியல்வளத்துறையினரிடம் ஒப்படைத்திருந்தார்கள். இதனை தொடர்ந்து அங்கு அவர்கள் தொடர்பான பதிவுகள் மேற்கொண்டதையடுத்து அவர்களை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-4)

## உள்ளூராட்சி மன்ற...

93 உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கான வேட்புமனுக் கோரலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வர்த்தமானிக்கு எதிரான மனு மீளப்பெறப்பட்டதையடுத்து, அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் ஒரே தினத்தில் தேர்தலை நடத்துவதற்கு இருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப குறைபாடு தொடர்பாக 40 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட உள்ளது.

அடுத்த வாரம் முற்பகுதியில் குறித்த பணிகள் இடம்பெறும் எனத் தாம் எதிர்பார்ப்பதாக ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அவ்வாறு இடம்பெற்றால், ஒரே தினத்தில் தேர்தலை நடத்தும் வாய்ப்பு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கும்.

எனவே, ஜனநாயகத்தின் அடிப்படை அங்கத்தை பாதுகாத்து, நாட்டு மக்கள் தமது பிரதேச பிரதிநிதிகளை தெரிவுசெய்ய எதிர்வரும் ஜனவரி மாத இறுதி அல்லது பெப்ரவரி மாத முற்பகுதியில் சந்தர்ப்பம் கிட்டும் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (ம)

## கூட்டு எதிரணி...

அவர் இதனை கூறினார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், கூட்டு எதிரணியுடன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இணைந்து உள்ளூராட்சிமன்ற தேர்தலில் போட்டியிடுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் குறிப்பிட்டார்.

எவ்வாறு மூடர்களுடன் இணைந்து செயற்படுவது என கேள்வி எழுப்பியுள்ள அவர், தமது ஆட்சி காலத்தில் அவ்வாறானவர்களுக்கு ஒருபோதும் சந்தர்ப்பம் அளிக்கவில்லை எனவும் கூறினார். (ம)

## திருக்கார்த்திகை...

துடன் கொள்வனவு செய்து வருகின்றனர்.

யாழ் திருநெல்வேலி மற்றும் யாழ் நகர் கடைத்தொகுதிகளில் இவ்வாறான விளக்கு சிட்டிகளை மக்கள் ஆர்வத்துடன் கொள்வனவு செய்து வருகின்றனர்.

விளக்கீட்டு நாளன்று வீட்டு வாசலில் வாழைக்குற்றி நாட்டி வைத்து அதன் மேல் தீப்பந்தம் ஏற்றியும் வீடுகளுக்குள்ளும் வெளியிலும் சிட்டி விளக்குகளில் தீபமேற்றி நேர்த்தியாக அலங்கரித்து வீடுகளை தீபங்களால் அழகுபடுத்தி மக்கள் வழிபடுவர்.

ஆலயங்களின் முன்புறத்தே வாழைமரம் நட்டு தென்னோலைகளால் அதனை சுற்றி அடைத்து சொக்கப்பானைக்குள் அக்கினியிட்டு ஜோதி வடிவாகக் காட்சியளிக்கச் செய்து சிவபெருமான் ஜோதிப்பிழம்பாகத் தோன்றிய காட்சியை நினைவு கூர்ந்து இன்றைய நாளினை மக்கள் வழிபடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## சுகவீனம் காரண...

றுள்ளது.

இதில் அதே பகுதியினை சேர்ந்த செல்வரத்தினம் மாதவன் (வயது 08) என்ற பாடசாலை மாணவனே உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவன் வைத்தியசாலைக்கு செல்லும் வழியில் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (ம-60)

## ஓகி புயலினால் ஏற்...

எது. 16 மாவட்டங்களை சேர்ந்த 5,435 பேர் இவ்வாறு தற்காலிக நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கும் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் இந்த நடவடிக்கை இடம்பெறுவதாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு அநீதிகள் இழைக்கப்படுமாயின் 117 என்ற இடர் முகாமைத்துவ நிலையத்தின் துரித இலக்கத்திற்கு அறிவிக்க முடியும்.

இதேவேளை மழை குறைவடைந்த வேளையிலும் கிழக்கு மாகாணம் உள்ளிட்ட நாட்டின் சில பகுதிகளில் பலத்த காற்று வீசுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## படையினருக்கு...

மேலும் இலங்கையின் படையினருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் போர்க்குற்றச் சாட்டுகளை மறுக்கும் வகையில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு தொடர்ந்தும் உதவப் போவதாக பிரித்தானிய பிரபுக்கள் சபையின் உறுப்பினர் நேஸ்பி தெரிவித்துள்ளார்.

அண்மையில் தம்மை சந்தித்த சர்வதேச இலங்கை பேரவை உறுப்பினர்களிடம் அவர் இந்த உறுதிமொழியை அளித்துள்ளார்.

இந்த சந்திப்பு பிரித்தானிய நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

இதில் இலங்கை பேரவையின் குழுவில் பிரசங்க ஜெயமான்ன, ஜெயராஜ் பலிஹவர்த்தன, வியட்நாமுக்கான முன்னாள் இலங்கை தூதர் இவான் அமரசிங்க ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

2009ஆம் ஆண்டு இறுதிப்போரின் போது 40ஆயிரம் பொதுமக்கள் இலக்கு வைத்து படையினரால் கொல்லப்பட்டனர் என்ற அடிப்படையிலேயே இலங்கையின் நல்லிணக்க நடவடிக்கைகளுக்கான பொறிமுறை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எனினும் படையினர் பொதுமக்களை இலக்கு வைத்து தாக்கவில்லை. அத்துடன் போரின்போது 7000- 8000 பொதுமக்களே கொல்லப்பட்டனர் என்பது நேஸ்பியின் வாதமாகும்.

இந்தக்கூற்றை வலியுறுத்தும் வகையிலேயே இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான அமைப்புக்கள் நேஸ்பிக்கு தமது ஒத்துழைப்பை வழங்கி வருகின்றன. (ம)

## 20 கட்சிகளுடன்...

எதிரணியை கூட்டு பொதுஜன முன்னணி (Joint Podujana Peramuna -JPP) என்ற புதிய அரசியல் கூட்டணியாக உருவாக்க, பொதுஜன முன்னணி முடிவு செய்துள்ளது.

20 அரசியல் கட்சிகள் அடங்கிய இந்தக் கூட்டணி, மலர் மொட்டு சின்னத்தில், வடக்கு, கிழக்கு உள்ளிட்ட அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் போட்டியிடவுள்ளது.

கூட்டு எதிரணியில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் இந்த கூட்டு பொதுஜன முன்னணியில் இணைந்து கொள்ள இணங்கியுள்ளதாகவும், இதுதொடர்பான உடன்பாடு ஏற்கெனவே, கையெழுத்திடப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கூட்டு பொதுஜன முன்னணியின் முதலாவது பரப்புரைக் கூட்டம் நாளை மறுநாள், பதுளை வின்சன்ட் டயஸ் மைதானத்தில் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ளது. (ம)

## அமைச்சரவைக்குள்...

டுள்ளதால், ஐக்கிய தேசிய கட்சி தனியாக ஆட்சி அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள நிலையில் புதிய அரசாங்கத்தில் கூட்டமைப்பையும் உள்ளீர்க்கும் முயற்சிகளில் தற்போதைய சிறுபான்மை அமைச்சர்கள் சிலர் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும் அதனை, இலங்கைத் தமிழர் விடயத்தில் ஆதிக்கம் செலுத்துகின்ற அயல் நாடொன்று விரும்புவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் கூட்டமைப்பு தலைமை சாதகமான முடிவெடுக்கும் பட்சத்தில் நான்கு அமைச்சு பொறுப்புக்கள் வழங்குவதற்கு ஐ.தே.க தயாராக இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும், இவ்விடயத்தில் கூட்டமைப்பு தலைமை தீவிரமாக ஆலோசித்து வருவதாகவும், உடனடியாக தீர்மானிக்க முடியாது என சம்பந்தப்பட்டவர்களிடம் தீர்க்கமான முடிவுகளை மேற்கொள்ளக்கூடிய கூட்டமைப்பின் தற்போதைய தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

நல்லாட்சி அரசாங்கத்தில் அங்கம் வகித்துவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பொது எதிரணியுடன் இணைந்துக் கொள்வது தொடர்பில் தீவிரமான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்ற நிலையில், அவ்வாறான நிலை ஏற்படுமானால் நல்லாட்சியிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வெளியே வரவேண்டிய அரசியல் புயலொன்று தலைநகரில் மையம் கொண்டுள்ளது. (ம)

## யாழ்.பண்ணையில்...

குறித்த விடுதி யாழ்ப்பாணம்-காரைநகர் வீதியில் பண்ணை கடற்கரைப் பகுதியை அண்டி யாழ்.சிறைச்சாலைக்கு அருகில் அமைக்கப்பட்டு வருகின்றது.

குறித்த விடுதி 40 அறைகளைக் கொண்ட சகல நவீன வசதிகளுடன் மக்கள் பயன்படுத்தும் விதமாக அமையவுள்ளதோடு தற்போது முதற்கட்ட கட்டுமானங்கள் குறித்த கடற்கரை பகுதியில் மண் நிரப்பப்பட்டு 60 மில்லியன் ரூபாயில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் குறித்த ஓய்வு விடுதியின் கட்டுமானங்கள் 300 மில்லியன் ரூபாயில் மேற்கொள்ளப்பட்டு அழகிய இரண்டுமாடிக் கட்டடத்துடன் அமையவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பண்ணை சுற்றுலாக் கடற்கரையை அண்டி அமையவுள்ள இவ் ஓய்வு விடுதியால் மிகுந்த பயனை சுற்றுலா வாசிகள் பெறுவதோடு யாழ்.மாவட்ட சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கும் இவ் விடுதியானது பங்களிப்பு செய்யுமென எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

ஏற்கனவே மண்கும்பான் பகுதியில் அரச பொது ஓய்வுவிடுதி அமைக்கப்பட்டு செயப்பட்டுவரும் நிலையில் மக்களுக்கான அரச பொது விடுதி அமைக்கப்படுவது பாரிய நன்மைகளை பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மரண அறிவித்தல்

## கணபதி பாலசங்கர்



குடத்தனை கிழக்கு குடத்தனையை பிறப்பிடமாகவும் பூநகரி பரமன் கிராய் வில்லடியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி பாலசங்கர் 02.12.2017 நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதி-சிவபாக்கியம் அவர்களின் பாசமிகு புதல்வனும், புஸ்பராணி அவர்களின் பாசமிகு கணவரும், அமரர் கணபதிமுருகன்-சீதேவி அவர்களின் மருமகனும், அமரர் துஸ்யந்தன் மற்றும் துஷி, தனுசியன், கீர்த்தனா, நிறஞ்சனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாக்கியராசா, உதயகுமார், சாந்தகுமாரி, வசந்தகுமாரி, அமரர்களான பாக்கியநாதன், நந்தகுமார், உதயகுமாரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று 03.12.2017 ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூநகரி பரமன் கிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பரமன் கிராய் வில்லடி,
பூநகரி.

தகவல்:-குடும்பத்தினர்
0776304186

(1558)

## வீடு வளவு விற்பனைக்கு

யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு அண்மையில் அரசடி வீதியில் 3 1/2 பரப்பிலமைந்த வீடுவளவு விற்பனைக்குண்டு.

**077 559 0577**

(1554) தரகர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம்.

## CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.




CNR World Wide Express
இல.401. மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us cnrworldwideexpress

(C-559)

நல்லூர் - அரியாலை.

## புதிய கல்வியாண்டு - 2018

### தரமான கல்வியுடன் ஆரம்பமாகின்றது!

40 வருடங்களுக்கு மேலான கல்விப் பாரம்பரியத்தில் என்றும் முன்னணியில் திகழும் எமது நிறுவனம் அனேக பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க புதிய கல்வியாண்டில் மாணவர்களை இணைத்துக்கொள்கின்றது.
நிகரற்ற சிறப்பான நிர்வாகக் கட்டமைப்பின்கீழ்
முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த வழிகாட்டலில்

| தமிழ்மொழி மூல வகுப்புக்கள் தரம் 6 முதல் **O/L** வரை | English Medium Classes **Gr. 6 - O/L** |
|---|---|

**வெற்றித்தேர்வு ஆரம்பக் கல்விப்பிரிவு**
வெற்றித்தேர்வு பரீட்சைகளோடு
வெற்றித்தேர்வு வளவாளர்களுடன்
யாழ். முன்னணி ஆசிரியர்களின் சிறப்பான வழிகாட்டலில்

**தரம் 1 முதல் தரம் 5 வரை**

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
**06.12.2017 புதன்கிழமை பி.ப 4.00 மணி**

**அனுமதிகள் வழங்கப்படுகின்றன.**

(C-573)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

EXPRESS Courier Services

**அண்ணா பொதிகள் சேவை**
976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | ஊர்காவற்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா | திருகோணமலை

(C-541)

## Business English /Spoken English

For those working, migrating & others.
**Time:** 3 days a week 8.30am to12.30pm
**Duration:** 01 month : **Starting** Dec. 6th
**Total:** learning hrs: 40 **Fees;** Rs;2,000/
நேரடித்தேர்வுக்கு Dec , 5th & 6th 9 to 12 noon
விபரங்களுக்கு இயக்குனர் NTI, 077 650 5580
**Northern Technical Institute (NTI) 2nd floor, YMCA Building, 107,2/1 Kandy Rd, Jaffna.**

(1542)

## விசேட விலைக்கழிவு!!!




Lanka Wall Tiles, Floor Tiles,
கொமட்வகைகள், குளியலறை சாதனங்கள், மற்றும் பெயின்ற் வகைகள் ஏகவிநியோகஸ்தர்

## நியூ கமல் செரமிக்ஸ்

இல. 37, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
T.P : 021 222 2085, 021 221 9305
Fax : 021 222 4544
(நிபந்தனைக்குட்பட்டது)
(1544)

## வீடு விற்பனைக்கு

புட்டளை புலோலி பாடசாலைக்கு அருகாமையில் 3 1/2 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.
(1553)

**தொடர்பு : 077 229 9847**

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

(C-560)

**UK-550*/=Kg**
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)

**V2 TRAVELS-0768226240**
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

## சீரடி பாபா யாத்திரை

நாட்கள் 5, ஆரம்பம் - 24.12.2017
சீரடி - 2 நாள், சனி சிங்கநாப்பூர், சென்னையில் ஒருநாள் சொப்பிங், உணவு, போக்குவரத்து மற்றும் அனைத்துச் செலவுகளும் உட்பட...
விபரம் கேட்டறிக!

**தொடர்புகளுக்கு : கலாநிதி ஸ்ரீறெங்கநாதன்**
**0777 680 102**
(C-567)

## வகுப்புக்கள்

தரம் 4 மற்றும் தரம் 5 இற்கான புதிய குழு வகுப்புக்கள் ஆரம்பம். "மெல்லக் கற்கும்" மாணவர்களுக்கு மட்டுமேயான வகுப்புக்கள். புலமைப் பரிசில் பரீட்சையை அடிப்படையாக கொண்டது. ஒவ்வொரு மாணவரின் மீதும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படுவதனால் மட்டுப்படுத்தப்பட்ட மாணவர் அனுமதி. மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் : (075 333 9904)
இல: 234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(C-571)

# NEW SUN CERAMICS (PVT) LTD

**Importers of Wall Tiles, Floor Tiles & Sanitary Ware, Plumbing Fixtures**



**எமது மக்களுக்கு வழங்கும் நத்தார், புதுவருட விசேட விலைக்கழிவு**

நீங்கள் எங்கும் கண்டிராத எண்ணிப்பார்க்க முடியாத பல புதிய வடிவங்களிலான Floor Tiles, Walltiles மற்றும் குளியலறை சாதனங்கள் போன்றவற்றை மகத்தான விலைக்கழிவில் உங்கள் எண்ணம் போல் நேர்த்தியானதும் தரமானதாகவும் பொருட்களைப் பெற்றுக்கொண்டு அதிஷ்ட பரிசுகளை பெற்றுக்கொள்ளலாம்...



இருப்பு இருக்கும் வரை இந்த சலுகை வழங்கப்படும். நீங்களும் இன்றே பங்குபற்றி அதிஷ்ட பரிசில்களைப் பெறுங்கள்.







NEW SUN CERAMICS (PVT) LTD
A9, KANDY ROAD,
KILINOCHCHI
(OPPOSITE) TO THE OLD HOSPITAL





நியூ சண் செரமிக்ஸ் பிறைவேட் லிமிடெட்
ஏ9, கண்டி வீதி, கிளிநொச்சி (பழைய வைத்தியசாலை முன்பாக)
(1526)

**TEL : No : 021 228 3872**


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.12.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 145

வள்ளுவர் ஆண்டு 2048 03.12.2017 தொலைபேசி : 021 222 3378








# நெக்குருகும் நினைவேந்தல்



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# நல்லாட்சி முடிவுக்கு வந்தால் தமிழர்களின் நிலை என்னவாகும்?

நம்பிக்கை என்பது காப்பாற்றப்பட வேண்டிய மிக உயர்ந்த அறம். நம்பிக்கைத் துரோகம் செய்தவர்கள் பின்னாளில் மிகப்பெரும் துன்பங்களை அனுபவித்ததோடு மனதளவில் தங்கள் துரோகத்தனத்தை நினைந்து நினைந்து வருந்தியதுமுண்டு.



எனினும் நம்பிக்கை என்ற விடயம் பற்றிப் பலரும் நினைத்துப் பார்ப்பதில்லை.

செய்ந்நன்றி மறந்தவர்களுக்குக்கூட உய்வு ஏற்படலாம். ஆனால் நம்பிக்கைத் துரோகம் இழைத்தவர்களுக்கு இந்தப் பிறப்பில் உய்வில்லை என்பதே உண்மை.

நம்பிக்கை பற்றியும் நம்பிக்கைத் துரோகம் பற்றியும் இங்கு நாம் பிரஸ்தாபிக்கும்போது, எதற்காக என்று பலரும் கேட்கலாம். அவ்வாறானதொரு கேள்வி ஏற்படும் போது எல்லாவற்றுக்கும் காரணம் உண்டு என்பதைச் சொல்லித்தானாக வேண்டும்.

வன்னியில் நடந்த இறுதிப்போரின் போது படையினர் பக்கம் சிலர் செல்கின்றனர். எங்கள் உயிருக்கு உத்தரவாதம் கிடைக்கும். எங்கள் பிள்ளைகளுக்கும் குடும்ப உறவுகளுக்கும் பாதுகாப்புக் கொடுப்பார்கள் என்ற ஒரே நம்பிக்கையுடன்தான் அவ்வாறான நிகழ்வு நடக்கிறது. படையினரிடம் சரணடைந்த அல்லது ஒப்படைக்கப்படுதல் என்ற நிகழ்வில் மதத் தலைவர்கள், குடும்ப உறுப்பினர்கள்கூட பிரசன்னமாகியிருந்தனர்.

ஆனால் நடந்தது என்ன. உயிரைப் பாதுகாப்பார்கள் என்று யாரை நம்பினார்களோ அவர்களே உயிர் எடுப்பவர்களாக மாறினார்கள்.

காணாமல் போனவர்கள் எவரும் எம்மிடம் இல்லை. எங்களிடம் சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது என்பதும் தெரியாது என்ற பதில் இன பேதத்தின் உச்சமான வக்கிரம் எனலாம்.

இந்த வக்கிரம் நடந்தாயிற்று. ஆனால் இதனைச் செய்தவர்கள், செய்வித்தவர்கள், உடந்தையாக இருந்தவர்கள் என அத்தனை பேரும் நம்பிக்கைத் துரோகத்திற்கான தண்டனையை அனுபவித்தே ஆக வேண்டும்.

சிலவேளை அவர்கள் இப்போதுகூட அந்தத் தண்டனைகளை அனுபவிக்க நேர்ந்திருக்கலாம். எது எவ்வாறாயினும் புத்த பிரானின் போதனைகளைப் பின்பற்றுகின்றோம் என்று கூறிய வண்ணம் தமிழ் இனத்தைக் கொன்றொழித்த மாபாவத்தைப் பேரினவாதிகள் தின்று தீர்த்துக் கட்ட பல ஆண்டுகள் ஆகும் என்பது நிறுதிட்டமான உண்மை.

இது போலவே தமிழ் மக்கள் நம்பி வாக்களிக்க அந்த மக்களுக்கே பாதகம் செய்யும் தமிழ்த் தலைமையும் நம்பிக்கைத் துரோகத்திற்கான அத்தனை அனுபவிப்புக்களையும் சுமக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.




விடுதலைப் போராட்டத்தின்மூலம் எங்களுக்கான உரிமை கிடைக்கும் என்று நம்பினோம். அந்த நம்பிக்கை நிறைவேறாமல் போயிற்று.

சரி, எங்கள் இனத்திற்காக, எங்கள் மொழிக்காக தமிழ் அரசியல் தலைமை ஒரு சரியான பாதையை அமைத்துக் கொண்டு செயற்படும் என நம்பினோம். அதற்காக தமிழ்மக்கள் தங்கள் ஆணையை வழங்கினார்கள்.

எனினும் தமிழ் மக்களின் நம்பிக்கையைத் தகர்த்தெறிந்து அந்த மக்களுக்குத் துரோகம் செய்யும் அளவில் அரசாங்கத்துடன் சேர்ந்து தமிழ் மக்களின் அத்தனை அபிலாசைகளும் எதிர்பார்ப்புக்களும் புதைகுழி தோண்டிப் புதைக்கப்படுமளவில் நிலைமை ஆகியுள்ளது.

போரில் தோற்றவர்கள் அடங்கிப் போகவேண்டும் என்பது போல காட்டிக்கொண்டு எங்களை நாங்களே இழிவுபடுத்துகிறோம் என்றால் தமிழினத்தின் எதிர்காலம் என்பது சூனியமாகவே இருக்கும் என்று எதிர்வு கூறுவதில் தவறில்லை.

நல்லாட்சி எங்களுக்கு உரிமை தரும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை நம்புகிறது. சில இடங்களில் நல்லாட்சி எல்லாம் தந்துவிட்டது போலவும் கூட்டமைப்பு காட்டிக் கொள்கிறது.

அரசாங்கத்திற்கு வழங்கிய உத்தரவாதங்கள் அவ்வாறு செய்ய வைத்தாலும் நல்லாட்சி தள்ளாடுகிறது என்பதைக்கூட புரிந்துகொள்ள முடியாத மாயைக்குள் கூட்டமைப்பின் தலைமை சிக்குண்டிருப்பதுதான் வேதனையிலும் வேதனை.

ஆம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தரப்பிற்கும் பிரமதர் ரணில் விக்கிரமசிங்க தரப்பிற்குமிடையில் கடும் இழுபறி ஏற்பட்டு விட்டது. தாம் பயணிக்கும் பாதை கல்லும் முள்ளும் நிறைந்தது என்பதை ஏற்றுக்கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எனினும் ஜனாதிபதி மைத்திரியுடன் முரண்பாடில்லை என்கிறார்.

அதேவேளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோ 2017 டிசெம்பர் மாதம் வரையேனும் ஆட்சியைச் செம்மையாக நடத்த ஒத்துழையுங்கள் என்கிறார்.

அப்படியானால் நல்லாட்சியின் ஆயுள் நீண்டதாக இல்லை என்பது உறுதியாகிறது. நல்லாட்சியின் ஆயுள் முடிந்துவிட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை தமிழ் மக்களுக்கு எதனைப் பெற்றுக் கொடுக்கும் என்று ஒரு கணம் சிந்தித்தால் தமிழ்மக்கள் பாவங்கள் என்று சொல்வதைத் தவிர வேறு எதுவும் கூற முடியாத ஒரு துன்பகரமான சூழ்நிலையே ஏற்படும்.

ஆகையால் தமிழ் அரசியல் தலைமை இனியேனும் தமிழ்மக்களின் உரிமை நலன்சார்ந்து சிந்திப்பது மிகமிக அவசியமாகும்.

விதுரன்

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் அறிவிக்க அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

மாவீரர் தினம் முடிந்திருந்தாலும் விதானையார் விசுவலிங்கத்தின் முகத்தில் சோக இழை ஓடிய வண்ணம் இருந்தது.

விதானையாரின் மூத்த மகன் மாவீரர். ஒவ்வொரு மாவீரர் தினத்திலும் ஈகச்சுடர் ஏந்தி மாவீரர்களை நினைவேந்துவதில் விதானையார் ஒருபோதும் சளைக்கவில்லை. தமிழ் அரசியலில விதானையாருக்கு உடன்பாடில்லை. எங்கட ஆயிரக்கணக்கான பிள்ளைகள் செய்த தியாகத்திற்கு நேர்மறையாக எங்கட அரசியல் தலைவர்கள் நடந்து கொள்கின்றனர் என்ற வேதனையாலேயே விதானையார் விசுவலிங்கத்தின் உடம்பு ஏகப்பட்ட நோய்களைத் தாங்கி நிற்கிறது.

என்ன செய்வது பல்லாயிரக்கணக்கான தமிழ்ப் பிள்ளைகள்; தமிழன் வாழ, தமிழ்மொழி வாழ தங்கட உயிர்களையே தியாகம் செய்து போட்டினம். ஆனல் அந்தத் தியாகத்தை தமிழ் அரசியல் தலைவர்கள் தங்கட தேர்தல் விளம்பரமாகப் பயன்படுத்துவதால விதானையாருக்குக் கடும் கோபம்.

இது விதானையாருக்கு மட்டுமல்ல ஒவ்வொரு மாவீரர்களின் பெற்றோருக்கும் உறவுகளுக்கும் இதே நிலைதான்.

ஆலடி மாநாட்டில் விதானையார் விசுவலிங்கம் இருந்தாலும் அவரின் நினைவெல்லாம் தன் மகன் பற்றியதும் மாவீரர்தின நிகழ்வு பற்றியதுமாகவே இருந்தது.


இந்த நிலைமையை ஆலடியில் இருந்த அத்தனை பேரும் உணர்ந்து கொண்டனர்.

விதானையாரை ஆற்றுப்படுத்த பண்டிதர் பரமலிங்கம் முற்பட்டார்.

**பண்டிதர்:** விதானையார் மாவீரர் தினத்திற்காக கோப்பாய்க்குப் போன னீங்க. எப்படி இருந்தது.

**விதானையார்:** என்ர பிள்ளையின்ர உடல் விதைக்கப்பட்ட இடத்தில இப்ப இராணுவ முகாம் இருக்குது. இறந்தவர்களின் கல்லறைகள் வழிபாட்டிற்குரிய இடங்கள்.போரிலே இறந்த எதிர்ப்படையாக இருந்தாலும் இந்தப் பண்பாட்டைப் பின்பற்றுவதுதான் மனித நேயம்.

ஆனால் எங்கட மண்ணில எங்கட பிள்ளைகளின்ர கல்லறை இருந்த



## 2010 இல் படையினர் சுற்றிவளைத்தது இப்ப போல இருக்குது

இடங்களை அழித்துப்போட்டு அதில இராணுவ முகாம் அமைத்திருக்கிற அநியாயத்தை துட்டகைமுனுவின்ர சொந்தக்காரர்கள் செய்திருக்கினம்.

**சாத்திரியார்:** விதானையார் சொல்லுறதில எவ்வளவோ உண்மை இருக்குது. கோப்பாய் பகுதியில் உயிரிழந்த இந்திய அமைதிப் படை வீரருக்கு கல்லறை கட்டி அந்த இடத்திற்கு இந்திய இராணுவ அதிகாரி வந்து அஞ்சலியும் செலுத்திப் போட்டுப் போயிருக்கிறார்.

ஆனால் எந்தையும் தாயும் அவர் முந்தையரும் வாழ்ந்த கோப்பாய் மண்ணில எங்கட பிள்ளைகளின்ர துயிலுமில்லங்கள் அழிக்கப்பட்டிருக்குது எண்டால் தமிழ் மக்களின்ர உரிமை எப்படி இருக்குது என்பதைச் சொல்லவோ வேணும்.

**வாத்தியார்:** இருந்தாலும் ஒரு ஆறுதல், 2009 ஆம் ஆண்டிற்குப் பிறகு தமிழர் தாயகத்தில மாவீரர் தினம் அனுஷ்டிக்கிறது எண்டால் அது முடியாத காரியம். மாவீரர் வாரம் ஆரம்பித்தாலே போதும் எங்கும் படையினர் குவிக்கப்பட்டு கடும் சோதனைகள் நடக்கும். அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சுற்றி இராணுவம் குவிக்கப்படும். யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்களுக்கு கட்டாய லீவும் வழங்கி அவர்களை வீடுகளுக்கு அனுப்புகிற சின்னத்தனங்களும் நடந்ததுதானே. ஆனால் இந்த வருடம் மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு தடை விதிக்கவில்லை. படையினரையும் கடுமையாகக் குவிக்கவில்லை. அதால மாவீரர் நாள் எங்கும் உணர்வுபூர்வமாக நடந்தது என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

**பண்டிதர்:** வாத்தியார் சொல்லுறதிலும் நியாயம் இருக்கத்தான் செய்யுது. 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிந்து 2010 ஆம் ஆண்டு மே மாதம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் செய்ய வேணும் எண்டு நல்லை ஆதீனத்தில ஒரு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. நல்லை ஆதீன சுவாமிகள், யாழ். மறை மாவட்ட ஆயர், கலாநிதி ஆறு. திருமுருகன், யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்திய நிபுணர்கள் சிலர் இன்னும் சில ஆர்வமுள்ளவர்கள் வந்திருந்தனர். வன்னிப் போரில உயிரிழந்தவர்களை நினைந்து சுடரேற்றி பிரார்த்தனை நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. இதை அறிந்த இராணுவம் நல்லை ஆதீனத்தைச் சுழ்ந்து கொண்டதோடு ஆதீனத்திற்குப் போவதற்காக வந்தவர்களையும் இடைமறித்துத் தடுத்துப் போட்டுது.

**விதானையார்:** அது மட்டுமல்ல பண்டிதர் ஐயா ஆதீனத்தில நின்ற அத்தன பேரையும் வீடியோ எடுத்த வியலலோ.

**கங்காணி:** அப்ப எங்கட தமிழ் அரசியல்வாதிகள், எம்.பிக்கள் ஒருத்தரும் வரலலயோ.

**பண்டிதர்:** ஐயோ கடவுளே! அந்தப் பக்கம் ஒருத்தரும் வரலல. யாழ்ப்பாண சிவில் சமூகத்தின்ர ஏற்பாட்டில தான் அந்த நிகழ்வு நடந்தது இண்டைக்கு போல இருக்குது.

**மூப்பர்:** அந்த நெருக்கடியான நிலைமையோட ஒப்பிடக்க இப்ப பரவாயில்லை எண்டுதான் சொல்ல வேணும்.

**கங்காணி:** அது சரி உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடக்கிறதும் உறுதியாயிற்று.

**விதானையார்:** எங்கட தமிழ் அரசியல்வாதிகளின்ர கதையில இருந்து உள்ளூராட்சித் தேர்தல் நடக்கப் போறது தெரியுதுதானே!

**வாத்தியார்:** அப்ப இந்த முறை கடும் போட்டியாகத் தான் இருக்கப் போகுது.

**பண்டிதர்:** உள்ளூராட்சி சபைத் தேர்தலில கட்சி என்பதை விட தனிப்பட்ட செல்வாக்குத்தான் ஆதிக்கம் செலுத்தும். ஒவ்வொரு ஊரிலும் வட்டாரங்களிலும் மக்களின்ர செல்வாக்குள்ளவர்களை தேர்தலில நிறுத்தினால் அவர்கள் வெல்வதற்கான சாத்தியம் உண்டு அவ்வளவுதான்.

**மூப்பர்:** நீங்கள் என்ன சொன்னாலும் எங்கட மக்கள் தேர்தல் அரசியலில கடும் வெறுப்புக்கொண்டு விட்டினம். யார் வென்றாலும் சரிதான், தோற்றாலும் சரிதான் எண்ட நிலைமைக்கு அவர்கள் வந்திட்டினம்.

**வாத்தியார்:** அப்படியொரு நிலைமை மிகவும் ஆபத்தானது. இந்த வெறுப்பு நிலையில இருந்து தமிழ்மக்களை மீட்டெடுக்கவேணும். இல்லையெண்டால் சுத்திச் சுத்தி சுப்பற்ற கொல்லைக்குள்ள என்பதாக எல்லாம் முடிந்து போய்விடும்.

**கங்காணி:** இந்த முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில வட்டார ரீதியில வேட்பாளர்களை நிறுத்துகிற நடைமுறையல்லோ வருகுது. இதிலும் மக்கள் தெளிவாக இருக்கவேணும்.

**வாத்தியார்:** அதுதானே எங்கட முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் வலம்புரியில நல்ல கட்டுரை எழுதுகிறார்.

**பண்டிதர்:** தேர்தல் நடைமுறைகளை அறிந்திருந்தால்தான் அதற்கேற்றாற்போல மக்கள் செயற்படமுடியும்.

பண்டிதர் இவ்வாறு கூற அதனை அங்கீகரிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்




ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம் பகுதியில்
உங்கள் ஆக்கங்கள் இடம்பெற
வேண்டும் என்றால்
உங்கள் சுய ஆக்கங்களை அனுப்பி
வையுங்கள்.

## ஊனமுற்றோர்...

ஊனம் என்பதில்லை-நெஞ்சில்
உறுதி இருப்பவற்கே
வானம் வளைந்து தரும்-நெஞ்சில்
வலிமை பிறந்து விட்டால்!
உடற் குறைபாடு உடையோர்-இந்த
உலகத்தில் எத்தனையோ!
திடமனம் பெற்றதனால்-அருஞ்
சாதனை படைத்து நின்றார்!
ஊமைகள் இவ்வுலகில்-நன்கு
உயிர் வாழவில்லையா-சொல்!
தீமையில் கண்ணிழந்தோர்-என்றும்
சீவிக்கவில்லையா காண்!
செவிப்புலன் அற்றவர்கள் உலகில்
செயலற்று விட்டனரா?
அஞ்சாதே எழுந்து விடு
இந்த அகிலத்தை வெல்வதற்கு
நெஞ்சில் உறுதி கொண்டால்-நீ
நினைத்ததை முடித்திடலாம்!

அ.அன்புமாறன்
தரம் 5
யா/வரணி சைவப்பிரகாச வித்தியாலயம்.

## பொது அறிவு

- நம் உடலில் பலமான தசை (Strongest Muscle) நாக்கு.
- "Typewritter" இது தான் கம்பியூட்டர் கீபோர்டில் ஒரே வரிசையில் அடிக்கக் கூடிய நீளமான வார்த்தை.
- பெண்கள் ஆண்களை விட இருமடங்கு கண்களை சிமிட்டுவார்கள்.
- தும்மும் போது உங்களால் கண்களை திறக்க முடியாது.
- பன்றிகளால் வானத்தைப் பார்க்க முடியாது.
- முதலை தன் நாக்கை வெளியில் நீட்டவே நீட்டாது.
- நத்தை மூன்று வருடம் வரை தொடர்ந்து தூங்கக் கூடியது.
- வண்ணத்துப்பூச்சி காலால் தான் ருசி அறியும்.
- HeadPhone அணிந்து ஒரு மணி நேரம் பாட்டுக் கேட்டால் சாதாரணமாக காதுக்குள் பரவக் கூடிய கிருமியை விட 700 மடங்கு அதிகம் கிருமி பரவுகிறது.
- அட்லாண்டிக் பகுதியில் ஆண்டிற்கு ஒரு முறைதான் சூரியன் உதயமாகிறது.
- கைரேகையைப் வைத்து குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் முறையைக் கண்டறிந்தவர் எட்வர்ட் ஹென்றி.
- மீன் தன் வாழ்நாள் இறுதி வரை வளர்ச்சி அடைந்து கொண்டே இருக்கும்.

ஜெ.கனிமொழி
சங்கானை.

## பறவை இன்ஜினியர் (பௌவர்)



பறவைகளில் பெரும்பாலானவை, மனிதர்களைப் போலவே வசிக்க இல்லம் அமைக்கின்றன. அவை உருவாக்கும் கூடுகள், நம்மை பிரமிப்பிலும் வியப்பிலும் ஆழ்த்தும். அவற்றில் ஒன்று பௌவர் (Bower) பறவை. இயற்கையின் அற்புதமான கட்டடக்கலை நிபுணர்கள் பௌவர் பறவைகள்தாம்!

பௌவர் பறவை அவுஸ்திரேலியா, பப்புவா, நியூகினியா போன்ற இடங்களில் வாழும். இவை கூ(வீ)டு கட்டும் அற்புதக் கலையில் கைதேர்ந்தவை. இவை புதர்கள், குறு மரங்களில் கூடுகளைக் கட்டும். பௌவர் பறவைகளில் கூட்டைக் கட்டுபவை பெரும்பாலும் ஆண் பறவைகள்தாம்.


ஆண் பௌவர் பறவை நாம் கற்பனை செய்து பார்க்க முடியாதபடி, தன் மேல்விதான வீட்டை வண்ண வண்ணப் பழங்கள், பளிச்சென்று நிறமுள்ள பூக்கள், வண்ண வண்ணக் குப்பைப் பொருட்கள், கண்ணாடித்துண்டுகள், தகர மூடிகள், பிளாஸ்ரிக் துண்டுகள், பைகள், கிளிப்புகள் போன்றவற்றைக் கூம்பு கூம்பாகவும், தனித் தனியாகவும் குச்சியால் வளைத்துக் கட்டும்.

## கல்வி



பூமணம் தரும் சோலையில்
பூத்து நிற்கும் பூக்களாய்
கல்வி எனும் சோலையில்
கவி பயிலும் பாலர் நாம்
படைத்திடுவோம் சாதனை?

அ.தர்சினி (பிரியா)
யா/வரணி வடக்கு சைவப்பிரகாச
வித்தியாலயம்.




## விடுகதைகள்

1.சிறுதூசி விழுந்ததும், குளமே கலங்கியது. அது என்ன?

2.அரைசாண் ராணிக்குள்ளே ஆயிரம் முத்துக்கள். அது என்ன?

3.நிழலுக்கு ஒதுங்கலாம். மழைக்கு ஒதுங்க முடியாது. அது என்ன?

4.பால் கொடுத்துப் பழகினாலும், என்றும் பகையாளியாக இருப்பான். அவன் யார்?

5. ஒற்றைக் காது உள்ளவனுக்கு ஒருபோதும் கேட்காது. அது என்ன?

6 வீடுகட்ட உதவாத கல், சமையலுக்கு உதவும் கல். அது என்ன கல்?

7. தலைகீழாய் தொங்குவான்,தலையசைத்தால் தென்றல் தருவான். அவன் யார்?


8. அன்பால் மலரும் பூ, அனைவரும் விரும்பும் பூ, மனிதன் உதட்டில் மலரும் பூ. அது என்ன பூ?

9.கல்லாலும் மண்ணாலும் கட்டாத வீடு, கதவு இல்லாத வீடு காற்றினிலே ஆடும் வீடு. அது என்ன?

10. கடல் நீரால் வளர்வான். மழை நீரால் மடிவான் - அவன் யார்?

விடைகள்:
1. கண்கள் 2. வெண்டைக்காய் 3. மரம்
4. பாம்பு 5. ஊசி 6. உப்புக்கல் 7. மின்விசிறி
8. சிரிப்பு 9. தூக்கணாங்குருவி 10. உப்பு

## சிவமந்திரம்



சிவனை "ஓம் சிவாய நம" என்ற மந்திரம் ஓதி வணங்குகிறோம். இம் மந்திரம் பல தத்துவங்களை உணர்த்துகிறது. "சி"எனும் எழுத்து சிவனையும், "வா" எனும் எழுத்து அம்பாளையும், "ய" எனும் எழுத்து மனிதர்களையும், "நம" என்னும் சொல் வணங்குவதையும் குறிக்கிறது. இந்த மந்திரத்தைச் சொன்னால் ஆணவம், கன்மம் என்னும் பாவ, புண்ணியங்களால் ஏற்படும் பலன்கள் மற்றும் உலக வாழ்க்கை நிலையானது என்னும் மாயையிலிருந்து விடுபடலாம். பிறப்பற்ற வாழ்வைத் தரும் அருமருந்தாக இந்த மந்திரம் விளங்குகிறது.








## மாவீரர் நாள் பற்றிய உங்கள் எண்ணம்?

## தலைவன் என்பவன் எப்படி இருக்க வேண்டும்?

## பிரபாகரனின் பிறந்தநாள் எப்படி போச்சு?

**சயன் — யாழ்ப்பாணம்**

அரசியல்வாதிகளுக்கு ஏதும் கூற விரும்புகிறீர்களா?

எனதருமை சுயநலவாதிகளே! உங்களுக்கு சுயநலம் இருப்பது கண்டு நாங்கள் கவலை கொள்ளவில்லை. ஆனாலும் உங்கள் அதிகாரத்தைக் கொண்டு கொஞ்சமேனும் உங்களை நம்பி வாக்களித்த மக்களுக்கு செய்யுங்களேன்.

ஓடுவதற்கு உங்களுக்கு வாகனம் தேவை தான். ஆனால் அதற்காய் கோடிகளைச் சுருட்டி பொக்கற்றில் போடாதீர்கள். அந்தக் கோடிகளில் கொஞ்சத்தையேனும் பாதிக்கப்பட்ட, பசியில் வாழ்கின்ற மக்களுக்கு கொடுங்களேன். உங்கள் வங்கிக் கிணறுகளை நிரப்புங்கள் குறைகூறவில்லை. கொஞ்சம் ஏழை வயிறு நிறைய செய்யுங்கள் போதும்.

**சிவராமன் — யாழ்ப்பாணம்**

உண்மையில் எந்தக் கடவுள் சிறந்தவர்?

கடவுள் என்பது மா போல. மனிதன் தனது தேவைக்கேற்ப பிட்டாகவும் இடியப்பமாகவும் தோசையாகவும் மாற்றி வைத்திருக்கிறான். வடிவங்களில் மாற்றம் உண்டே தவிர அதன் உள்ளீடு மா மட்டுமே. இதுபோல் தான் கடவுளும். வடிவங்கள் தான் வேறு. உள்ளீடு ஒன்று தான். உலகில் உள்ள எந்த மதத்தவனும் கடவுளே! என்று அண்ணாந்து வானத்தைத் தான் பார்க்கிறான். இதில் சிறந்தது, சிறப்பில்லாதது என்பதெல்லாம் நம் மனம் சார்ந்தது.

**ஜீபா — கரவெட்டி**

ஈழத்தில் இனி நடக்கும் மாற்றங்கள்?

தேர்தல் அறிவிப்பு வந்துவிட்டதல்லவா! இனி நடிப்புக்களுக்கு குறைவே இருக்காது. நடிகர் திலகம் சிவாஜியை மிஞ்சும் அளவில் ஓவர் அக்டிங். அறிவிப்பால் அப்துல் ஹமீதை வெல்லும் அளவுக்கு அவ்வளவு பேச்சு. அன்னை தெரேசாவை விஞ்சும் அளவுக்கு அவ்வளவு கருணை. அண்ணன் சீமானைத் தூக்கி சாப்பிடுமளவுக்கு அவ்வளவு நரம்பு புடைத்தெழும்பேச்சு.

**நந்தன் — விஸ்வமடு**

கணவன் இறந்தால் மனைவி உடன் கட்டை ஏறியது ஒருகாலம்?

'ஏம்மா இன்னொரு பூரி கிடைக்குமா?' என்றதுக்கு பூரி வரவில்லை குசினியில் இருந்து பூரிக்கட்டை வந்து விழுந்தது. நீங்க வேற உடன் கட்டை என்று கொண்டு, உடன் கட்டை ஏறுவது அந்தக் காலம். பூரிக்கட்டை எறிவது இந்தக்காலம்.

**ரஜீனா — வட்டுக்கோட்டை**

பிரபாகரனின் பிறந்தநாள் எப்படி போச்சு?

உஸ்ஸ்... சத்தமாப் பேசாதீங்க. கேக்வெட்டி கொண்டாடினவங்களை எல்லாம் கைது செய்யப் போறாங்களாம்.

ஐயோ ஐயோ இன்னும் சின்னப்பிள்ளைகளாவே இருக்கீங்க போங்க.

**டிலா — முல்லை**

மாவீரர் நாள் கொண்டாட்டம் பற்றி?

மரித்த வீரர்களை நினைவுகூர உள்ளே வெதும்பிக் கொண்டிருந்த உள்ளங்களுக்கு விடுதலை கிடைத்து விட்டது. எம் தேச வீரருக்கு அஞ்சலி செலுத்தினோம் என்ற மன ஆறுதல் கிடைத்திருக்கிறது. அடக்கி வைத்திருக்கும் வரைதான் அது வெறும் மலை. வெடித்து விட்டால் அது எரிமலை. புரிந்து கொண்டால் சரி.

**நந்தகுமார் — மானிப்பாய்**

கள நிலவரம் எப்படி இருக்கிறது?

எமக்கான அதிகாரங்களைத் தராவிட்டால் தனி நாடு கோருவதை விட வேறில்லை என்று அவுஸ்திரேலிய தூதுவரிடம் துணிந்து கூறியிருக்கிறார் எம் முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் ஐயா அவர்கள். இப்படி மக்கள் நலன்சார்ந்து வெளிப்படைத் தன்மையாகப் பேசுவதற்கு விக்னேஸ்வரன் ஐயாவை விட்டால் வேறு யாருமில்லை. மக்களுக்காக மக்களுக்காக என்று கூறிக்கொண்டிருப்பவர்கள் பலர் முதல்வரைப்பற்றி அப்படி இப்படி என்று கூறி மாட்டப் பார்க்கிறார்கள். இதை மக்கள் புரிந்து கொண்டால் சரி.




**தமிழன் — யாழ்ப்பாணம்**

தலைவன் என்பவன் எப்படி இருக்க வேண்டும்?

முதலில் மக்களைப் புரிந்து கொள்ள வேண்டும். அவனின் ஒவ்வொரு அசைவுகளும் தன் இனம் சார்ந்த விடுதலையை நோக்கியதாக இருக்க வேண்டும். கொண்ட கொள்கையில் திடமும் பற்றுறுதியும் கொண்டவனாய் தன்னை தன் இனத்துக்கு அர்ப்பணித்தவனாய் எப்போதுமே தன் இன விடுதலைக்காக உழைத்துக் கொண்டிருப்பவனாய்... ஐயோ கடவுளே! இவ்வளவு எழுதி விட்டேனே சுருங்கச் சொன்னால் பிரபாகரன் போல அவ்வளவுதான்.

**சுபாஸ் — மந்துவில்**

எங்கள் வீட்டில் மல்லிகை பூத்திருக்கிறது. பக்கத்து வீட்டில் ரோஜா பூத்திருக்கிறது?

தம்பி சுபாஸ் எங்கள் வீட்டில் அழகான ரோஜா இருந்தாலே அடுத்த வீட்டு மல்லிகையில் தான் கண் போகும். அடுத்த வீட்டில் ரோஜாவே பூத்திருந்தால் சும்மா இருக்க முடியுமா என்ன?. ரசிப்பதுடன் நிறுத்திக் கொள்ளுங்கள் பறிக்க முற்படாதீர்கள். சொந்தக்காரன் அயல் வீட்டுக்காரன் என்பதை மறந்து விடாதீர்கள்.

**தமிழ் — ஈச்சமோட்டை**

உங்கள் பேஸ்புக் காதலி உங்கள் வீட்டுக்கு வந்தால்?

தமிழ் ஏற்கனவே இங்கே எரிந்து கொண்டிருக்கிறது. இதில் நீங்கள் எண்ணெயை ஊற்றுகிறீர்களே! நேற்றுதான் இந்த பேஸ்புக் சகவாசம் இல்லை என்று மனைவி தலையில் அடித்துச் சத்தியம்செய்தேன். அதற்குள்அடுத்தஅப்பா... அப்பா!

**காசிநாதன் — பருத்தித்துறை**

அழகு என்பது அகத்திலா? முகத்திலா?

கற்றோர் கண்ணுடையோர் கல்லாதோர் முகத்தில் இரண்டு புண்ணுடையோர் என்பது போல அகத்தைப் பார்ப்போர் கண்ணுடையோர், முகத்தைப் பார்ப்போர் அதில் இரண்டு புண்ணுடையோர் என்று சொல்லலாம்.

**தவான் — நெல்லியடி**

மாவீரர் நாள் பற்றிய உங்கள் எண்ணம்?

தமிழரின் வாழ்வியலில் தவிர்க்க முடியாத ஒன்று.

**சயன் — கோப்பாய்**

J.V.P. ஆட்சி அமைத்தால்?

தமிழர்களுக்கான தீர்வு கிடைத்தாலும் கிடைத்து விடும். நாம் தான் மாற்றத்தை விரும்பாதவர்களாயிற்றே. அது சரி அரை நூற்றாண்டாய் வீட்டுக்கு வெள்ளை அடிப்பதைவிட வேறென்ன செய்கிறோம்.

**சுதன் — மர்தகல்**

அரசியல் என்றால் உங்களுக்கு அவ்வளவு வெறுப்போ?

ஆரம்பத்தில் அரசியல் என்றால் அவ்வளவு பற்று. 2009 இன் பின்னரான எமது அரசியல் வாதிகளின் செயற்பாட்டைப் பார்க்கும் போது அதில் அவ்வளவு வெறுப்பு. புலித்தோலில் மறைந்த சிங்கத்தோலும் சிங்கத்தோலில் மறைந்த புலித்தோலுமாய் காட்சி கொடுக்கும் இவர்களைப் பார்க்கும் போது வெறுக்காமல் என்ன செய்ய முடியும்.

**சுதன் — குப்பிளான்**

கூட்டமைப்புக்கு வாக்குப் போடலாமா?

தம்பி யாருக்கு வாக்களிப்பது என்பதை நான் சொல்லக் கூடாது அது நீங்களாக முடிவெடுக்க வேண்டியது. தமிழர்களுக்கு யார் நல்லது செய்தார்களோ அவர்களுக்கு வாக்களிக்கலாம். நாம் யாருக்கு வக்களிக்கப்போகிறோம் என்பதை சிந்தித்து அளித்தால் அழியாமல் இருக்கும்.






## தமிழ் என்று ஒரு தேசம்

தமிழ் என்று ஒரு தேசம்
நமக்கென்று உருவெடுத்து
நாளை வரும் என்றெண்ணி
உறவுகளை திகைக்க விட்டு
உணர்வுகளை உருகவிட்டு
கையிலே ஆயுதமும்– கண்களில்
போர் வெறியும் கொண்டு
நித்தமும் யுத்தம் என்று
அதில் வெல்வதே எங்கள் நோக்கமென்று
உரிமை கொடுத்த எம் ஈழத்தாய்க்கான
உயிர் கொடுத்தான் எம் ஈழத் தமிழன்...

அகிலன் ரம்யா
உரும்பிராய் வடக்கு

## நாவால் சுட்டவடு

நாக்கு ஒரு தீ!
அது ஆக்கவும் அழிக்கவும் வல்லது
கவனமாகப் பயன்படுத்துங்கள்
பணத்தின் மதிப்பு தெரியவேண்டுமா?
செலவு செய்யுங்கள்!
உங்களின் மதிப்பு தெரிய வேண்டுமா?
கடன் கேளுங்கள்
ஒவ்வொரு மனிதனுக்கும்
ஒருமுட்டாள் தேவைப்படுகிறான்
தன்னை அறிவாளியாக காட்டிக்கொள்ள!
கஷ்டத்தில் உதவியன்;
கஷ்டத்தில் உதவாதவன்;
அந்தக் கஷ்டத்தை தந்தவன்
இவர் மூவரையும்
வாழ்நாளில் எப்போதும் மறக்கக்கூடாது

வி.கஜானன்
வடலியடைப்பு

## கால ஓட்டம்

வெண்மை காவியானால்
காவியம் ஆனதோர் காலம் மாறி
காவி மனிதன்
வெள்ளாடை போர்த்தி
வீதி உலா வருகிறான்
அதிகார வேட்கையுடன்

## நாயகி

குந்தியின் இடையாய்
நெளிகின்ற புன்னகையும்
காலனவனின் பாசக்கயிற்றையே
கண்ணுக்கு மேலாடை போல்
இமையாக்கிக் கொண்டவளே!
அக்கயிற்றின் நுனியில்
பிணைபட்ட பறவை நான்

## சிசு

பாலும் கோதுமையும்
பிசைந்து சுவைத்தாற் போன்ற
இரு கன்னங்கள்
காந்தம்போல் மொத்தமாய்
சேர்த்திழுக்கும் என்னையுமே
முத்தமழை பொழிய

நா.கீர்த்தலோஜினி
மன்னார்

## காலத்தின் குரலானவனுக்கு

வற்றாத கவியூற்றாய்
வரலாற்றின் பெருமூற்றாய்
வையகம் போற்றும் – எங்கள்
வல்லதமிழ் ஈழத்தின்
தேசக்கவியே இன்றுனக்கு
அகவைத் திருநாள்
வாழி வாழி வாழி

எப்படியுனை வாழ்த்த
எல்லா மொழிகளையும்
எங்களுக்காய் பிரயோகித்துவிட்டு
அக்கினிச் சோதியாய் எங்குமாய்
உறைந்து போய் பரவியிருக்குமுனை
எப்படி வாழ்த்த

நேசக் கவியே – தமிழ்
வாசக் கவியே – உனை
வியக்கும் இப்புவியே

உன் குரல் மொழி அழகு
உன் விரல் மொழி மிடுக்கு
உன் உடல் மொழி சிறப்பு
உன் தனி வழி உணர்வு

புரட்சி விதைகளாய்
உன் கவிதைகளை தூவி
விடுதலை நெருப்பின் அணைவிற்கு
இடம் கொடாமல்
மொழியெனும் பெருமாயுதத்தால்
வலுவூட்டிய தீயே
எங்குற்றாய் ...

உன்னை தேடச் சொல்லக் கூட
வாய்திறக்காமல்
நாதியற்று போய் கிடக்கிறது – இந்த
அரிதார நிலம் இன்று

எங்கும் நிலையாய்
வியாபகம் பெற்றிருக்கும்
நம் தமிழ் கவியே
உன் மொழியெனும் பெருமூற்றை
மனசெங்கும் வைத்து
உன் அகவைத் திருநாளில்
தமிழால் வாழ்த்துகின்றோம்
வாழி வாழி வாழி

வெற்றி துஷ்யந்தன்

## புரட்டாதிச்சனி

வந்தவினை போக
வரப்போகும் வினைதீர
நான்கு சனி முடிந்துவிட
ஐந்தாவது சனி விரதமது

வீடு வாசல் கழுவி
முற்றம் சுற்றும் சுத்தம் செய்து
மாவிலை தோரணம் அலங்கரிக்க
மாவரிசிக் கோலமென
அசந்து நின்றது வீடு

கைக்குத்தல் அரிச்சோறு
பாகற்காய் பயற்றங்காய்
பூசணிக்காய் புடலங்காய்
வெண்பொங்கல் சாதத்துடன்
உழுந்துவடை பாயாசம்

தாம்தூம் என
ஏற்பாடுகள் நிறைவுபெற
வாழையிலையில் சாதமிட்டு
வகை வகையாய் கறியுமிட்டு
வைத்தேன் கா... கா... கா...

கூடி வந்தன காகங்கள்
வடையைத் தூக்கியது ஒரு காக்காய்
நிச்சயம் அது தாத்தாதான்...
வடை என்றால் அவர்க்கு உயிர்

பக்குவமாய் பாயாசத்தை
கௌவிக் குடித்தது ஒரு காக்காய்
சந்தேகமே இல்லை அது பாட்டியே!

நொருங்காமல் அப்பளத்தை
அள்ளிச் சென்றது ஒரு காக்காய்...
நிச்சயம் அது மைத்துனன்தான்
ஈழத்துக்காய் உயிர்விட்ட
மாவீரன் அவன்...

தூரத்தே சில காக்கைகள்
வருவதும் போவதும்
பார்ப்பதும் பார்க்காததுபோல
நடிப்பதுமாய்...

நிச்சயம் அவை
எமக்கு வேண்டாதவர்கள்தான்
யாரென்பதுதான்
இன்னும் புரியாத புதிராக...

மாவை. நா.கஜேந்திரன்

# மௌனத்தின் தேடல்– 379



## துடிக்கிறது கபட நரி

பாவம் சூதுவாது புரியாத
சின்ன ஆட்டுக்குட்டி
தன் சிரசை தழுவிக் கொள்ளும் போது
தன் தாயின் பாசமென எண்ணுகிறது
பின்னால் வருவதை
அறியுமா இளங்குட்டி
நாவினில் நீர் ஊற
தன்குள்ளக்குணத்தைக்
காட்டத் துடிக்கிறது இந்த கபட நரி!
பாசாங்குக்காரரின்
வலையில் அகப்படாமல்
வாழ்வதற்கு முயற்சி செய்வோம்!
நரிபோல் பலரும் மனிதர் வடிவில்
நடமாடுவது கொடுமை

அபி குலமாலிகா
சங்கானை

## கபட நாடகம் கனகாலம் நிலைக்காது

வஞ்சக எண்ணங்கொண்டு
வாஞ்சையாக
ஆட்டுக்குட்டிதனை
வரவழைத்து
வயிறு நிறையச் சாப்பிட
வலதுகாலைத் தூக்கிப் பாயும்
கபடத்தனமான நரியே!
காது கொடுத்துக்கேள் இங்கே!
உன் போன்று கபடத்தமானவர்களின்
கபட நாடகம் கனகாலம் நிலைக்காது
காலம்தான் பதில் சொல்லும்

பி.மேரிசிந்துஜா
மிருசுவில்

## புனித மகான்கள்

ஓநாய் இங்கே
ஆட்டை அணைப்பது
அன்பைக் காட்டி
ஆதரவளிக்கவல்ல அதை உண்டு
சுவைத்துப் பசியாற
மக்கள் நலன் பேசி
மகான்கள் வேஷம் போடும்
இன்றைய அரசியல்வாதிகளும்
இவ்வாறே உள்ளனர்
இழிவான செயல் புரியும்
இவர்கள் நிலைமாற
புனித மகான்கள் தோன்றும்
புண்ணிய காலம் எப்போதுருவாகும்

சி.திவ்வியா
யா.ப.மெ.ம.வி.

## வஞ்சத்தை வென்றுவாழலாம்

ஓநாய்கள் சிந்தும் கண்ணீரும்
ஆசீர்வாதமும் அரவணைப்பும்
உன் மீது கொண்ட
இரக்கத்தினாலோ அன்றி
உருக்கத்தினாலோ அல்ல....!
தன் சுயநலத்தின் பாலும்...!
உனைச் சுவைக்கும் ஆவலினாலும்...!
கண்ணில் தெரியுது மகிழ்ச்சி...!
நாவில் ஊறுது எச்சி...!
பற்களில் குரோத உணர்ச்சி...!
குனிந்து நின்றது போதும்
நிமிர்ந்தெழு!... நாளை
வஞ்சத்தை வென்று வாழலாம்...!

சு.பா.சுபன்
சுழிபுரம் மேற்கு

## தாய் சொல்லைத் தட்டாதே

தாய் சொல்லைத் தட்டாதே
அதைக் கேட்காததால்
பாவம் இந்த ஆட்டுக்குட்டி
தந்திரம் மிக்க நரியிடம்
உணவாய்ச் சிக்கிக் கொண்டதே,

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## ஏமாற்றாதே ஏமாறாதே

வேசம் போட்டு
ஆசை காட்டி நடித்து
தந்திரமாக ஏமாற்றித்
தனக்கிரையாக்கும்
நரிகள் போன்று
மோசம் செய்யும்
நாசகாரர் மத்தியில்
என்றும்
விழிப்புணர்வோடு
துணிவும் தன்னம்பிக்கையும்
இருந்தால்
வெற்றி நிச்சயம்
அவதந்திரம்
தனக்கந்தரம்

துரை
தென்மட்டுவில்

## வேடங்கள்

ஓநாய் ஆட்டுக்குட்டியை
ஒருநாளும் மறக்க முடியாது
இக்கதையின் படிப்பினைகள்
எக்காலத்திற்குமுரியது
காலம் காலமாய் மாறாமல்
காட்டுத் தர்பார்தான்
நாட்டிலும் நாளும் நடக்கின்றது
வாட்டியும் வதைக்கின்றது
அதிகாரம் ஓரிடத்தில் பலமாகி
குவியும்போது உயிர் வாழ்தல்
இரங்கிப்போடும் பிச்சையாகி
தலைநிமிர முடியாதவாறு
நிலைமாறி விடுகின்றது
ஆசீர்வதிப்பதுபோல் தோன்றினாலும்
பசி வந்துவிட்டால் போதும்
போலி வேடம் கலைந்து விடும்

க.நாகராசா
நுணாவில்

# மௌனத்தின் தேடல் –380



அன்பு வாசகர்களே !

உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகள் மற்றும் வியாசர் பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 06.12.2017ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# மீற்றர் வட்டி

சிறுகதை



"என்னப்பா சமையல் போட்டனி இன்ண்டக்கு" தோட்டத்தில் வேலை செய்து களைத்து வந்த இராசையா தன் மனைவி தனலட்சுமியைப் பார்த்துக் கேட்கிறார். "இன்டைக்குப் பச்சை அரிசிச் சோறுஞ் சம்பலும்தான்" என்றாள். இப்படித்தான் வாழவேண்டும் இன்டைக்கு அக்கம் பக்கத்திலையிருக்கிற கோயில்களிலை அன்ன தானம் எதுவுமில்லை. அப்படியென்றால் சமையலை நிப்பாட்டியிருக்கலாம். நாங்கள் சாப்பிட்டம், சாப்பிடல்லை. அடுப்புக்கை நாய்தான் படுத்தாலும் ஊர் உலகத்துக்கென்ன. ஆனால் காசு பணம் இருந்தால்தான் உலகம் திரும்பிப் பார்க்கும்" தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தினார் இராசையா. சாடிக்கு மூடி வாய்ச்சால்போல் இராசையாவிற்கு தனலட்சுமி வாய்த்தாள். கறிக்கு எத்தனை மிளகாய் போட்டாயென்றால் அவர் மனைவி ஐந்து என்றால் ஒரு மிளகாய் போட்டால் காணாதோ என்ற அவர்களின் கஞ்சத்தனம். பணம் சேகரிக்கும் அவாவில் வாயை வயிற்றைக்கட்டி சிக்கனத்திலும் சிக்கனமாக வாழக் கற்றுக்கொண்டனர் இருவரும். குறுகிய நோக்கம் பணத்தைத் தேட வேண்டும். அதற்காக உண்டு உடுத்து வாழ்க்கையை அனுபவித்தவர்கள் அல்லர். பணம்தான் எல்லாம். பணத்தால் சாதிக்கமுடியாதது என்ன உலகத்தில் உண்டு என்று மார்தட்டுபவர்கள் ஏராளம். கோடிக்கணக்கில் சீர்வரிசைகள் குவிந்திருந்தாலும் தகுந்த, தங்களுக்கேற்ற மாப்பிள்ளை கிடைக்காத பெண்கள் எத்தனையோ பேர் வாரி, வாரி பணத்தைக் கொட்டினாலும் தீராத நோய் தீர்ந்து விட்டதா? பணம் தேவைதான். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகி விடும். பணம் அபரிமிதமாகக் குவிந்தால் மனிதனின் குணாதிசயங்களே மாறி நல்வழியல்லாத தீய வழிகளுக்கு வழிகோலும். திரைகடல் ஓடியும் திரவியம் தேடு. தேடும் பணம் அறநோக்கம், தான தர்மம், ஈகை மேலோங்க வேண்டும். ஆனால் இவைகள் யாவற்றையும் இருவரும் உணர்ந்திலர். ஒருநாள் பக்கத்து வீட்டு முருகேசு மிகவும் வறுமையில் வாழ்பவர். தன் மகனுக்கு கடும் நோய் கண்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக இயல் பற்றவராக இராசையாவின் லோபித்தனத்தை நன்குணர்ந்திருந்தும் ஆபத்தான வேளையில் வேறு வழியொன்றும் புரியாதவராக மகனை அவசரமாக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகவேண்டியிருக்கு. ஆயிரம் ரூபா தாருங்கோ. பிறகு திருப்பித் தரலாம். இராசையாவைக் கேட்கிறார். ஐயையோ பிள்ளை யார் அறிய ஒரு வெள்ளைச் சல்லிகூட இல்லை. சம்பலும் சோறும்தான் சாப்பாடு என்று பொய்ச்சத்தியம் செய்து அவரை அனுப்பி விட்ட வர் ஓடோடி வந்து தன்னுடைய பணப் பெட்டியில் பணம் எல்லாம் சரியாகக் கிடக் கிறதோ என்று பார்த்துத் திருப்தி கொண்டார். மன நெகிழ்வற்ற ஆபத்துக் குதவாத மனப்பாங்கு எல்லாவற்றிற்கும் மேலானது பணம்தான் என்று எண்ணுபவர்கள் கடவுளின் கருணையிழந்தவர்கள் என்பதை இராசையா குடும்பம் உணர்ந்திலர். பிள்ளை குட்டிகளைப் பெற்றால் செலவுத்தானம் தான் என்று எண்ணுபவர்கள் உலகத்திலே அரிதிலும் அரிது. ஆனால் இராசையா குடும்பமோ அதற்கு விதி விலக்கானவர்கள். பிள்ளையள் இல்லையே யென்று மகிழ்ச்சி கொண்டனர். அவர் தாய் தந்தையருக்கு ஒரே மகன். சுண்ணாம்பிலான பழைய வீடு அவரின் முதுசம். அவரின் பெற்றோர் கொஞ்ச நில புலன்களையும் ஒரு தென்னந்தோட்டத்தையும் விட்டுச் சென்றனர். அவ்வூரிலே உள்ள தமிழ்க் கலவன் பாடசாலையில் கீழ்நிலைத் தமிழ்க் கல்வியோடு கல்வியை நிறுத்திக் கொண்டார். அவருக்கு தூரத்து உறவு முறையான புத்தூர் வாசியின் பெண் தனலட்சுமியை விவாகம் செய்து வாதரவத்தை வீட்டிலே வாழ்ந்துவந்தனர். ஒருநாள் யன்னல் கதவுகள் நன்றாகப் பூட்டப்பட்டு விட்டதோ என்று உறுதிப்படுத்திய இராசையா மனைவியைக் கூப்பிட்டு அக்கம் பக்கத்தில் நோட்டம் விட்டு பணப்பெட்டியைத் திறந்து பணத்தை எண்ணுகின்றனர். ரூபா பத்து இலட்சத்திற்கு இருபது ஆயிரம் குறைவு. பணம் சேர்ப்பவர்களுக்கு மேலும் பணம் சேர்க்கவேண்டுமென்ற பேரவா. கோட்டியா தனம் எப்படியென்டாலும் இருபது ஆயிரம் தேடி பத்து இலட்சமாக்க வேணும்" கூறுகிறார். ரூபா இருபதாயிரத்தையும் தனது தோட்டத்திலே விளையும் விளை பொருட்களை தலையிலே சுமந்தபடி இரண்டு கட்டைக்கப்பால் இருக்கும் சந்தைக்கு கால்நடையாகவே கொண்டு போய் ஒருவாறு இருபதாயிரம் ரூபா தேடி ரூபா பத்து இலட்சமாக்கிக் கொண்டார். அருகிலுள்ள வங்கிக்குக் கொண்டு சென்று வைப்பிலிட்டால் வங்கி வட்டி போதாதேயென்று அவர் மனம் தடுத்தது. பெரிய தொகையை வீட்டிலே வைச்சிருப்பதற்கும் அச்சம் கொண்டனர். நாளாந்த தினசரிகளை வாசிக்கவேண்டுமென்ற ஆசை கொண்டவர். பத்திரிகைகளை வாங்கத் துட்டுப்போய் விடுமேயென்று அயலிலே உள்ள வாசிகசாலைக்கு செல்வதை வழக்கமாக்கிக் கொண்டார். அன்று வழமை போல் வாசிகசாலைக்குச் சென்றவர் வாசிகசாலைக்கு வெளியில் இருவர் உரையாடுவது அவர் காதில் விழுகிறது. மீற்றர் வட்டிக்குக் கொடுத்தால் நல்ல வட்டி கிடைக்கும். நான் இரண்டு இலட்சம் ரூபாவை சந்தியிலை கடை வைச்சிருக்கிற முத்துத்தம்பிட்ட கொடுத்தனான். ஒழுங்கா மாதம் முதலாம் திகதியானவுடன வட்டி தந்திடுவார். நல்ல ஒழுங்கானவன். அப்படி ஆக்களோடையெல்லோ குடுக்கல் வாங்கல் செய்யவேணும் என்றான் ஒருவன். அப்படியா நல்ல நம்பிக்கையானவன் போலக்கிடக்கு என்றான் மற்றவன். பத்திரிகை பார்க்கச் சென்ற இராசையாவிற்கு பத்திரிகை வாசிக்க மனம் ஏவவில்லை. மீற்றர் வட்டி மீற்றர் வட்டியென்று மனம் ஏம்பலிக்க வீடு திரும்பியவர். எடியே தனம் மீற்றர் வட்டிக்குக் குடுத்தா மாசம் மாசம் சுளையாக வட்டிவரும். அதைக்கொண்டே நாங்கள் குட்டிப் பணக்காரர்களாகி விடுவோம். என்ன சொல்கிறாய்" என்று கேட்கிறார். "உண்ணாமல் தின்னாமல் தேடிய காசை கொண்டு போய் முன்பின் தெரியாத ஒருத்தனிடம் குடுக்கிறதா. பொறுங்கோ நல்லா யோசிச்சுத்தான் முடிவெடுக்க வேணும் என்றாள். சந்தியிலை கடை வைச்சிருக்கிற முத்துத்தம்பி குடுக்கிற காசுக்கு மீற்றர் வட்டி குடுக்கிறானாம். குடுக்கல் வாங்கல்லை நேர்மையானவனென்றும் கேள்விப்பட்டனான் என்று மனைவியிடம் கூறினார். மீற்றர் வட்டியை எண்ணி எண்ணி அன்றிரவு இராசையாவிற்கும் அவர் மனைவிக்கும் தூக்கம் வந்தால்தானே. அடுத்தநாள் காலை தோட்டத்திற்குப் புறப்பட்டவர் முருகேசுவை வழியில சந்திக்கிறார். சந்தியிலை கடை வைச்சிருக்கிற முத்துத்தம்பி குடுக்கல் வாங்கலுக்கு ஆள் எப்படி என்று விசாரிக்கிறார். மிகவும் நேர்மையானவர் பேர்கட்டுகிறாராம். மீற்றர் வட்டி குடுக்கிற காசுக்கு நல்ல வட்டி குடுக்கிறாராம் என்று நல்லாய்தான் கதைக்கிறார்கள் என்றார். இராசையா மனைவியிடம் முருகேசு கூறியவற்றை அப்படியே ஒப்படைக்கிறார். இருவருமாக முத்துத்தம்பியிட்டை வட்டிக்குப் பணத்தைக் கொடுப்பதாக அதிக ஆசை. நட்டமென எண்ணவேணும் சிந்திக்காதவர்களாகத் தீர்மானிக்கின்றனர். அடுத்த நாள் காலை இடி மின்னல் நெஞ்சை அதிர வைக்க இரைச்சலுடன் அடைமழை பொருட்படுத்தாமலே மீற்றர் வட்டி மனத்தை நெருட முத்துத்தம்பியினுடைய கடையை நோக்கி குடையைப்பிடித்தவண்ணம் நடக்கிறார். அண்ணை என்ன விசயம் வாருங்கோ வட்டிக்குத்தான் பணம் கொடுக்க வந்திருக்கிறார் என்று அவர் முகத்தைப் பார்த்தே கணிப்பீடு செய்து விட்டார். நல்லவேளை அந்தக் கடையில அவர் மாத்திரம் நின்று கொண்டிருந்தார். வேறு ஒருவரையும் காணவில்லை. நல்ல சகுனம் போல கிடக்கென்று எண்ணியவாறே உங்களிட்டைத்தான் வந்தனான். கொஞ்சக் காசு கிடக்கு மாத வட்டிக்குத் தரலாமென்று எண்ணுகிறன் என்றார் இராசையா. அப்படியா எவ்வளவு தொகை. தன்னுடைய பண முடக்கத்துக்கு விடிவெள்ளியோடு தான் வந்திருக்கிறார் போலையென மனமகிழ்ச்சியுடன் கேட்கிறார். பத்து இலட்சம் பணத்துக்கு என்ன பொறுப்புத் தருவியள் இராசையா கேட்கிறார். முன் திகதியிடப்பட்ட வங்கி காசோலை தருவன். ஒவ்வொரு மாசமும் முதலாம் திகதியானவுடன் வட்டி தருவன். முதல் தேவையென்றால் ஒரு மாதத்திற்கு முன்னமே சொல்லவேணும் என்றார் முத்துத்தம்பி. அப்படியென்றால் பத்து இலட்சத்திற்கு எவ்வளவு வட்டி தருவியள் இராசையா கேட்கிறார். இருபதினாயிரம் ரூபா முழுக்காசையும் அப்படியே முழுத்தொகையாக உடனே தந்தால் இருபத்தையாயிரம் தருவன் என்றார் முத்துத்தம்பி. சரி நாளைக்கு உங்கடை காசோலையையும் கொண்டு வாதாவக்கை முதலாம் குறுக்கொழுங்கை இராசையா வீடென்றால் ஆரும் காட்டுவர் வாருங்கோ என்றார் இராசையா. பணத்துக்குப் பஞ்சாய்ப் பறக்கும் முத்துத்தம்பி இப்படியான சந்தர்ப்பத்தை நழுவ விடுவாரா? காலையில இராசையாவின் வீட்டை அடைந்தவருக்கு இராசையாவும் மனைவியும் மீற்றர் வட்டியை எண்ணியவாறே ராஜமரியாதையுடன் உபசரிப்பு. பணம் பத்து இலட்சத்தையும் கொடுத்து முத்துத்தம்பியை எண்ணி எடுக்கும்படி கூறுகிறார். இராசையா அண்ணை உங்களிலை எனக்கு என்ன நம்பிக்கையில்லையா? எப்படியாவது அப்பணத்தைப் பெற்று விடவேண்டுமென்ற நிலையில் முன் திகதியிடப்பட்ட காலாவதியான காசோலையில் வழக்கமாக இடும் கையொப்பம் போலல்லாது ஓர் வித்தியாசமான கையொப்பத்தையிட்டுக் கொடுக்கிறார்.

முத்துத்தம்பி மற்றவர்களின் பணத்தில் விலாசம் காட்டி வாழ்ந்தார். கடையையும் விசாலித்து ஓர் ஆடம்பரக் கடையாக்கியதுடன் லீசிங்கிலை ஒரு முச்சக்கரவண்டியை வாங்கி கடைக்கு முன் நிறுத்தினார். வங்கிக் கடன்களையும் மீற்றர் வட்டிக்குப் பெறுகிற பணத்தையும் அங்காலை வாங்கி இங்காலை கொடுப்பது போல் ஆள் மாறி ஆள்மாறி ஒருவாறு மீற்றர் வட்டியைக் கொடுத்து உருட்டல் பிரட்டல் செய்தார். அக்கம் பக்கத்திலுள்ளோர்க்கு தனது வாழ்க்கை கடனிலே மூழ்கியிருக்கிறதென்பதை காட்டிக் கொள்ளாமலே தனது வாழ்க்கையை ஓட்டினார். எவ்வளவு காலத்திற்குத்தான் ஊர் உலகத்தை ஏமாற்றுவது. அவருடைய கடன் நிறைந்த வாழ்வு ஒரு நாளைக்கு வெளிச்சத்துக்கு வரத்தான் செய்யும். இவர் பெற்ற கடன்களை ஒன்று சேர்த்தால் ஒரு கோடியைத் தாண்டும். லீசிங் பணத்தைச் செலுத்தாமையினால் முச்சக்கர வண்டி பறிமுதல் செய்யப்பட்டு வங்கிக் கடன்கள் திருப்பிச் செலுத்தத் தவறியதால் அவருடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்ய வங்கிகள் சட்ட நடவடிக்கை எடுத்தன. இவற்றைக் கேள்விப்பட்ட மீற்றர் வட்டிக்குப் பணம் கொடுத்த எல்லோரும் பணத்தைத் தரும்படி அவருடைய கடை வாசலிலே பழி கிடந்தனர். நாலு பக்கத்தாலும் கடன் தொல்லை முத்துத் தம்பியின் தொண்டையை இறுக்க, இரவோடு இரவாக கழுத்திலே கயிறு போட்டு தற்கொலை செய்து கொண் டார்.

மீற்றர் வட்டிக்குக் கொடுத்தவர்கள் அவர் இறந்ததற்காக அனுதாபப்பட வில்லை. தங்களுடைய முதலும் வட்டியும் போச்சேயென்று தலை யிலடித்து அழுது புலம்பினர். இறந்தவரிடமிருந்து பணத்தை அறவிட முடியாதென்பது இயலாத காரிய மென்று ஒன்றுமே செய்ய முடியாத நிலையில் தவித்தனர். இவற்றையெல்லாம் கேள்விப்பட்ட இராசையா முத்துத்தம்பி யின் கடையை நோக்கி ஓடோடி வந்தவர் தானும் தலையிலடித்து அழுது புலம்பினார். தின்னாமல் உண்ணா மல் தேடிய தேட்டம் கையைவிட்டுப் போய் விட்டதே. தான் வாழ்ந்தாலென்ன விட்டாலென்ன என்று எண்ணியவர் வீட்டுக்கு வரும் வழியில் உள்ள பாழுங் கிணற்றில் தன் உயிரை மாய்த்துக்கொண்டார். மீற்றர் வட்டி என்ற வல் அரக்கன் கொடுத்தவனதும் வாங்கியவனதும் உயிரைக் காவு கொண்டான்.

அவற்றைக் கேள்வியுற்று ஓடோடி வந்த தனலட்சுமி கடவுளே இப்படியான ஒரு தண்டனையா. பணத்தை இழந்தது மாத்திரமல்லாது கணவனையும் இழந்து விட்டேனே. கடவுள் கொடுத்த வாழ்வை அனுபவிக்கத் தெரியாமல், அறநெறி நில்லாமல், தான தர்மம் செய்யாமல், பணந்தான் எல்லாம் என்று எண்ணிய பேராசையால் எங்களுக்கு அந்த பணத்தாலை யல்லவா அழிவு. மனம் நொந்து வெந்து கண்ணீர் விட்டாள்.

சு.தர்மலிங்கம்
சாவகச்சேரி

# உயிர்பெற்ற கல்லறைகள்

ஒரு மாவீரனின் கல்லறையை நிலத்தில் இருந்து பெயர்த்தெடுத்து சிதைத்து எறிந்து விட்டால், அவ னுடைய தியாகங்களை, வீர வரலாற்றை, நினைவு களை அழித்து விட முடியாது. இந்த இனம் வாழ வேண் டும், இந்த மண்ணை தமிழர்கள் ஆள வேண்டும் என்ற இலட்சியக் கனவோடு மரணித்த பெரு வீரர்களை தமிழ் மக்கள் என்றைக்குமே தமது நெஞ்சங்களில் சுமந்து கொண்டுதான் இருப்பார்கள். தமிழினம் இருக் கும் வரை மாவீரர்களின் கால் தடம் தமிழர் தாயக த்தில் ஆழப் பதிந்துதான் இருக்கும்என துயிலு மில்லங்களை சிதைத்தவர்கள் முன்பாகவே நினைவு கூர்ந்து தமிழர்கள் உரக்க சொல்லியிருக்கின்றார்கள். இதனை தாங்கள் நிலத்தில் மட்டுமல்ல உலகெங்கும் சொல்லியிருக்கின்றார்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள், மக்களை அவர்கள் கேடயமாக பயன்படுத்தினார்கள். விடுதலைப்புலிகளிடமிருந்து விடுதலை பெறவே வடக்கு மக்கள் விரும்புகின்றார்கள். இப்போது பயங்கரவாதிகளை கொன்று விட்டோம். வடகிழக்கு மக்களுக்கு விடுதலையை பெற்றுக்கொடுத்தோம்என இலங்கை அரசு தனது போர் வெற்றியின் போது அறிவிப்பு செய்தது.

தற்போது போர் நிறைவடைந்து எட்டு வருடங்களாகின்றன. அரசு அறிவித்தது போன்று வடகிழக்கில் புலிகள் இல்லை. பயங்கரவாதிகளும் இல்லை. ஆனால் மாவீரர் தினம் புலிகளின் காலத்தில் நடைபெற்றது போன்று எழுச்சியுடன் நடைபெற்றுள்ளது. இது எவ்வாறு சாத்தியமானது? சிலர் தற்போதுள்ள அரசியல் சூழ் நிலையை காரணமாக காட்டலாம். இந்த புதிய அரசுதான் இதற்கான வெளியை தந்தது எனவும் கூறலாம். ஆனால் உண்மை அதுவன்று. மக்கள் முடிவு செய்துவிட்டார்கள். அதனையே அவர்கள் செயலிலும் செய்து காட்டியுள்ளார்கள். கடந்த வருடம் 2016 இல் நடைபெற்ற மாவீரர் தினத்தை விட இம்முறை வடகிழக்கில் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டிருந்தது. இரண்டுக்கும் இடையில் மக்கள் தொகை தான் பெரும் வேறுபாடாக உள்ளது.

2016 இல் மூன்றாயிரம் பேர் கலந்து கொண்ட துயிலுமில்லங்களில் இம்முறை இரட்டிப்பாக ஆறாயிரம் பேர் கலந்து கொண் டிருந்தார்கள். இந்தளவு மக்கள் எங்கிருந்து வந்தார்கள்? இவர்களை செல்வதற்கு தூண்டியது என்ன? என்பது ஆராயப்பட வேண்டியதே. இங்குதான் மாவீரர்களது தியாகம் வலுப்பெறு கின்றது. போருக்குப் பின்னர் மாவீரர்களது சகோத ரர்கள், பெற்றோர்கள் அல்லது உறவினர்கள் தான் நினைவுகூரலை நடத்தி வந்தார்கள். ஆனால் இந்த வருட மாவீரர் தினத்தில், விடுதலைப் போராட்டத்தில் எந்த இழப்புக்களையும் எதிர்கொண்டிராதவர்கள், மாவீரர்களை உறவினர்களாக கொண்டிராதவர்கள், கலந்து கொண்டு அஞ்சலி செய்திருந்தார்கள். இதற்கு அவர்கள் கூறிய காரணம் ஒன்றே ஒன்றுதான் "எங்களுக்காக போராடியவர்களை நாங்கள் தானே நினைவுகூர வேண்டும்" என்பது தான்.

அதேபோன்று கடந்த வருடம் இவ்வாறான நினைவேந்தல் நடத்தியவர்களை வயதடிப்படையில் பார்க்கும் போது அதிகமானவர்கள் போராட்ட காலங்களோடு தொடர்புபட்ட வயதை கொண்டவர்களாகவே காணப்பட்டனர். ஆனால் இம்முறை பெருமளவான இளைஞர்களை துயிலுமில்லங்களில் காண முடிந்தது. இவை எல்லாம் அடுத்த சந்ததி விழித்து கொண்டுள்ளதனை தான் காட்டுகின்றது. "குண்டு மழை நடுவினிலும் குருதி மழை நடுவினிலும் நின்று போர்க்களம் பார்த்தவன், உண்ட சோறு தொண்டையுள் உள்நுழைய முன் நஞ்சை உண்டு தாய் மண் காத்தவன்"என்ற புரட்சி கவி காசி ஆனந்தனின் வரிகள் வீரமறவர்களின் தியாகங்களை கூறியது போன்று இப்பெரிய தியாகத்தை மறந்து விட முடியுமா? என்று இளைஞர் சமுதாயம் துணிந்துள்ளது. சாம்பல் மேடுகளில் நின்றும் நாங்கள் நினைவுகூரல்களை செய்வோம். அதனூடாக எங்கள் உரிமையைத் தொடர்ந்தும் கேட்போம் என்று இளைஞர் சமுதாயம் சொல்லியுள்ளது.

இதன் உச்சகட்ட வெளிப்பாடே யாழ்.பல்கலைக்கழகத்தில் மாவீரர் நினைவாக அமைக்கப்பட்டுள்ள தூபியில் நடைபெற்ற நினைவு நிகழ்வுகளாகும். உடைக்கப்பட்டிருந்த தூபியை தாங்களாகவே புனரமைத்து, வர்ணம் பூசி, மஞ்சள், சிவப்பு கொடிகளை கட்டி ஆயிரக்கணக்கான மாணவர்கள் கலந்து கொள்ளும் அளவிற்கு அந்த நிகழ்வுகள் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டிருந்தன. யார் இவற்றை எல்லாம் மறந்துவிட வேண்டும் என்று மாவீரர்களின் கல்லறைகளை உடைத்தார்களோ, அவர்களே உடைக்கப்பட கல்லறைகளைக் கட்டி தங்களுடைய வீரமறவர்களை நினைவுகூர ஆரம்பித்






துள்ளார்கள். அதுவும் ஆயிரக்கணக்கில் திரண்டு நினைவுகூர ஆரம்பித்துள்ளார்கள். இதேபோன்று இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருக்கும் துயிலுமில்லங்கள் முன்பாகவும் அஞ்சலி நிகழ்வுகளை நடத்துவதில் இளைஞர்களே முன்னின்றார்கள்.

எங்கள் பிள்ளைகள் விதைக்கப்பட்ட மண்ணில் சப்பாத்து கால்களுடன் ஆக்கிரமித்து நிற்கும் இராணுவமே வெளியேறு என்று குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளார்கள். நூற்றுக்கணக்கில் இராணுவம் நிலை கொண்டிருந்த போதிலும் அவர்கள் எதிரிலேயே நின்று கொண்டு துணிவுடன் நினைவுகூரலை செய்து காட்டியுள்ளார்கள். நினைவுகூரல் எங்கள் உரிமை, போரில் இனவழிப்பு செய்யப்பட்ட மக்களையும், போரில் வீரமரணம் அடைந்த எங்கள் போராளிகளை யும் நாங் கள் நினைவுகூருவோம். அதனை யாராலும், எந்த ஆயுதத்தாலும் தடுத்துவிட முடியாது என்பதனை 8 வருடங்களின் பின்னர் உறுதியுடன் தமிழ் மக்கள் கூறியுள்ளார்கள்.

இதற்கெல்லாம் மௌனம் பரிசாய்த் தரப்பட்டது. ஆனால் இந்த மௌனம் என்றோ ஒருநாள் கலைக்கப்படலாம் என்பதும் தமிழ் மக்களுக்கு தெரியும். அதற்கும் அவர்கள் தயாராகவே இருக்கின்றனர். இம்முறை நடைபெற்ற மாவீரர் தினத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் எழுச்சிப் பாடல்கள் ஒலிக்க விடப்பட்டிருந்தன. அதேபோன்று தமிழீழ சீருடை அணிந்த போராளிகளுடைய படங்களும் காட்சிப்ப டுத்தப்பட்டிருந்தன. தமிழீழ விடுதலைப்புலிகள் ஒரு பயங்கரவாத அமைப்பு என்ற தடை இலங்கையில் தற்போது அமுலில் இருக்கும் நிலையில், அந்த தடை செய்யப்பட்ட அமைப்பின் சின்னங்களை, பாடல் களை பயன்படுத்துவது அரசைப் பொறுத்தவரையில் பயங்கரவாத குற்றம். இவ்வாறு இருக்கையில் இவற்றை எல்லாம் செய்வதற்கு யார் துணிந்தார்கள்? யார் செய்தார்கள்?

தங்களுக்காக உயிரை அர்ப்பணித்து போராடிய விடுதலைப்புலிகளை மக்கள் நேசிக்கின்றார்கள். அவர்கள் காலத்தில் நடந்த மாவீரர்தின நிகழ்வுகளை போன்று நடத்துவதற்கு முயற்சித்து வருகின்றார்கள். அவற்றின் வெளிப்பாடே இவை எல்லாம். யுத்தத்தில் வென்ற இராணுவத்தை அரசு எவ்வாறு வெற்றி நாயகர்களாக கொண்டாடுகின்றதோ, அதேபோன்று இந்த மண் ணுக்காக மடிந்த போராளிகள்இந்த தேசத்தால்கௌரவிக்கப்பட வேண்டும் என்று மக்கள் விரும்புகின்றனர்.

"கடந்த 8 வருடமா எங்கள் உணர்வு களை அடக்கி வச்சிருந்தம், வீடுகளிலும் வேறு சில இடங்களிலும் எங்கள் பிள்ளைகளுக் காக அஞ்சலி செய்தும். சில நேரங்களில் யாருக்கும் தெரியாம துயிலுமில்லத்துக்கு வந்து பூ வைத்து கும்பிட்டு போயும் இருக்கிறன். இராணுவம் எங்க குடும்பத்துக்கு ஏதும் செய்து விடுமோ எண்ட பயத்தில தான் யாருக்கும் தெரியாம பிள்ளையளக்கு அஞ்சலி செய்தனாங்கள், ஆனா இப்பிடியே என்னால இருக்க முடியல. எனது பிள்ளை அடக்கம் செய்யப்பட்ட இடத்தில இருந்து கதறி அளவேணும் போல இருக்கும், அப்ப எல்லாம் நான். எனது அழுகையை அடக்கி விடுவன். இப்பிடியே பயந்து கொண்டு என்னால் இருக்கேலாம போச்சு. எண்ட பிள்ளை இருக்கிற மண்ணை நான் கட்டிய ணைக்க அதான் வந்தனான். அடுத்த வருசமும் வருவன். எண்ட பிள்ளைய பார்க்க யாரும் எனக்கு அனுமதி தரத் தேவையி ல்லை" என்று கனகபுரம் மாவீரர் துயிலுமில் லத்தில் அஞ்சலி செலுத்த வந்த மாவீரர் ஒருவரின் தாய்கூறுகின்றார். நினைவுகளையும் உணர்வுகளையும் சில காலம் தான் அடக்கி வைத்திருக்கலாம் அவை வெளியில் வரும் போது எதையும் தாங்கும் வல்லமை பொருந்தியவை.

"தாங்கள் பிள்ளைகள் எங்கள் குடும்பத்திற்காக மாய்ந்து விடவில்லை, அவர்கள் இந்த சனத்துக்காக செத்தவர்கள், நாங்கள் அவர்களுடைய அடையாளங்களை மாற்றி நினைவு கூரத் தயாரில்லை" என சாட்டி மாவீரர் துயிலுமில்லத்தில் அஞ்சலி செய்த தாயொருவர் கூறுகின்றார். கடந்த வருட மாவீரர் தின நிகழ்வுகளின் போது மாவீரர் துயிலுமில்லங்களுக்கு மக்கள் வந்து அஞ்சலி செலுத்த வேண்டும் என அரசியல்கட்சிக ளும் அரசியல் தலைவர்களுமே அழைப்பு விடுத்தார் கள். ஆனால் இம்முறை அவ்வாறு ஒன்றும் நடை பெறவில்லை. எந்த அரசியல் கட்சியும் எந்த மக்க ளையும் அழைக்கவில்லை. ஒரு சில இடங்களில் அரசியல் கட்சிகளது ஏற்பாட்டில் மாவீரர் தினம் நடைபெற்றிருந்த போதிலும் மக்கள் தாமாகவே அந்த நினைவுநிகழ்வுகளுக்கு சென்றிருந்தார்கள். மாவீரர்களின் பெயரால் தமிழர் தேசம் மீண்டும் ஒன்று பட ஆரம்பித்துள்ளது. இந்த ஒற்றுமை நீண்டு சென்று தங்கள் உரிமைகளுக்காக தொடர்ந்தும் அறவழியில் அவர்களைப் போராட வைக்கும் என்பதுதான் யதார்த்தம். தங்கள் மாவீரர் செல்வங்கள் உறங்கும் துயிலுமில்லங்களில் இருந்து இராணுவம் அடுத்த வருட மாவீரர் தினத்துக்குள் வெளியேற வேண்டும். இல்லையென்றால் நான் இராணுவ முகாமுக்குள் செல்வேன் என கோப்பாயில் அஞ்சலி செலுத்திய ஒரு தாய் கூறுகின்றார். சுதந்திர தாகம் கொண்டு, எழுச்சி கொண்ட எம்மக்களை எந்தத் தடைகளாலும் எதுவும்செய்துவிட முடியாது. ஆகாயத்திலிருந்து வீழும் குண்டுகளாலும் அவர்களது விடுதலை வேட்கையை அழித்துவிட முடியாது. இது 2008 இல் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மாவீரர் தின உரையில் கூறியது.

**உ.சாளின்**

# உலகை ஆட்டிப்படைத்த பெண் தாதாக்கள்

சிகரெட் புகை, மதுக்கோப்பைகள் உருளும் சத்தம், உரத்த குரலில் கெட்டவார்த்தைகள், மிரட்டும் தோற்றத்தில் முரட்டு ஆசாமிகள்... 'தாதா' என்றால் பலருக்கும் மனதில் தோன்றும் அட்மாஸ்ஃபியர் இதுதான். ஆனால், அழகிய பெண்களும் ஆர்ப்பாட்டமான தாதாக்களாக இருப்பதுண்டு. பல நூறு ஆண்களை அடக்கி ஆண்டு, சில பல கொலைகளைச் செய்து உலகை உலுக்கிய சில பெண் தாதாக்கள் இங்கே...




## க்ளாடியா ஆகா ஃபெலிக்ஸ்

பெண் தாதாக்களுக்கு ஓர் அழகிப்போட்டி வைத்தால், அந்தக் கிரீடம் க்ளாடியா தலையில் நிரந்தரமாக இருக்கும். இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட அத்தனை சோஷியல் மீடியா ஏரியாக்களிலும் புகுந்து விளையாடும் க்ளாடியா, டிசைனர் உடைகளையே அணிவார். அவர் கையில் வைத்திருக்கும் ரிவால்வர்கூட அவருக்கென பிரத்தியேகமாக தங்கத் தகடுகள் பொருத்தி டிசைன் செய்யப்பட்டது. ஸ்டைலிஷான AK-47 துப்பாக்கியும் வைத்திருப்பார்.

உலகின் மிக பயங்கரமான போதை கடத்தல் தாதா கூட்டம் என்று மெக்ஸிகோவின் 'லாஸ் ஆன்ட்ராக்ஸ்' குரூப்பைச் சொல்வார்கள். நூற்றுக்கணக்கான கொலைகளைச் செய்த டெர்ரர் கோஷ்டி. க்ளாடியாவின் காதலர் ஜோஸ் ரோட்ரிகோ எல் சினோ, இதன் தலைவனாக இருந்தார். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு அவர் பொலிஸில் சிக்கிவிட, இப்போது இந்த குரூப்புக்குத் தலைவியாக க்ளாடியா இருக்கிறார். மூன்று குழந்தைகளையும் பார்த்துக்கொண்டு, கடத்தலையும் கொலைகளையும் டீல் பண்ணுகிறார்.

## சாண்ட்ரா ஆவிலா பெல்ட்ரான்



'பசுபிக் ராணி' என்று பெயர் வாங்கிய தாதா. மெக்ஸிகோ நாட்டு போதைப்பொருள் கடத்தல் கும்பலின் தலைவி. இவர், பொலிஸாக இருந்து போதைமருந்துக் கடத்தல்காரராக மாறிய ஒரு தாதாவைத் திருமணம் செய்துகொண்டார். போட்டி கும்பலால் கணவர் கொல்லப்பட, சாண்ட்ரா இரண்டாவதாகத் திருமணம் செய்து கொண்டார்.

இவரும் அவரைப்போல, ஒரு தாதா பொலிஸ் தான். அவரையும் போட்டி கோஷ்டி தீர்த்துக்கட்ட, தானே ஒரு தாதாவாக மாறினார். போதைப் பொருள் கடத்தல், கொலைகள் என சாண்ட்ரா வின் சாம்ராஜ்ஜியம் வெற்றிக ரமாகப் போனது. தன் தாதா முகத்தை வெளியுலகுக்குக் காட்டாமல், ஒரு துணிக்கடையும் நடத்திவந்தார்.

2002 ஆம் ஆண்டு, இவரின் மகனை ஒரு கும்பல் கடத்தி, 32 கோடி ரூபாய் கேட்டது. பணத்தை வீசிவிட்டு மகனை மீட்டு வந்தார்.

பொலிஸ் மிரண்டுபோய் விசாரித்த போதுதான் இவரின் தாதா வரலாறு தெரியவந்தது.




## அன்னா க்றிஸ்டினா



அமெரிக்காவில் படுரகசியமாகப் பாலியல் தொழில் நடத்திவந்த இந்த கேங் லீடரை, 2012 ஆம் ஆண்டு பொலிஸ் பிடித்தது. நியூயோர்க்கில் இருந்தபடி, சந்தேகமே வராமல் தன் பிசினஸை செய்துகொண்டிருந்தார். பில்லியனர்கள் தவிர வேறு யாருக்கும் 'சேவை' செய்வதில்லை. 'பிளேபாய்' இதழை அலங்கரித்த பல மொடல்களும், இவரின் கட்டளைகளைக் கேட்பார்கள்.

பவுன்ஸர்களின் துணையுடன் பவனிவந்த இவரை, கஸ்டமர்போல ஒரு பொலிஸ் அதிகாரி இரகசியக் கமராவுடன் சென்று வளைத்தார். வெறும் ஐந்தே ஆண்டுகளில் 65 கோடி ரூபாய் சம்பாதித்த இவர், இப்போது விசாரணையில் இருக்கிறார்.

## ரஃபேலா டி ஆல்டீரியோ



ஃபெராரி காரில் தங்கத் தகட்டில் நம்பர் பிளேட் பதித்து, உலா வந்தவர். 'காட்ஃபாதர்' பட தாதா போன்ற இந்த இத்தாலிய 'காட்மதர்', நேப்பிள்ஸ் நகரின் கமோரா குரூப்பின் தலைவி. கணவர் நிகோலா கொல்லப்பட்ட பிறகு, தலைமைப் பொறுப்புக்கு வந்தார். போதைப்பொருள் கடத்தல், சட்டவிரோத ஆயுதக் கடத்தல், மிரட்டிப் பணம் பறிப்பது, கள்ளநோட்டுப் பரிமாற்றம் என எதையும் விட்டுவைக்காத இந்த குரூப், இதுவரை செய்த கொலைகள், 4,000 இருக்குமாம். கேங்கின் வருமானம், ஆண்டுக்கு 13 இலட்சம் கோடி ரூபாய். இது பல நாடுகளின் பட்ஜெட்டை விட அதிகம். மூன்று முறை துப்பாக்கியால் சுடப்பட்டுப் பிழைத்த ரஃபேலா, 2012 ஆம் ஆண்டு இராணுவம் நடத்திய ரெய்டில் கைதுசெய்யப்பட்டார்.

## தெல்மா ரைட்




இவரின் கணவர் ஜாக்கி ரைட், அமெரிக்காவின் பிரபலமான போதை கடத்தல் மன்னன். 1986 ஆம் ஆண்டு, ஜாக்கி கொல்லப்பட, அந்த இடத்துக்கு வந்தார் தெல்மா. அப்போதே ஒரு மாதத்தில் 25 கோடி ரூபாய் சம்பாதிக்கும் அளவுக்கு அமெரிக்க நகரங்களில் இவரின் கடத்தல் நெட்வொர்க் விரிந்திருந்தது. 91 ஆம் ஆண்டு போட்டி தாதாக் குழு ஒன்றுடனான துப்பாக்கிச் சண்டையில் நூலிழையில் உயிர் தப்பினார். தன் ஒரே மகனுக்காக அந்த நிமிடத்திலிருந்து கடத்தலையும் தாதாயிஸத்தையும் துறந்தார். இவர், இப்போது புகழ்பெற்ற எழுத்தாளர், தன்னம்பிக்கைப் பேச்சாளர். குடும்பப் பிரச்சினைகளுடன் வரும் பெண்களுக்கு கவுன்சலிங்கும் தருகிறார். "யாரையும் கொலை செய்யலாம், கோடி கோடியாகச் சம்பாதிக்கலாம். தாதா வாழ்க்கையில் இதை வெற்றியாக நினைக்க முடியாது. தாதாக்கள் முடிவில் கொல்லப்படுவார்கள் அல்லது சிறையில் இருப்பார்கள். இது எப்படி வெற்றியாகும்?" என அர்த்தத்துடன் கேட்கிறார் இவர்.

---

"துளை செல்லும் காற்று மெல்லிசையாதல் அதிசயம்" என வைரமுத்து சொன்னதைக் கேட்ட யாரோ ஒருவருக்கு ஐடியா தோன்றியிருக்கிறது. அந்த மூங்கிலை வைத்தே ஸ்பீக்கர் ஒன்றைத் தயார் செய்து விட்டார்.

இந்த மூங்கில் ஸ்பீக்கருக்கு மின்சாரம் தேவையில்லை என்பதே. நம் மொபைலை இந்த கேட்ஜெட்டின் மீது வைத்து, மியூஸிக் ஆப்-ஐ திறக்க வேண்டியதுதான். மொபைலிலிருந்து வரும் இசையைப் பெருக்கி, பன்ம டங்காக்கி அறை முழுவதும் இது நிறையச் செய்கிறது.

பார்க்கவும், அழகாய், கேட்கவும் இனிமையாய் இருக்கும் இந்த கேட் ஜெட், சுற்றுப்புறத்துக்கும் நன்மை செய்கிறது. எடுத்துச் செல்வதும் எளிது. பயன்படுத்துவதும் எளிது.






எலெக்ட்ரிக் வாகனங்களைத் தன் பெருமைமிகு படைப்புகளாக அடுக்கி வரும் டெஸ்லா நிறுவனம் அடுத்த பாய்ச்சலுக்கு ரெடி. நவீன தொழில்நுட்பங்களுடன் அட்டகாசமான வடிவத்தில் வந்திருக்கும் டெஸ்லா செமி-ட்ரக் 36,285 கிலோ வரை எடையைச் சுமக்குமாம்.

அவ்வளவு எடையைத் தாங்கிக்கொண்டு வந்தாலும் 95 கிலோமற்றர் வேகத்தை 5 விநாடிக ளில் எட்டிவிடுமாம். ஆச் சரிய மூட்டும் வித மாக, வெறும் 30 நிமிட சார்ஜில் 640 கி.மீ. தூரம் வரை செல்லலாம் என்கிறார் மஸ்க்.

தானாக ட்ரக் இயங்கும் வகையில் ஆட்டோபைலட் வசதி, ஒரே பாதையில் விலகாமல் செல்லும் வகையில் சென்சார்கள் எனப் பல்வேறு பாதுகாப்பு அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.

# ஒப்பற்ற தலைவன் பிரபாகரன்



“வழிநடத்தக்கூடிய தலைவன் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பது கொரில்லா போரின் ஒரு விதிமுறை தான். ஆனால், எப்போதுமே போர்க்களத்தில் நிற்க வேண்டும் என்று அவர் விரும்புவார். அப்படி ஒரு முறை அவர் வீட்டில் இருந்த நேரத்தில் குளிக்கச் செல்கிறார். அந்தச் சமயத்தில் இந்திய அமைதிப் படை அவருடைய வீட்டுப்பகுதியை ஆக்கிரமித்தது.”

“தாய் பிரபாகர னுக்கு கடிதம் எழுதுகிறார். அந்தக் கடிதத்தில் ‘நீங்கள் விடுதலை இயக்கப்படையை நடத்தக் கூடியவர் மட்டுமே. நீங்கள் இன்று இருப்பீர்கள், நாளை இல்லாமல் போவீர்கள். ஆனால், தனி நாடு கோரிய எங்களுடைய போராட்டம் தொடரும். அதற்காக எங்களுடைய அனைத்துப் பிள்ளைகளையும் அனுப்பி வைப்போம்’”

இயற்கை எனது நண்பன் வாழ்க்கை எனது தத்துவாசிரியன் வரலாறு எனது வழிகாட்டி” என்று தன் டைரியில் எழுதி வைத்துக் கொண்டவர் வேலுப்பிள்ளை பிரபாகரன். “என்னுடைய தமிழீழ இலட்சியத்தில் இருந்து, நான் மாறினால் என் பாதுகாவலரே என்னைச் சுட்டுக் கொல்லலாம்” என்று பிரகடனப் படுத்திக் கொண்டவர் அவர்.

“வாழ்க்கையும், தத்துவமும் வேறு வேறு அல்ல; இரண்டும் ஒன்றுதான்” என்று கூறியதுடன், தத்துவங்களை வாழ்க்கையாக வாழ்ந்து காட்டியவர். ஈழ மக்களுக்காக போராடிய மாவீரன் பிரபாகரனை இந்நாளில் நினைவில் கொள்வோம். அவரை நேரில் சந்தித்த சில அரசியல் தலைவர்கள், தங்களின் நினைவலைகளை நம்முடன் பகிர்ந்துகொண்டனர்.

### பிரபாகரன் பற்றி திராவிடர் விடுதலை கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி

“விடுதலைப் புலிகளுக்கு என்னுடைய தோட்டத்தில்தான் மூன்று ஆண்டுகள் இராணுவப் பயிற்சி முகாம் நடந்தது. 1984இல் இருந்து 1986 ஆம் ஆண்டு வரை இந்தப் பயிற்சி நடைபெற்றது. அப்படிப் பயிற்சி முடித்த குழுக்களை ஆய்வு செய்வதற்காக, புலிகள் தலைவர் பிரபாகரன் வருவார்... ஒருமுறை திம்பு பேச்சுவார்த்தையைத் தவிர்ப்பதற்காக, இங்கு வந்து தங்கியிருந்தார். சுமார் 23 நாட்கள் இங்கு தங்கியிருந்தார். 1989 ஆம் ஆண்டு நவம்பர் 24 ஆம் திகதி முதல்முறையாக “மாவீரர் நாளை” அறிவித்தார். விடுதலைப்புலிகள் இயக்கத்தில் களப்பலியான சங்கரின் நினைவாக இதை அவர் அறிவித்திருந்தார். இந்த நினைவுநாளுக்கு என்னையும் அழைத்திருந்தார். ஈழத்துக்குச் சென்ற நான், அந்த நிகழ்வில் பங்கேற்ற பின் அவரைச் சந்தித்துப் பேசினேன். அப்போது தமிழக அரசியல் நிலைமை குறித்துப் பேசினார். அப்படி பேசிக் கொண்டிருந்தபோது அண்ணாவின் “ஏ தாழ்ந்த தமிழகமே...” என்ற நூலை முதல் முறையாகப் படித்ததாகச் சொன்னார். அண்ணாவின் எழுத்து நடை குறித்து பிரபாகரன் சிலாகித்துப் பேசினார். மத்திய அரசுக்கு எதிராக, தமிழகத்தின் உரிமைக்காக நடக்கின்ற போராட்டங்கள் வெற்றிபெறும் என்று பேசிக் கொண்டிருந்தார். நேதாஜி மீது பற்றுக் கொண்டவராக இருந்தார். அதன் காரணமாக, அவரைப் பற்றிய நூல்களையும் புகைப்படங்களையும் வைத்திருந்தார்.

தோழர்களுடனான பிரபாகரனின் உரையாடல், மிகுந்த நகைச்சுவை உணர்வோடுதான் இருக்கும். உறுதியான போர்க்குணம் எந்தளவுக்கு அவரிடம் இருந்ததோ, அதே அளவு கனிவான குணமும் இருந்ததைப் பார்க்க முடிந்தது. உதாரணமாக, ஒருமுறை படைத்துறை அறிவியல் பற்றிய நூல்களை வாங்க டில்லி சென்ற நான், மீண்டும் சென்னை வந்தபோது, அவர் தங்கியிருந்த வீட்டில் போய்ப் பார்த்தேன். அப்போது மன்னார் மாவட்ட படைத்தளபதி விக்டர் என்பவர் இறந்துவிடுகிறார். இறந்துபோன விக்டரின் வீடியோ கசட் அப்போதுதான் அங்கு வந்துள்ளது. அப்போது, நாங்கள் இருவரும் இரும்புக் கட்டிலில் அமர்ந்துகொண்டு இருக்கிறோம். உதவியாளர்கள் அந்தக் கசட்டை ஓட விடுகிறார்கள். பார்த்துக்கொண்டிருக்கிற சமயத்தில், அவருக்குப் பின்புறமாக காவலுக்கு இரண்டு பேர் நிற்கிறார்கள். அப்போது, பின்னால் பாதுகாப்புக்கு நின்றிருந்தவர்களிடம் முன்னாள் போய் உட்காரும்படி கூறுகிறார். அதற்கு உண்மையான காரணம் என்னவென்றால் விக்டரின் இறுதி நிகழ்வைப் பார்த்துக்கொண்டிருந்த அவரின் கண்களில் கண்ணீர் கோர்த்துக்கொண்டு வழிகிறது. அதை அந்தப் பாதுகாவலர்கள் பின்னால் இருந்து பார்த்துவிடக் கூடாது என்பதற்காக, அப்படி அவர்களை முன்னால் உட்காரச் சொன்னார் என்பதை அருகில் இருந்த நான் தெரிந்து கொண்டேன்.

வழிநடத்தக்கூடிய தலைவன் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பது கொரில்லா போரின் ஒரு விதிமுறைதான். ஆனால், எப்போதுமே போர்க்களத்தில் நிற்கவேண்டும் என்று அவர் விரும்புவார். அப்படி ஒருமுறை அவர் வீட்டில் இருந்த நேரத்தில் குளிக்கச் செல்கிறார். அந்தச் சமயத்தில் இந்திய அமைதிப்படை அவருடைய வீட்டுப்பகுதியை ஆக்கிரமித்து தாக்குதலை நடத்துகிறது. சத்தம்கேட்டு குளித்துக் கொண்டிருந்தவர் வெறும் துண்டை மட்டும் கட்டிக்கொண்டு ஓடி வந்து துப்பாக்கியுடன் களத்தில் குதிக்கிறார். அவர்களுக்குப் பதிலடியும் கொடுக்கிறார். பின்னர் இயக்க வீரர்கள், ஆயுதங்களை வாங்கிக் கொண்டு விடுவிக்கிறார்கள். அப்படி நடந்த தாக்குதலில் அவருக்கு சிறிய காயம் ஏற்பட்டது. அந்த நிகழ்வைக்கூட மிக வேடிக்கையாகச் சொல்வார்.

விடுதலைப்புலிகள் படைக்கு ஆட்களைச் சேர்க்கும்போது, அதற்கென விதிகள் உள்ளன. அந்த விதியில், இயக்கத்தில் ஏற்கனவே இருப்பவர்களின் வீட்டில் இருந்து எடுக்கமாட்டார்கள். அதேபோன்று ஒரு குடும்பத்தில் இருந்து ஒருவர் போரில் பங்கேற்று களத்தில் மடிந்து போனால், அப்படி மடிந்துபோனவர்களின் வீட்டில் இருந்தும் எடுக்க மாட்டார்கள். அப்படி விதிமுறைகள் இருக்கின்ற சூழலில் ஒரு தாய் பிரபாகரனுக்கு கடிதம் எழுதுகிறார். அந்தக் கடிதத்தில் ‘நீங்கள் விடுதலை இயக்கப் படையை நடத்தக் கூடியவர் மட்டுமே. நீங்கள் இன்று இருப்பீர்கள், நாளை இல்லாமல் போவீர்கள். ஆனால், தனி நாடு கோரிய எங்களுடைய போராட்டம் தொடரும். அதற்காக எங்களுடைய அனைத்துப் பிள்ளைகளையும் அனுப்பி வைப்போம்’ என்று முடித்திருந்தார். அந்தக் கடிதத்தை பிரபாகரன் படித்துக் காட்டினார். அதோடு இல்லாமல் அந்த தாயின் கடிதத்துக்குப் பதிலும் எழுதினார். “நீங்கள் வசிக்கும் பகுதிக்கு நான் வரும்போது உங்களை வந்து கட்டாயம் சந்திக்கிறேன்” என்று அதில் குறிப்பிட்டிருந்தார். அனைவருக்கும் மதிப்பளிக்கும் அந்த குணம்தான், அனைவரின் உள்ளங்களிலும் அவரை நிலைத்து நிற்கச் செய்துள்ளது” என்றார்.

### தந்தை பெரியார் திராவிடர் கழகத்தைச் சேர்ந்த கோவை ராமகிருஷ்ணன்

“டேராடூனில் இந்திய ராணுவப் பயிற்சி அகடமியில் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த 10 வீரர்கள் பயிற்சி எடுத்தனர். அப்படி அங்கு பயிற்சி எடுத்துவிட்டு வந்தவர்கள், கோவையில் எங்கள் தோட்டத்தில் தங்கி இருந்த, புலிகள் இயக்கத்தினருக்குப் பயிற்சி கொடுத்தனர். அப்படித்தான் எனக்கு பிரபாகரன் அறிமுகம் ஆனார். அதன்பிறகு 1990 ஆம் ஆண்டுகளில் வன்னி முகாமில் அவரைப் போய்ச் சந்தித்தேன். அனைவரிடமும் மிக எளிமையாக பழகக் கூடியவர். அவர் எடுத்துக்கொண்ட நோக்கத்தில் இருந்து வழுவாதவர். பேச்சு, செயல் என அனைத்தையும் மிக நேர்த்தியாகக் கையாளக்கூடியவர் அவர். இயக்கத்துக்காக வீரர்கள் தங்களை அர்ப்பணித்துக் கொண்டாலும், அவர்களிடம் மனம்விட்டு பேசக் கூடியவர். தனிப்பட்ட ரீதியில் வீரர்களுக்கு ஒரு பிரச்சினை இருந்தால் ஒரு தாய் போல இருந்து அவர்களை அரவணைத்துப் பேசி, அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கக் கூடியவர்.

மிகவும் கருணை உள்ளம் கொண்டவர் பிரபாகரன். உதாரணத்துக்கு சிங்கள இராணுவக் கைதிகளை விடுதலைப் புலிகள் சிறை வைப்பார்கள். அப்படி சிறை வைப்பவர்களை, மிகுந்த கண்ணியத்தோடும் மனித நேயத்தோடும் நடத்த வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தார்.

ஜூனியர் விகடன்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் 1984-1986 களில் இந்தியாவில் தங்கி போராட்டங்களை விரிவுபடுத்திய காலங்களில் அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் அவரைப் பற்றி கூறிய விடயங்கள் ஜூனியர் விகடனில் பிரசுரமாகியிருந்தது. அக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.

# அஷ்வின் உலகின் தலைசிறந்த ஸ்பின்னரா? எண்கள் சொல்லும் உண்மை!




வோர்னேவால் முடியவில்லை... முரளிதரனால் முடியவில்லை... வாசிம் அக்ரம், மெக்ராத், டேல் ஸ்டெய்ன் எவராலும் முடியவில்லை. அதிவேகமாக 300 விக்கெட் எடுத்த பந்து வீச்சாளர் என்ற டெனிஸ் லில்லியின் சாதனையை எவராலும் முறியடிக்க முடியவில்லை.

1981இல் அரங்கேறிய அந்தச் சாதனையை சுழல் ஜாம்பவான்கள் என்று புகழப்பட்டவர்களாலும், வேகச் சூறாவளிகள் என்று வர்ணிக்கப்பட்டவர்களாலும் அசைக்க முடிய்வில்லை. கடந்த 24ஆம் திகதி நாக்பூரில் அந்த 36 ஆண்டுகாலச் சாதனையை முறியடித்துவிட்டார் ரவிச்சந்திரன் அஷ்வின்.

54 போட்டிகளில் 300 விக்கெட்டுகள். அந்த மைல்கல்லை எட்டிவிட்டார். டெனிஸ் லில்லியைவிட 2 போட்டிகள் குறைவாக. அஷ்வின் எப்படி சாதிக்கிறார்? அவர் விக்கெட்டுகளை அள்ளுவது எப்படி? இந்தியாவின் தலைசிறந்த ஸ்பின்னர் இவர்தானா? சர்வதேச அளவிலும் இவரை மிஞ்ச ஆளில்லையா? எல்லா கோணங்களிலிருந்தும் அலசுவோம்.

இந்திய டெஸ்ட் அணியில் அசைக்க முடியாத பெயர்களில் ஒன்று அஷ்வின். கடந்த 6 ஆண்டுகளில் 7 தொடர்நாயகன் விருதுகள். பல போட்டிகளில் மட்ச் வின்னர். எப்போதுமே எதிரணிக்கு சிம்ம சொப்பனம். குறுகிய காலத்தில் அதிக தொடர்நாயகன் விருது வாங்கிய ஒரே இந்திய வீரர். ஹர்பஜன் சிங் என்ற ஜாம்பவானை வெயிட்டிங் லிஸ்டுக்கு அனுப்பியவர்.



ஜடேஜாவுடன் இணைந்து பந்து வீச்சில் அசைக்க முடியாத இணைப்பாட்டம் அமைத்து அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகளை இந்திய மண்ணில் அலறவிட்டவர். நியூசிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் , இலங்கை அஷ்வினுக்காக நேர்ந்து விடப்பட்ட அணிகள். 52 பந்துகளுக்கு ஒருமுறை அஷ்வின் ஒரு விக்கெட் வீழ்த்துகிறார். அதாவது ஒவ்வொரு 9 ஓவருக்கும் ஒரு விக்கெட்.

சொடுக்கு போல் போட்டேனு வச்சுக்கயேன் அவன ஈஸியா அவுட்டாக்கிடலாம் - சென்னை 28 படத்தில் ஜெய் குறிப்பிடும் அந்த சொடுக்கு போல் பற்றி கிரிக்கெட் விளையாடுபவர்களில் பலருக்கும் அர்த்தம் புரிந்திருக்காது.

இன்று "கேரம் போல்" என்று பிராண்ட் ஆகியிருப்பது அந்த "சொடுக்கு போல்" தான். 1940-களில் சிலர் அந்த வகையான பந்துகளை வீசியுள்ளனர். பின்னர் அஜந்த மெண்டிஸ் அடிக்கடி அதைப் பயன்படுத்த "கேரம் போல்" எனப் பெயர் பெற்றது. அதை அடுத்த லெவலுக்கு எடுத்துச் சென்றவர் அஷ்வின்.

தன் முதல் டெஸ்ட் போட்டியிலேயே அதைப் பயன்படுத்தத் தொடங்கினார். மெண்டிஸ் பின்னாளில் காணாமல் போக, அஷ்வின் இன்று டாப் பந்துவீச்சாளராக உருவெடுத்துள்ளார்.

ஏனெனில், அஷ்வின் அதை மட்டுமே பயன்படுத்தவில்லை. வழக்கமாக பந்து வீசிக்கொண்டிருப்பார், திடீரென கேரம் போல் வந்து விழும். அந்த சர்ப்ரைஸ் டெலிவரிகள்தான் அஷ்வினின் ட்ரம்ப் கார்டு. அதற்கு நடுவில் பல்வேறு வகையான யுக்திகளையும் கையாண்டார். ஆஃப்-ப்ரேக், ஆர்ம் பால், கேரம் பால், தூஸ்ரா என்று ஆஃப் ஸ்பின்னின் அனைத்து வெரைட்டிகளையும் கலந்து கட்டி அடிப்பவர், துல்லியமாக லெக்-ப்ரேக் போட்டு பட்ஸ்மேன்களை அலறவிட்டுள்ளார். கூக்ளியும் அஷ்வினுக்கு அத்துப்படி.

துடுப்பாட்டவீரர்கள் அஷ்வினை எதிர்கொள்வதில் இதுதான் பிரச்சினை. பந்து ஆஃப்-ஸ்பின் ஆகும் என்று தெரிந்து நின்றாலே, அது ஸ்பின் ஆகும் தன்மை முதல், பிட்ச் ஆகும் இடம் வரை அனைத்தையும் கணித்து ஆடவேண்டியிருக்கும். ஆனால், தன்னை நோக்கி வரும் பந்து எப்படிப்பட்டது என்று கொஞ்சமும் கணிக்க முடியாமல் இருக்கும்போது எப்படிப்பட்ட துடுப்பாட்ட வீரர் திணறத்தானே செய்வான். அஷ்வினின் வெற்றிக்குக் காரணமே அவர் தன்வசம் கொண்டிருக்கும் இத்தனை ஆயுதங்கள்தான்.

இந்தியா, இலங்கை, வங்கதேசம் ஆகிய மூன்று நாடுகளிலும் அஷ்வினின் பெர்போமன்ஸ் வேற லெவல். இங்கு விளையாடியுள்ள 41 போட்டிகளில் 259 விக்கெட்டுகளை அள்ளியிருக்கிறார். ஒவ்வொரு போட்டிக்கும் குறைந்தபட்சம் 6 விக்கெட்டுகள். அதில் 26 முறை ஐந்து விக்கெட்டுக்கு மேல் வீழ்த்தியுள்ளார். வார்னே, முரளிதரன், கும்ப்ளே போன்ற சுழல் ஜாம்பவான்களின் ஓய்வுக்குப் பிறகு அடையாளம் காணப்பட்ட ஸ்பின்னர்கள் ஏகம்பேர். ஆனால், அவர்களுள் அஷ்வினின் உயரத்தை எட்டியவர்கள் சொற்பம்.

ரங்கன ஹேரத், சயீத் அஜ்மல் தவிர்த்து வேறு யாரும் பெரிய அளவில் சாதிக்கவில்லை. நாதன் லயான், தாஹிர் போன்றவர்களும் கூட அவ்வப்போது காணாமல் போய்விடுகிறார்கள். இப்போது ஜடேஜா...டெஸ்ட் போட்டிகளில் ஒரு விக்கெட் வீழ்த்த லயான் எடுத்துக்கொள்வது 61 பந்துகள். ஜடேஜாவுக்குத் தேவைப்படுவது 60. ஹேராத், தாஹிருக்கு முறையே 60, 69. ஷகிப் அல்ஹசன் ஒவ்வொரு 64 பந்துக்கும் ஒரு விக்கெட் வீழ்த்துகிறார். ஆக, இன்றைய வீரர்களில் அஷ்வினைப் போல் விக்கெட் வீழ்த்தும் ஸ்பின்னர் யாரும் இல்லை என்றே சொல்லலாம்.

இவர்தான் இந்தியாவின் தலைசிறந்த பந்துவீச்சாளர் என்ற புகழாரம் ஒருபக்கம், அவர் உள்ளூர்ல மட்டும்தான் ஜொலிக்கிறார் என்ற தூற்றல் மறுபக்கம். அஷ்வினின் பெர்போமன்ஸை எப்படித்தான் ஒப்பீடு செய்வது? ஒரு பௌலரை சிறந்த பௌலர் என்று வரையறுக்கும்போது, உலகின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் அவரது செயற்பாட்டை ஒப்பிடுவது அவசியம்.

தலைசிறந்த பந்துவீச்சாளர் என்று அஷ்வினை அடையாளப்படுத்தும்போது முரளி, வோர்னே, கும்ப்ளே போன்ற பந்து வீச்சாளர்களம் ஒப்பீடு செய்ய நேர்கிறது. அதையும் செய்துதான் பார்ப்போமே...

இன்றும் ஷேன் வோர்ன் என்ற பெயரைக் கேட்டதும் பல துடுப்பாட்ட வீரர்களுக்கு உள்ளூற உதறும். அவரை உலகின் தலைசிறந்த ஸ்பின்னர் எனப் போற்றக் காரணம், அனைத்து ஆடுகளங்களிலும் அவர் தன்னை நிரூபித்ததார். அவர் வீழ்த்திய 708 விக்கெட்டுகளில் 90 சதவிகிதத்துக்கும் மேலானவை இந்தியத் துணைக்கண்டத்துக்கு வெளியே எடுக்கப்பட்டவை. வேகப்பந்துவீச்சுக்குச் சாதகமான ஆஸ்திரேலிய மைதானங்களில் 300-க்கும் மேற்பட்ட விக்கெட்டுகளை அள்ளியுள்ளார். ஒவ்வொரு ஆஷஸ் தொடரிலும் 34,31,40 என விக்கெட்டுகளை வீழ்த்தியவர் அவர். அஷ்வின்...? துணைக் கண்டத்துக்கு வெளியே 14 போட்டிகளில் 41 விக்கெட்டுகள்.



இந்தியா அடுத்து செல்லும் தென்னாபிரிக்க சுற்றுப்பயணத்துக்கு அஷ்வின் அனுபவம் இல்லாத வீரராகத்தான் போகப்போகிறார். ஆச்சர்யம் வேண்டாம்.

ஏனெனில், அங்கு அவர் ஆடியிருப்பது வெறும் ஒரு போட்டியில் மட்டுமே. பலரும் சொல்வதுபோல், வெளிநாட்டு ஆடுகளங்களில் அஷ்வினின் செயற்பாடு சொல்லிக்கொள்ளும்படி இல்லை. அந்த ஆடுகளங்கள் ஸ்பின்னுக்கு உதவாது என்ற பொதுப்படையான பேச்சு உண்டு. அந்த அடிப்படையில் அஷ்வினைக் குறைகூறாமல் இருந்துவிடவும் முடியாது. ஏனெனில், அவர் ஆடிய வெளிநாட்டுத் தொடர்களில் அவரை விட மற்ற ஸ்பின்னர்கள் நன்றாகவே செயற்பட்டுள்ளனர். அதற்கான புள்ளி விபரம்...

இங்கிலாந்து மண்ணில் முதல் 2 போட்டிகளில் அஷ்வின் வீழ்த்தியது 3 விக்கெட்டுகள், கும்ப்ளே 4... அவுஸ்திரேலியாவில் ஆடிய முதல் 6 போட்டிகளில் அவர் வீழ்த்தியது 29, தென்னாபிரிக்காவில் ஆடிய முதல் போட்டியில் கும்ப்ளே வீழ்த்திய விக்கெட்டுகளின் எண்ணிக்கை 8! ஆக, இந்தியாவின் தலைசிறந்த ஸ்பின்னர் அஷ்வினா என்றால்... நிச்சயம் இல்லை. குறைவான போட்டிகளில் அதிக விக்கெட் வீழ்த்திய இந்திய பந்து வீச்சாளர்கள் பட்டியலில் கும்ப்ளேவைப் பின்னுக்குத்தள்ளினாலும், இந்த 3 மைதானங்களிலும் சாதிக்கும் வரை இந்தியாவின் தலைசிறந்த ஸ்பின்னர் நிச்சயம் அஷ்வின் இல்லை.

நாக்பூர் டெஸ்டில் ஆடிய இலங்கை அணி வீரர்கள் யார் என்பது நிச்சயம் நமக்கு நினைவிருக்காது. மேற்கிந்தியத்தீவுகள் அணியில் யார் ஆடுகிறார்கள் என்று கரீபிய மக்களுக்கே தெரியாது. இந்த இரு அணிகளுடன்தான் அஷ்வின் 95 விக்கெட்டுகள் வீழ்த்தியிருக்கிறார். எல்லாம் அல்லு சில்லுகள். இன்று உலகின் தலைசிறந்த டெஸ்ட் பட்ஸ்மேன்களாகக் கருதப்படும் ஸ்டீவ் ஸ்மித், ஜோ ரூட் இருவரையும் 26 இன்னிங்ஸ்களில் 4 முறை மட்டுமே வீழ்த்தியுள்ளார். அதற்காக அவர் வீழ்த்திய விக்கெட்டுகளெல்லாம் சுமாரான பட்ஸ்மேன்கள் என்று சொல்லவில்லை. தரமான பட்ஸ்மேன்களுக்கு எதிராக, வெளிநாட்டு ஆடுகளங்களில் அஷ்வின் இன்னும் நிரூபிக்கவேண்டும். (ம)

# காலத்தால் அழியாத கானங்கள் ...

படம் : நான் ஏன் பிறந்தேன்
இசை: ஷங்கர் கணேஷ்
பாடியவர் : ரி.எம்.சௌந்தரராஜன்
பாடல் வரிகள்: வாலி




நான் பாடும் பாடல் நலமாக வேண்டும்
இசைவெள்ளம் நதியாக ஓடும் அதில்
இள நெஞ்சம் படகாக ஆடும்
(நான் பாடும்..)
தாழம்பூவில் காணும் பொன்வண்ணம்
நாளும் வாழும் தோகைப்பூங்கன்னம்
தாழம்பூவில் காணும் பொன்வண்ணம்
நாளும் வாழும் தோகைப்பூங்கன்னம்
எங்கே நானென்று தேடட்டும்
உன்னை சிந்தாத முத்தங்கள் சிந்த
எங்கே நானென்று தேடட்டும்
உன்னை சிந்தாத முத்தங்கள் சிந்த
காலம் கொண்டாடும் கவிதை மகள் கவிதை மகள்
(நான் பாடும்..)
நாதத்தோடு கீதம் உண்டாக
தாளத்தோடு பாதம் தள்ளாட
நாதத்தோடு கீதம் உண்டாக
தாளத்தோடு பாதம் தள்ளாட
வந்தால் பாடும் என் தமிழுக்குப் பெருமை
வாராதிருதாலோ தனிமை
வந்தால் பாடும் என் தமிழுக்குப் பெருமை
வாராதிருதாலோ தனிமை
அழகே உன் பின்னால் அன்னம் வரும் அன்னம் வரும்
(நான் பாடும்..)

# உங்கள் மாதப்பலன் எப்படி?

(கடந்த வார தொடர்ச்சி)

அழிவு வேலைகளோ வாழ்க்கையின் துன்பங்களோ இவர்களுக்குப் பிடிக்காது.

மற்றவர்களின் சண்டையைத் தீர்த்து வைப்பவர்களாகவும் சமாதானத்தைப் பரப்புபவர்களாகவும் இவர்கள் இருப்பார்கள்.

கடித்தத்திலோ கட்டுரையிலோ நஞ்சு கலந்த சொற்களைப் பயன்படுத்துவார்கள். ஆனால் எதிரிகள் தமது தவறை உணர்ந்து விட்டாலோ அன்பு காட்டவோ நடந்தவற்றை அடியோடு மறந்து விடுவார்கள்.

கடலின் அலைகளைப் போல் இவர்களுக்கு நண்பர்களும் ஒய்வதில்லை. எதிரிகளும் ஒய்வதில்லை.

இந்த மாதத்து ஆண்களும் பெண்களும் கவர்ச்சியாக இருப்பார்கள். மன உறுதியும் ஆசையும் அடக்க முடியாத அளவில் வாய்க்கும் போது இவர்கள் இந்தத் தன்மையினால் சில எதிர்பாராத பலன் அடைவார்கள்.

ஆசைக்கு அடிமை

எப்போதும் இவர்களுக்கு ஆசை வளருவது தான் சிறப்பு. இந்த ஆசை தான் இவர்களைப் பாதுகாக்கும். ஆசையின் விளைவாக மற்றவர்களைவிடச் சிறந்த பயனுள்ள செயல்களை இவர்களால் செய்ய முடியும்.

உலகத்தின் எண்ணங்களுக்கு இவர்கள் எப்போதும் மிகுந்த மதிப்புத் தருவார்கள். இதனால் இவர்களை அச்சுறுத்திப் பலர் பயனடைகிறார்கள் குறுக்கு வழியில்.

சுயநலத்தின் காரணமாக மற்றவர்கள் தமக்காக எல்லாவற்றையும் விட்டுக்கொடுக்க வேண்டும் என்று இவர்கள் எண்ணுவார்கள். ஆனால் வெற்றிபெற்றதும் தமக்காக தியாகம் செய்பவர்களுக்குப் பத்து மடங்கு அதிகமான உதவிகளைச் செய்யவும் காத்திருப்பார்கள். குடும்பத்தில் இவர்கள் இட்டதுதான் சட்டம். ஆனால் இவர்களுடைய கவர்ச்சியில் மயங்கும் பெண்கள் இவர்கள் சொல்லுறபடியெல்லாம் கேட்பார்கள். மனைவியை இவர்கள் துன்புறுத்தினாலும்கூட அதே மனைவி கணவனுக்காக உயிரையும் கொடுக்கத் துணிவாள்.

## ஒக்டோபர் 21-நவம்பர் 20ம் திகதிக்குள் பிறந்தவர்களுக்கான குண பலன்கள்

மற்றவர்களிடம் செல்வாக்குப் பெறும் சிறந்த சக்தி இவர்களிடம் உண்டு. மற்றவர்களுக்குத் தமது சக்தி முழுவதையும் செலவு செய்து உதவி செய்வார்கள். இதனால் மற்றவர்கள் குறைகளை இவர்கள் இயற்கையாகப் போக்கி விடுகிறார்கள். மற்றவர்களுக்காக எப்படிப்பட்ட ஆபத்தையும் சந்திப்பார்கள்.

மறைத்து வைத்திருக்கும் தமது ஆற்றலை எப்போதாவது வெளிப்படுத்துவதன் மூலம் சிறந்த கலைஞர்களாகப் புகழ் பெறுவார்கள். இயற்கையில் மாணவர்களாகவும் தத்துவ ஞானிகளாகவும் மற்றவர்களைப் பற்றி ஆராயும் தன்மையுள்ளவர்களாகவும் விளங்குவார்கள்.

இவர்களைப் புரிந்து கொண்டவர்கள் இவர்களை பாராட்டுவார்கள். ஆனால் இவர்களுள் பலர் மட்டமான செய்திகளுக்கு இலக்காவார்கள்.

இவர்களுக்கு எப்போதும் இரண்டு வகையான வருவாய் வந்தபடி இருக்கும். இளம் வயதில் நிறைந்த அளவில் துன்பங்களையும் தொல்லைகளையும் காணுவார்கள். அதன் விளைவாக அவர்கள் ஆசையும் உறுதியும் வளர்ந்து வெற்றியும் புகழும் அடைந்து மிகச் சிறப்புடன் வாழ்வார்கள்.

உடல் நிலை

சிறுவயதில் இவர்கள் மிக இளைத்தும் எடை குறைவாகவும் இருப்பார்கள். ஆனால் நடுத்தர வயதை அடைந்ததும் களைத்துப் படுத்து விடுவார்கள்.

சிறுநீர் பைகளும் பாதிக்கப்படலாம். பின்பு இதயமும் பாதிக்கப்படலாம். இவர்கள் அதிகமாக வேலைகளோ பயிற்சியோ செய்யக் கூடாது.

வண்ணங்கள்

இளஞ்சிவப்பு, இரத்தச் சிவப்பு, நீலம்

இந்த மாதத்தில் பிறந்த சிலர்

ரூஸ்வெல்ட், ஷீரோ (கைரேகை நிபுணர்), விவன்லே (பிரிட்டிஷ் நடிகை), மாண்ட்கோமாரி, ஜவஹர்லால் நேரு, இந்திராகாந்தி.

(தொடரும்)

# அற்புதம் செய்!

வேலணையூர் கவிஞர் தில்லைச்சிவன்
அவர்களின் நினைவுத் திதியை முன்னிட்டு
அவரால் எழுதப்பட்ட கவிதை இங்கு பிரசுரமாகின்றது.

பரிதி எழுந்தனன் விண்ணில் மணிச்சுடர்
பட்டு ஒளிக்குளம் ஆனதுபார்
முரசு அதிர்ந்தது செந்தமிழர் புலிக்
கூட்டம் விரையுது பேரணிக்கே
உரிமை உணர்வொடு சுதந்திரச் சங்கொலி
உள்ளம் கிறங்க ஊதுதடா!
அருமை மகனேஉன் ஆண்மை உணர்த்திஎம்
அன்னை தளைஅறத் துயிலெழடா!

முன்னர் மறத்தமிழ் மன்னர்கள் வாழ்ந்ததும்
முடிபுனைந்தின்நிலம் ஆண்டதும்மெய்
அந்நிய ருக்குஇடம் தந்து அடிமையாய்
ஆண்டுகள் பற்பல வாழ்ந்ததும்மெய்
கண்களை விற்றுச் சித்திரம் வாங்கிய
கபோதிக ளாகநாம் வீழ்ந்துவிட்டோம்
மண்ணைப் பிறர்கொள வாய்பொத்தி ஊமைபோல்
வாழுவதோ! துயில் எழுந்திடடா!!

நெறியை இழந்தவராட்சியில் நின்றிடும்
நெடுமரம் ஆகின னோதமிழன்?
கடிதினிற் சென்றறப் பேரணிநண்ணிடாக்
காளைஉடல் காவல்ஏன் எதற்கு?
அடிமையாய் பற்பலகாலங் கழித்ததால்
ஆண்மை யொழிந்ததோ வீரரெங்கள்
உரிமையும் இல்லையென்றாவதை நாமிங்கு
ஒப்புவதோ போர்புரி மகனே!

அன்னை எழுப்பவும் துயிலுவாயோ! முலை
அருந்திட்ட பாசம் மறந்தனையோ!
முன்னரே பாசறை நண்ணினள் உன்னிளம்
மோகக் கருவிழியா ளறிதி!
இன்னுந் துயில்வதேன் என்மகனே தமிழ்
இன்பம் பயில்வதை மறந்தனையோ?
பின்னர் வருவதை எண்ணிஎம் இன்தமிட்
பெட்பினை வாழ்த்திஉன் அற்புதம் செய்!

# அறிவிலாதவன்

அன்பான சங்குநாத வாசகர்களே! ஜிம்மிக்குட்டியின் இனிய ஞாயிறு வணக்கம் உரித்தாகட்டும். மழையும் இன்னும் ஓய்ந்தபாடில்லை. கரையோரப் பிரதேசங்கள் எங்கும் புயலபாயம் என்று அடிக்கடி கதைக்கினம் எண்டு பெரியவர் காலையிலேயே சொல்லிக் கொண்டு இருந்தவர். மார்கழி முதலாம் திகதி கொழும்பில புயல் வரும் எண்டு பஸ்காரர் கதைச்சவையாம். ஏதோ சனம் அழியாமல் இருந்தால்போதும். வாயு பகவானும் வருண பகவானும் கூடிக் கும்மியடிக்க சமுத்திரராசா ஊருக்குள்ளை வரப் போறன் எண்டு பொங்கி எழும்பி ஆர்ப்பாட்டம் போடுறார். ம்...ஏதோ நடக்கட்டும். பள்ளிப் பிள்ளையளும் சோதினையும் வருசா வருசம் நடக்கிற கும்மியடிப்புத்தானே.

கந்தையாண்ணை வேலையளை முடிச்சுப் போட்டுத் தேத்தண்ணி குடிக்கிறார். முத்தம்மாக்கா லாம்புகள் துடைச்சு மண்ணெண்ணெய் விட்டு வைக்கிறார். சிலவேளை லைற்றுப் போயிடும். எல்லாம் முன் யோசினைதானே. பிள்ளையள் பேச்சுப் போட்டிக்குப் பழகிப் போட்டு இப்பதான் போகினம். வழமைபோல பாலாண்ணை, பெரியவர், மகன், கங்கா ரீச்சர் எல்லாரும் இருக்கினம்.

“அறிவிலாதவன் போல அவைநடுவேவீற்றிருக்கும்...” எண்டு லதாக்குட்டி பேச்சுப் பாடமாக்கிறா... நல்ல குரல். நல்ல வடிவாப் பேசுவா. கங்கா ரீச்சர் பெரியவருக்கு பக்கத்திலை வந்து இருக்கிறா...

‘‘ஏன் தாத்தா நடுவர்களை அறிவில் ஆதவன் போல என்று காலம் முழுக்கச் சொல்லினம். ஆனால் சில பேர் “அறிவிலாதவன்” எண்டு நக்கலாக கேலி செய்யிறதும் நடக்குதுதானே. தமிழ் ஒரு அற்புதமான மொழிதான். அதிலை என்னதான் இல்லை”

பெரியவர் தலையாட்டிச் சிரிக்கிறார்.

‘‘கங்கா...திருவள்ளுவர் ‘‘புல்லறிவாண்மை’’ என்று ஒரு அதிகாரம் எழுதியிருக்கிறார். அதிலை அறிவிலிகள் பற்றி அருமையாச் சொல்லியிருக்கிறார். ஒரு செயலை இப்படிச் செய்க என்று பிறர் தூண்டினாலும் அறிவிலி கேட்கமாட்டான். தானும்அதைத் தெரிந்து முறையாகச் செய்ய மாட்டான். அப்படிப்பட்ட அறிவிலி அவனது உயிர் போகும் காலமளவும் இந்த உலகத்திற்கு தீராத நோய் போன்றவன். அதுமட்டுமல்ல அவன் தான் அறிந்ததையே பெரிதாக வணங்கிப் போற்றும் தன்மை கொண்டவனாயிருப்பதால் தானே அறிவாளி என்று எண்ணுவான். எனவே அறிவிலிக்கு அறிவுரை சொல்லுபவன், அவனால் அறிவற்றவன் ஆக்கப்படுவான். பிழையாகவே உள்வாங்கிப் பிழையாகவே பேசிப் பலர் நடுவே அசிங்கப்படுபவர்களை இந்த வகைக்குள் தான் சேர்க்க வேணும். இவையோடை முட்டுப்படுவதென்பது மிகத் துயரமான அனுபவம்தான்

கதவு திறக்குது. இராசம்மாக்கா வாறா...

“என்ன கந்தையாண்ணை ஆச்சியின்ரை மரத்துக்குப் பந்தம் கொளுத்தேல்லையே ...? விளக்கீடு எண்டால் ஐயா சால்வையையும் போர்த்திக் கொண்டு அங்கைதானே நிற்பார்’’

பெரியவர் மௌனமாகவே இருக்கிறார். கங்கா ரீச்சர் தான் வாயைத் திறக்கிறா...

‘‘இராசம்மாக்கா... பந்தம் கொளுத்திறதும் பந்தம் பிடிக்கிறதும் ஆத்தாதவன்ர வேலை. எப்பபா ஆலமரம் சாயும் எண்டு காத்துக்கொண்டு அண்டைக்குக் கதைச்சியள்...இப்ப பெரிய அக்கறையோடை கேக்கிறியள்...”

‘‘ஏன் சேர் மனித் தன்மையே இல்லாதவையைப் பற்றியும் வள்ளுவர் அந்த அதிகாரத்திலை சொல்லித் தானே இருக்கிறார். அதைப் பற்றியும் ஒருக்காச் சொல்லுங்கோ சேர்...”

“ஓம் பாலா அருமையான வரிகள்’’ மகன்.

“உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து அலகையா வைக்கப்படும்”

இந்தக் குறளின்ரை கருத்தைக் கேளுங்கோ மகன்... உலகிலுள்ள மக்கள் எல்லாரும் உண்டு என்று நிச்சயமாகச் சொல்லுவதை அறிவிலி இல்லை என்பான். எனவே அறிவில்லாதவன் என்பவன் மனித உருவில் உலவும் பேயாகவே கருதப்படுவான். பாத்தியளே திருவள்ளுவர் ஒரு தீர்க்கதரிசிதான். மனிதரை எப்பிடிப் படிச்சு வைச்சு எழுதியிருக்கிறார். ஒரு மனிதனுக்கு இல்லாமையுள் எல்லாம் மிகக் கொடியது அறிவு இல்லாமையே தான். வேறு எந்த செல்வம் இல்லாத நிலையும் இவ்வளவு மோசமான வறுமையாகாது. ம்... நித்திரை கொள்ளுறவையை எழுப்பலாம். நித்திரை கொள்ளுறது போல நடிக்கிறவையை எழுப்பவே ஏலாது. ம்...இலுப்பெண்ணெய்ப் பந்தம் ஒரு ஐஞ்சாறு எடுத்துக் கொண்டு வா கந்தையா. ஆச்சியடிக்குப் போட்டு வருவம்...”

சரிசரி இருளப் போகுது போட்டு வாறன். மழைக்கு முன்னம் திரும்ப வேணும். எல்லாரும் பாதுகாப்பா இருங்கோ...

பாரதி கணேஷ்
சுன்னாகம்

சினிமா செய்தி

## திரைவிமாசனங்கள்

# இந்திரஜித்



கௌதம் கார்த்திக் ஆரம்ப காலத்தில் தவறான படங்களின் தேர்வினால் மிகவும் தடுமாறினார். பின் அதை சுதாரித்துக்கொண்டு ரங்கூன், இவன் தந்திரன், ஹரஹர மஹாதேவகி என தொடர் ஹிட் படங்களை கொடுத்து தனக்கென்று ஒரு பெயரை சம்பாதித்து விட்டார். தற்போது இந்திரஜித் மூலம் அந்த பெயரை தக்க வைத்தாரா? பார்ப்போம்.

தமிழ் சினிமாவின் அட்வென்ஜர்ஸ் கதைகள் வருவது அரிதிலும் அரிது. ஹொலிவுட்டில்புதையலை தேடும் இண்டியானா ஜோன்ஸ் வகை படங்கள் பலவற்றை பார்த்திருப்போம். அதேபோல் தமிழில் எடுக்க முயற்சித்துள்ள படம் தான் இந்திரஜித்.

பல ஆயிரம் வருடங்களுக்கு முன் சூரியனில் இருந்து ஒரு துகள் வெடித்து பூமிக்கு வர, அதன் மூலம் எந்த விதமான வரண்ட நிலமும் செழிப்பாகின்றது.

அதை வைத்து மனிதர்களுக்கு நோயே இல்லாத வாழ்க்கையை உருவாக்கலாம் என்பதை சில விஞ்ஞானிகள் கண்டுபிடிக்க, அதை தொடர்ந்து அந்த கல்லை தேடி இரண்டு கூட்டம் கிளம்புகின்றது.

அதில் ஒரு கூட்டத்தில் கௌதம் கார்த்திக்கும் இருக்க, இறுதியில் அந்த கல் யார் கைக்கு கிடைத்தது என்பதே மீதிக்கதை.

கௌதம் கார்த்திக் தொடர்ந்து ஹிட் படங்களை கொடுத்து தனக்கென்று ஓரளவிற்கு நல்ல ரசிகர்கள் வட்டததை உருவாக்கி வருகின்றார்.

இந்த படம் அவர் தோற்றத்தை வைத்தே சொல்லிவிடலாம் ஒரு சில வருடங்களுக்கு முன்பு தொடங்கியது என்று. படம் நீண்ட நாட்களாக எடுத்து ரிலீஸாகாமல் இருந்தது படத்தின் காட்சிகளிலேயே தெரிகின்றது. ஹீரோயின் காட்சி பல இடங்களில் வெட்டி தூக்கியிருப்பார்கள் போல, ஆனால், அது படத்திற்கு பலம் தான்.

அதேபோல் கிராபிக்ஸ் காட்சிகள் முடிந்த அளவிற்கு சிறிய பட்ஜெட் என்றாலும் சிரத்தை எடுத்து செய்திருக்கிறார்கள், இந்த பட்ஜெட்டிற்கு இவ்வளவு ரிஸ்க் பாராட்டப்படவேண்டும்.

ஆனால், ஒரு கல், அதை தேடிச்செல்லும் கும்பல் என கதையாக கேட்கும் போது சுவாரசியம் மிகுந்ததாக இருக்கும். ஆனால் இந்த இந்திரஜித் திரைக்கதையாக கொஞ்சம் ஏமாற்றம் தான், ஒரு சில இடங்களில் ஏதோ டப்பிங் படம் தான் பார்க்கின்றோமோ என்று எண்ண வைக்கின்றது.

படத்தின் இசை கொஞ்சம் கொஞ்சம் இரைச்சலை ஏற்படுத்துகின்றது. அதை கவனித்திருக்கலாம், அதேபோல் படத்தில் அடர்ந்த காட்டில் பல விலங்குகளை காட்டி நம் எதிர்பார்ப்பை எகிற வைத்து கடைசியில் ஏமாற்றத்தை தான் கொடுக்கின்றனர்.

கதைக்களம் மற்றும் குறைந்த பட்ஜெட்டில் உருவாக்கப்பட்ட கிராபிக்ஸ் காட்சிகள் கதையை எடுத்த விதம், எந்த ஒரு இடத்திலும் ரசிகர்களுக்கு ஆச்சரியம் தரவில்லை.மொத்தத்தில் இந்திரஜித்தின் பயணம் கடுமை என்றாலும் சுவாரசியம் மிக குறைவு.







# அண்ணாதுரை

இப்போதெல்லாம் படங்களுக்கு கடும் போட்டி உண்டு. போட்டிக்கு நடுவிலும் சில படங்களுக்கு சற்று எதிர்பார்ப்பு உண்டு. நடிகர் என்பதால் மட்டுமல்ல நல்ல கதையாக இருக்கும் என்பதால் தான். அப்படியாக விஜய் ஆண்டனி நடிப்பில் வெளியாகியுள்ள படம் தான் அண்ணாதுரை. சரி இந்த துரை என்ன சொல்கிறார் என பார்க்க படத்திற்குள் போவோமா...

படத்தில் அண்ணாதுரை, தம்பிதுரையாக இருவரும் விஜய் ஆண்டனி தான். எளிமையான குடும்பம். அப்பா துணிக்கடை நடத்தி வருகிறார். அண்ணன் விஜய் ஆண்டனிக்கு பித்து பிடித்தது போல வேலையில்லாமல் குடியே குடி என இருப்பார். அவருக்கு ஒரு சோக பின்னணி இருக்கிறது.

தம்பி விஜய் பள்ளிக்கூடத்தில் வாத்தியார். உடனே சைத்தான் படத்தை நினைத்து விடாதீர்கள். இவர் வேறு துறையில் வாத்தியார். இவருக்கு ஒரு காதல் பின்னணி. டயானாவுடன் போகிற போக்கில் வந்த காதல் தான்.

பொலிஸ் பெண் ஒருவர் காம வக்ர புத்தி கொண்ட கயவர்கள் இடத்தில் மாட்டிக்கொள்கிறார். அவர்களிடம் இருந்து அப்பெண்ணை காப்பாற்றி வீடு சேர்க்கிறார். விஜய் ஆண்டனியின் அப்பா ஊரில் வியாபாரிகள் நல சங்க தலைவர்.
தன் நண்பன் காளி வெங்கட்க்காக கடன் வாங்கி கொடுத்து உதவி செய்ய போய் கந்து வட்டி கும்பலிடம் சிக்குகிறார். ஆனால் அந்த கும்பல் வேறு விதத்தில் காய் நகர்த்துகிறது. எதிர்பாராத விதமாக அண்ணா மீது கொலை பழி விழுகிறது.

இதற்கிடையே குடும்பத்திற்குள் சிக்கல், பொலிஸ் வலை வீச்சு, எதிர்பாராத சோகங்கள், தம்பியின் திருமணம் என எல்லாம் கேள்விக்குறியாகி இருக்கிறது. அண்ணன் விஜய் என்ன ஆனார், அவரின் குடும்பம் என்ன ஆனது. அண்ணாதுரை பித்தன் போல் இருப்பதன் பின்னணி என்ன என்பது தான் கதை.

விஜய் ஆண்டனியின் படங்கள் என்றால் மக்கள் மத்தியில் இடம் பிடிக்கும் என்ற நம்பிக்கை சினிமாவில் உள்ளது. கதையின் தாக்கம் நாட்கள் நகர்ந்தாலும் நிற்கும் என சொல்லலாம். அப்படியாக அவரின் பிச்சைக்காரன் இடம் பிடித்தது. இந்த அண்ணாதுரை அரசியல் படமாக இருக்கும் என செவி வழி செய்தியாக சொல்லப்பட்டது.

ஆனால் இப்படத்தில் எதிர்பாராத ட்விஸ்ட் வைத்திருக்கிறார். அவரின் நடிப்பு எப்போது எதார்த்தம் என்பதை இப்படமும் சொல்லியிருக்கிறது. படத்தில் நடிகர் காளி வெங்கட் உடன் இயல்பான காமெடி.

கதைக்குள் தான் காமெடி என்ற லாஜிக்கை சரியாக காண்பித்திருக்கிறார் இயக்குநர். அண்ணன் விஜய் ஆண்டனி மீது ஜீவல் மேரியின் காதல் காளி வெங்கட்க்கு ஷாக். ஏன் என்பதை படத்தில் பாருங்கள். ஓகே.

சில இடங்களில் தானாக சிரிப்பு வந்து விடும். தம்பியாகவும் அண்ணாகவும் இவர் டூயல் ரோலில் காண்பித்ததில் கூர்மையாக கவனித்தால் தான் வித்தியாசம் புரியும் என சொல்லுமளவுக்கு நடித்திருக்கிறார்.

விஜய் ஆண்டனியின் படத்தில் வரும் ஹீரோயின்கள் எங்கிருந்தாவது வருவார்கள் என்பது போல இங்கே வந்திருக்கும் தியானா தன்னுடைய ரோலை சரியாக அவருக்கு ஈடு கொடுத்திருக்கிறார்.

படத்தில் ஸ்டோரிக்கேற்ற பிஜிஎம். ஜி.எஸ்.டி டூயட் பாடல் என சில விடயங்கள் நினைவில் நிற்கும். முன் பாதி மெதுவாக நகர்ந்தாலும் இரண்டாம் பாதி ஜூட் ஆகிறது. விஜய் ஆண்டனியின் ரியாக்‌ஷன் இரண்டு ரோலிலும் குட். நூலிழையில் தான் வித்தியாசம்.

கதையை தேர்வு செய்த விதம் ஓகே. அவருக்கான படம் இது என நினைவூட்டுகிறார். இயக்குநர்கள் காட்சிகளை கனெக்ட் செய்தவிதம் ஓகே. டுவிஸ்ட் ரிவீல் ஒர்க்கவுட் செட்டானது. அண்ணன் விஜயை காண்பித்திருக்கும் போது திடீரென தம்பிக்கு இண்ட்ரோ கொடுப்பது மிஸ் மேட்சிங்.

முதல் பாதி மென்மையாக போய் மெதுவாக இண்டர்மிஷன் கொடுப்பது சம்திங் டிஃப்ரண்ட். படத்தை இன்னும் கொஞ்சம் கிரிஷ்ப் ஆக்கியிருக்கலாம். பாடல்கள், காமெடி என கூடுதல் கவனம் இல்லை. மொத்தத்தில் அண்ணாதுரை அனைவருக்கும் பிடிக்கும். பார்க்கலாம்.

# பிற நாடுகளின் உள் விவகாரங்களில் அதிகரிக்கும் சீனாவின் தலையீடுகள்

அமெரிக்க முறைமையிலான தலையீட்டை சீனா பாரம்பரியமாக மறுத்து வந்துள்ள போதிலும் மியன்மார், சிம்பாவே போன்ற நாடுகளில் சீனா தனது ஆழமான பொருளாதாரத் தலையீட்டைக் காண்பிப்பதானது சீனாவை மேலும் உறுதியான பூகோளப் பங்களிப்பை நோக்கி இழுத்துச் செல்வதாக ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

சீனாவின் வெளிநாட்டுக் கோட்பாடானது 'ஏனைய நாடுகளின் உள் விவகாரங்களில் தலையீடு செய்யாத' கொள்கையை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

சீனாவின் வெளிநாட்டுக் கோட்பாடானது உலகின் மிகப் பெரிய இராணுவத்தைக் கொண்டிருப்பதற்கும் உலகின் இரண்டாவது மிகப் பாரிய பொருளாதாரத்தைக் கொண்டிருப்பதற்கும் காரணமாகவுள்ளது.

அண்மையில் சீனாவின் இராஜதந்திர நடவடிக்கையில் மாற்றம் ஏற்படுவதற்கும் இது உறுதுணையாகவுள்ளது.

குறிப்பாக மியன்மாரிலிருந்து பங்களாதேஷ் வரையான எல்லைப் புறங்களில் வாழும் முஸ்லிம் அகதிகள் தொடர்பான நெருக்கடியைத் தீர்ப்பதற்கான ஒரு மூலோபாயத்தை அமுல்படுத்துவதற்கு சீனா அசாதாரண நகர்வொன்றை அண்மையில் முன்னெடுத்தது.

சிரியா மற்றும் இஸ்ரேலிய-பாலஸ்தீனிய விவகாரங்களில் சீனா பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கு பிராந்தியத்தில் சீனா தன்னை நிலை நிறுத்தியது. சீனாவின் இந்த நகர்வானது பெற்றோலிய வளத்தைப் பெற்றுக் கொள்ளும் மத்திய கிழக்குத் தொடர்பான சீனாவின் கோட்பாட்டு மாற்றமாக நோக்கப்படுகிறது.


சீனா மிக விரைவில் உலக நாடுகளின் விவகாரங்களில் தலையீடு செய்யும் என எதிர்பார்க்கப்படுவதாக லண்டனிலுள்ள கிங்க்ஸ் கல்லூரியின் லவோ சீனா நிறுவகத்தின் இயக்குநர் கெரி பிறவுன் தெரிவித்துள்ளார்.


ஆசியா மற்றும் ஐரோப்பாவிற்கு இடையிலான புராதன வர்த்தகப் பாதைகளை பாரிய தொடருந்து மற்றும் கரையோர வலைப்பின்னலின் ஊடாக இணைக்கும் நோக்கில் சீனாவால் ஒரு ட்ரில்லியன் டொலர் பெறுமதியான ஒரு பாதை ஒரு அணை என்கின்ற கட்டுமானத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் சீனா வெளிநாடுகளில் தனது தலையீட்டை அதிகரிக்கத் தொடங்கியது.

சீனா தனது வெளிநாட்டு முதலீடுகளை மேலும் விரிவுபடுத்தும் போது இந்த முதலீடுகளை எவ்வாறு பாதுகாப்பது என்கின்ற கேள்வியையும் கருத்திற் கொண்டே சீனா செயற்படுவதாக சீனாவின் அரசியல் விமர்சகரான சென் டயோயின் தெரிவித்தார்.

சீன இராணுவத்தை முதல் தரம் மிக்க இராணுவமாக மாற்றுவதுடன் சீனாவை பூகோளத்தின் வல்லாதிக்கம் மிக்க நாடாக மாற்றும் இலக்கைக் கொண்டுள்ளதாக கடந்த மாதம் இடம்பெற்ற கம்யூனிச கட்சியின் மாநாட்டின் போது சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் தெரிவித்தார்.

அனைத்துலக ஒழுங்கை நிலை





நாட்டுவதாகவும் சீன ஜனாதிபதி தெரிவித்திருந்தார். அத்துடன் அமெரிக்காவைப் போல் சீனாவும் பல்வேறு முதன்மைப் பணிகளில் ஈடுபடுவதாகவும் இவர் உறுதிப்படுத்தியிருந்தார்.

சீனாவானது வெளிப்படையாக தனது தலையிடாக் கொள்கையை நிராகரிக்காத போதிலும், உலக நாடுகளின் விவகாரங்களில் நடுநிலையுடன் கூடிய தலையீட்டை சீனா விரும்புவதாகவும் அரசியல் விமர்சகர் சென் தெரிவித்தார்.

'சீனாவின் தேசிய நலன்கள் வெளிநாடுகளில் பாதிப்படைந்தாலும் கூட, தனது முதலீட்டையும் புலம்பெயர்ந்துள்ள தனது குடிமக்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பை சீனா கொண்டுள்ளது' என சென் தெரிவித்தார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் டிஜிபோற்றியில் சீனா தனது முதலாவது வெளிநாட்டு இராணுவத் தளத்தை உருவாக்கியதன் மூலம் உலக அரங்கில் சீனா தனது இராணுவப் பலத்தையும் பலப்படுத்தத் தொடங்கியுள்ளது. அத்துடன் சர்ச்சைகள் நிறைந்த தென் சீனக் கடலில் சீனா இராணுவ மயப்படுத்தப்பட்ட தீவுகளை அமைத்து வருகிறது.

சீனா நேரடி இராணுவத் தலையீட்டை இன்னமும் மேற்கொள்ளாவிட்டாலும் கூட, சீனாவானது தார்மீக அரசியலைக் கடைப்பிடிக்க விரும்புகின்ற போதிலும் வெளிநாடுகளின் அரசியலிற்குள் சிக்க வேண்டிய நிலை காணப்படுகிறது.

சிம்பாவேயின் இராணுவப் படையினர் தமது நாட்டை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு சில நாட்களின் முன்னர் சிம்பாவேயின் இராணுவத் தளபதி ஜெனரல் கொன்ஸ்ரன்ரைன் சிவென்க சீனாவிற்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்தமையானது சிம்பாவே இராணுவத்தின் தீர்மானத்தில் சீனா பங்களிப்புச் செய்துள்ளது என்கின்ற சந்தேகத்தை ஏற்படுத்தியது.

றொபேர்ட் முகாபேயுடன் சீனாவானது நீண்ட கால உறவைப் பேணி வருவதுடன் இந்த நாட்டைப் பாதுகாப்பதற்காக கணிசமான முதலீடுகளையும் மேற்கொண்டுள்ளது. கம்போடியாவில் சீனா பாரிய வெளிநாட்டு முதலீட்டை மேற்கொண்டது. 2016 முடிவில் சீனாவால் கம்போடியாவில் 11.2 பில்லியன் டொலர் முதலீடு மேற்கொள்ளப்பட்டது.

மனநாயகம் மற்றும் ஜனநாயக நகர்வுகளை இல்லாதொழிக்கின்ற அரசியல் நகர்வுகளில் சீனப் பிரதமர் ஹூன் சென் ஈடுபடுவதற்கு சீனாவின் முதலீடுகளில் தங்கியுள்ள வறுமைக் கோட்டிற்குட்பட்ட நாடுகள் உந்துதல் அளிப்பதாக அமெரிக்காவைத் தளமாகக் கொண்டியங்கும் ஸ்ரிம்சன் மையத்தின் தென்கிழக்காசிய நிகழ்ச்சித் திட்டத்தின் இயக்குநர் பிரியன் ஐலர் தெரிவித்துள்ளார்.

சீனாவானது கம்போடியா மீது பொருளாதாரச் செல்வாக்கைத் தொடர்ந்தும் செலுத்துவதால் கம்போடியா எந்தவொரு எதிர்க்கட்சியுமின்றி அதிகாரத்துவ நாடாகவே விளங்கும் என பிரியன் ஐலர் மேலும் குறிப்பிட்டார். மியன்மாரின் றக்கினே மாநிலத்தைச் சேர்ந்த சிறுபான்மை ரோஹிஞ்யா முஸ்லிம்கள் மீது தொடரப்படும் யுத்தத்தால் மியன்மார் உலக நாடுகளின் சீற்றத்திற்கு ஆளாகியுள்ளது.

ரோஹிஞ்யா முஸ்லிம்கள் மீதான யுத்தத்தை ஐக்கிய நாடுகள் சபை 'இனச்சுத்திகரிப்பு' என அறிவித்துள்ளது. இவ்வாறான இனச்சுத்திகரிப்பு இடம்பெறுகின்ற போதிலும் சீனாவிடமிருந்து மியன்மார் தொடர்ந்தும் பொருளாதார உதவிகளைப் பெற்று வருகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் 2.45 பில்லியன் டொலர் பெறுமதியான குழாய் சீனாவால் மியன்மாரில் திறந்து வைக்கப்பட்டது. இதுமட்டுமல்லாது மியன்மாரின் துறைமுகங்கள், பெற்றோலிய மற்றும் எரிவாயுத் திட்டங்களுக்காக சீனா அதிகளவில் முதலீடு செய்துள்ளது.

மியன்மாரில் வன்முறைகளை முடிவிற்குக் கொண்டு வருவதற்கான ஐ.நா பாதுகாப்புச் சபையின் தீர்மான வரைபிற்கு சீனா மிகப் பலத்த எதிர்ப்பைக் காண்பித்ததால் இது இம்மாதத்தின் ஆரம்பத்தில் கைவிடப்பட்டது.

இதற்குப் பதிலாக மியன்மாரில் போர்நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்கும் அகதிகளை மீளவும் நாட்டிற்கு அழைப்பதற்கும் வறுமையை ஒழிப்பதற்குமான திட்டப் பரிந்துரை ஒன்றை சீனா, ஐ.நா பாதுகாப்புச் சபையிடம் கையளித்தது.

'தற்போது அனைத்து விடயங்களும் சீனாவுடன் தொடர்புபடுகிறது. அதாவது சிம்பாவே, பர்மா, இலங்கை, நியூசிலாந்தின் அரசியல் விவகாரங்கள் என அனைத்திலும் சீனா தலையீடு செய்கிறது. இது சீனாவின் வெளியுறவுக் கோட்பாடு தொடர்பில் ஏற்பட்ட அசாதாரண மாற்றமாகும்' என பிறவுன் குறிப்பிட்டார்.

'சீனாவின் தலையீடற்ற கொள்கையானது தற்போது சாத்தியமற்ற ஒன்றாக மாறி வருகிறது. சீனா உலக நாடுகளின் உள்விவகாரங்களில் தலையீடு செய்யாது தனித்துச் செயற்பட வேண்டும் என ஒதுங்கினாலும் கூட, பிரச்சினைகள் சீனாவைத் தேடிச் செல்லும் நிலை காணப்படுவதால் இதனை சீனா தீர்க்க வேண்டிய நிலையிலுள்ளது' என இயக்குநர் கெரி பிறவுன் குறிப்பிட்டுள்ளார்.

மூலம் – AFP
மொழியாக்கம் : நித்தியபாரதி

facebook

# தேவதை கொடுத்த பரிசு

நெல்லிக்குப்பம் என்ற கிராமத்தில் இரண்டு மீனவர்கள் நண்பர்களாக இருந்தனர். ஒரு நண்பரின் பெயர் ஜெகதீஸ் மற்றவன் பெயர் பிரகாஷ். இருவரும் தினமும் காலை நேரத்தில் கட்டு மரத்தில் ஏறி, மீன் பிடிக்கச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

ஒருநாள் காலை நேரத்தில் இருவரும் வழக்கம் போல் மீன் பிடிக்கச் சென்றனர்.

அன்றைய தினம் மாலை நேரம் ஆகியும் கூட இருவர் வலையிலும் போதுமான மீன்கள் சிக்கவில்லை. மிகக் குறைந்த அளவிலேயே மீன்கள் மாட்டின. கரையை அடைந்த இருவரும் தங்களுக்குக் கிடைத்த மீனைப் பங்கிட்டுப் பார்த்தனர்.

நண்பனே, இந்த மீன்களை விற்று அதில் கிடைக்கும் பணத்தில் நம் இருவர் குடும்பத்திற்கும் போதிய உணவுப் பொருட்களை வாங்கிச் சமைப்பது கடினம். அதனால், மீன் விற்றுக் கிடைக்கும் பணத்தினை நம்மில் ஒருவரே எடுத்துக் கொள்ளலாம், என்றான் பிரகாஷ்.

அப்படியானால் நீயே எடுத்துக்கொள். நீதான் மனைவி, மக்களோடு இருக்கிறாய். உன் குடும்பத்தை வறுமையில் வாடவிடாதே.... நீயே எடுத்துக்கொள் என்றான் ஜெகதீஸ்.

இல்லை நண்பனே. உன் குடும்பத்தில் இரண்டு நபர்கள் அதிகமாக இருக்கின்றனர். அதனால் நீதான் எடுத்துக் கொள்ள வேண்டும், என்றான் பிரகாஷ்.

இல்லை நண்பனே. இல்லை கண்டிப்பாக நீதான் எடுத்துக் கொள்ள வேண்டும். உன் குடும்பத்தை வறுமையில் தவிக்க நான் என்றுமே விடமாட்டேன், என்று அழுத்தமாகக் கூறினான் ஜெகதீஸ்.

பிரகாஷும், ஜெகதீஸும் ஒருவரையொருவர் இவ்வாறு விட்டுக்கொடுக்காமல், தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

அந்த நேரத்தில் திடீரென சத்தம் கேட்டது. இருவரும் திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தனர். அங்கே கடற்கரையில் ஓர் அழகிய பெண் நடந்து வந்து கொண்டிருந்தாள்.

அந்தப் பெண்ணைப் பார்த்த மாத்திரத்தில் இருவரும் திகைப்புடன் வாயடைத்துப் போயினர். அந்தப் பெண் தேவதை போன்று காட்சி தந்தாள். அந்தப் பெண்ணின் முகத்தை இருவரும் உற்றுப் பார்த்தனர்.



மீனவர்களே, என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்! நான்தான் இந்தக் கடலில் வசிக்கிற கடல் தேவதை. நீங்கள் இருவரும் ஏதோ வழக்கு நடத்திக் கொண்டிருப்பது போன்று தெரிகிறது. அது என்னவென்று அறிந்து கொள்ள வேண்டியே உங்கள் அருகில் வந்தேன், என்றாள் கடல் தேவதை.

தேவதையே! உன்னை சந்தித்ததில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். நாங்கள் இருவரும் பிடிக்கிற மீன்களை பங்கு போட்டுக் கொள்வோம். இப்போது எங்களுக்குக் குறைந்த அளவே மீன்கள் கிடைத்துள்ளன. என் குடும்பம் வறுமையில் வாடும், அதனால் மீன்களை எடுத்துக்கொள் என்கிறான் என் நண்பன்.

என் குடும்பத்தைப் பற்றி எனக்கு கவலையில்லை. ஆனால், அவன் குடும்பம் வறுமையில் வாடக்கூடாது என்பதற்காகத்தான் எல்லா மீன்களையும் விற்று கிடைக்கிற பணத்தை என் நண்பன் எடுத்துக்கொள்ளட்டும் என்று சொல்கிறேன். என் நண்பனோ, அதனை மறுத்து என்னை எடுத்துக்கொள்ளும்படியாகச் சொல்கிறான். நீயே அவனுக்கு எடுத்துக் கூறி அவன் குடும்பத்தை வறுமையில் இருந்து காப்பாற்று! என்றான் பிரகாஷ்.

கடல் தேவதையோ சிரித்தபடியே இருவரையும் நோக்கியது.

நீங்கள் இருவரும் ஒற்றுமையுடன் ஒருவரை ஒருவர் விட்டுக் கொடுக்காமல் உங்கள் குடும்ப நலன் கருதியே பேசிக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் குடும்பத் தின் மீதும் நீங்கள் வைத்திருக்கும் அன்பும், உங்கள் நல்லெண்ணமும் என்னை மிகவும் கவர்ந்து விட்டது. அதனால் உங்கள் இருவருக்கும் உதவி புரியவே வந்துள்ளேன், என்றது கடல் தேவதை.

பிறகு, பிரகாஷ் முன்பும், ஜெகதீஸ் முன்பும் இரண்டு மூட்டைகள் தோன்றின. கடல் தேவதையும் அங்கிருந்து மறைந்தாள்.

இருவரும் அந்த மூட்டைகளைப் பிரித்துப் பார்த்தனர். அந்த மூட்டைகளில் நிறையப் பொற்காசுகள் காணப்பட்டன.

இருவருமே அதனை தங்கள் ஒற்றுமைக்குக் கிடைத்த பரிசாகவே நினைத்துக்கொண்டனர். அதைக் கொண்டு பெரிய பணக்காரர்கள் ஆயினர்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1267




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




# எமக்கு எவ்வளவு நேர நித்திரை அவசியம்



அமைதியான நித்திரை ஒரு சுகமான அனுபவம். நித்திரைக் குறைவும் அளவுக்கு அதிகமான நித்திரையும் பல நோய்களுக்கு வித்திடும். நாம் எவ்வளவு நேரம் நித்திரை செய்ய வேண்டும் என்பதை அறிந்திருப்பது பயனுடையதாக அமையும். இது சம்பந்தமாக பல ஆய்வுகள் பல மட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இதன் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு தேசிய தூக்க நிறுவன வல்லுநர்கள் பின்வரும் முடிவுகளை அறிவித்திருக்கிறார்கள்.

- பிறந்த குழந்தைகள் (முதல் மூன்று மாதங்கள் வரை): புதிதாக பிறந்த குழந்தைகள் நாளொன்றுக்கு 14லிருந்து 17மணிநேரம் வரை தூங்க வேண்டும்.
- குழந்தைகள் (4-முதல் 11மாதம் வரை): தினசரி 12லிருந்து 15மணி நேரங்கள் வரை தூங்க வேண்டும்.
- தளிர்நடை பயிலும் குழந்தைகள் (1லிருந்து 2வயது வரை): தினமும் 11 லிருந்து 14மணி நேரங்கள் வரை தூங்க வேண்டும்.
- பள்ளி செல்லும் முன் வயதுக் குழந்தைகள் (3லிருந்து 5வயது வரை):தினமும் 10லிருந்து 13மணி நேரங்கள்.
- பள்ளி செல்லும் வயது சிறார்கள் (6லிருந்து 13வயது வரை): ஒன்பது மணி நேரத்திலிருந்து 11மணிநேரம் வரை தினமும் தூங்க வேண்டும்.
- பதின் பருவச் சிறார்கள் (14முதல்17வயது வரை): பரிந்துரைக்கப்பட்ட தூக்க நேரம் என்பது 8லிருந்து 10 மணிநேரம் வரை தான். இந்த வயது சிறார்கள் தினமும் 11 மணி நேரங்களுக்கு மேலாகவோ அல்லது 7மணிநேரங்களுக்கு குறைவாகத் தூங்குவது தவறு என்று எச்சரிக்கிறது இந்த நிறுவனம்.
- வயது வந்த இளைஞர்கள் (18லிருந்து 25வயது வரை): தினமும் 7லிருந்து 9மணி நேரங்கள் வரை தூங்கலாம் என்று பரிந்துரைக்கப்படுகிறது. ஆனால் தூக்கம் 6மணி நேரத்துக்குக் குறைவானதாகவோ அல்லது 11 மணி நேரங்களுக்கு மேலோ போகக்கூடாது.
- வயது வந்தவர்கள் (26லிருந்து 64வயது வரை): தினமும் 7லிருந்து 9மணி நேரங்கள் வரை தூங்கலாம் என்று பரிந்துரைக்கப்படுகிறது.

ஆனால் தூக்கம் 6மணி நேரத்துக்குக் குறைவானதாகவோ அல்லது 11 மணி நேரங்களுக்கு மேலோ போகக்கூடாது.

- மற்ற வயது வந்தவர்கள் (65வயது அதற்கு மேல்) ஆரோக்கியமான தூக்கம் என்பது தினசரி7லிருந்து 8மணி நேரம் வரை ஆனால் ஐந்து மணி நேரத்துக்கு குறைவாகவோ அல்லது 9மணிநேரத்துக்கு மேலோ போகக்கூடாது.
- தூக்கத்தின் தரத்தை மேம்படுத்த பல்வேறு பரிந்துரைகளை வல்லுநர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.
- தூங்கும் நேரம் ஒரு குறிப்பிட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட நேரத்தில் அமைய வேண்டும்.
- படுக்கும் நேரத்தில் மனதை அமைதிப்படுத்தும் சில நடைமுறைகள் செய்ய முடியும்.
- தினசரி உடற்பயிற்சி அமைதியான நித்திரைக்கு வழி சமைக்கும்.
- படுக்கையறையில் சரியான வெப்பநிலை; ஒலி மற்றும் ஒளிஅளவு காற்றோட்டம் என்பன பேணப்பட வேண்டும்.
- சௌகரியமான படுக்கை மற்றும் தலையணைகள் அவசியமானதாகும்.
- மது மற்றும் காபி என்பவற்றை தவிர்ப்பது நல்லது.
- மின்னணுவியல் கருவிகள் படுக்கப்போகுமுன் அணைக்கப்பட வேண்டும்.
- அளவாக அமைதியாக உறங்கி ஆரோக்கியத்தை காப்போம்.





Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்.

# வீட்டுக்கொரு செவ்விளநீர் மரம் நாட்டுவோம்


- செயற்கையான மென்பானங்களைத் தவிர்ப்போம். நீரிழிவு மற்றும் வேறு தொற்றா நோய்களுக்கு இவை காரணமாக அமைகின்றன.
- இயற்கையான ஆரோக்கியமான உணவுவகைகளுக்கு எமது இளம் சிறார்களை பழக்கப்படுத்துவோம்.
- செவ்விளநீர் இயற்கையான ஊட்டச்சத்து நிறைந்த பானமாகும்.
- இவற்றை வீடுதோறும் நாட்டுவதால் ஆரோக்கியமான, இயற்கையான பானமான இளநீர், ஊட்டச்சத்து மிக்க வழுக்கல் என்பவற்றை பெற்றுக்கொள்வதுடன் சுற்றாடலை அழகாகவும் குளிர்ச்சியாகவும் வைத்திருக்கலாம்.





- 355 ml செவ்விளநீரில் 60 கிலோகலோரி சக்தியும் மற்றும் விற்றமின்கள், கனியுப்புக்கள் போன்றனவும் காணப்படுகின்றன.
- தென்னை மரங்களும், செவ்விளநீர் மரங்களும் எமது கலாசார விழுமியங்களான தேங்காய் உடைத்தல், கும்பம் வைத்தல், தோரணம் கட்டுதல், சிடுகு வேலி, இளநீர்வெட்டல் போன்றவற்றுடன்பின்னிப்பிணைந்துள்ளன.
- எனவே இவற்றை நாட்டுவதால் எமது கலாசார விழுமியங்களையும் பேணிப் பாதுகாக்கலாம்.

யாழ் மருத்துவக்குழு



**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**